REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN
தினகரன்

2021 ஏப்ரல் 12 திங்கட்கிழமை

89
1932 - 2021

வரு. 89 இல. 87 | April 12,Monday, 2021 | 20பக்கங்கள் | 30/-

## சந்தையில் விற்பனையாகும் தேங்காய் எண்ணெய்; மக்கள் வீண் அச்சம் கொள்ளத் தேவையில்லை

லோரன்ஸ் செல்வநாயகம்

சந்தையில் தற்போது விற்பனையில் உள்ள தேங்காய் எண்ணெயை அச்சமின்றி பயன்படுத்துமாறு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளார். உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் இரசாயனம் அடங்கிய தேங்காய்

06




மியன்மாரில் 80 போராட்டக்காரர் சுட்டுக்கொலை 02



திருநெல்வேலி சந்தை மீள திறப்பு 11



இயந்திரங்களும் தொழிலாளர்களின் நிலையும் 09



யாழ். வீரர் புவிதரனுக்கு முதலிடம் 20

## இஸ்லாமிய அடிப்படைவாத சவால்களுக்கு அரசாங்கம் பொறுப்புடன் முகங்கொடுப்பு

### வெற்றி கொள்ள தேவையான நடவடிக்கை –அமைச்சர் விமல்



இஸ்லாமிய அடிப்படைவாதத்தினால் ஏற்பட்டுள்ள சவால்களை வெற்றிகொள்ள அரசாங்கம் பொறுப்புடன் செயற்படுகிறது.

அரசாங்கத்தின் இலக்கை திசை திருப்ப பல குற்றச்சாட்டுக்கள் அரசாங்கத்துக்கு எதிராக முன்வைக்கப்படுகின்றன என கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார். அநுராதபுரத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஆட்சியதிகாரத்தை கைப்பற்றி குறுகிய காலத்தில் அரசாங்கம் பல சவால்களை எதிர் கொண்டுள்ளது. இஸ்லாமிய அடிப்படைவாதத்தினால் ஏற்பட்ட சவால்களை அரசாங்கம் சிறந்த முறையில் வெற்றி கொண்டுள்ளது.

06

## இன்றும் நாளையும்

## அரசின் 5000 ரூபா கொடுப்பனவுகள்



சமுர்த்தி பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக புத்தாண்டை முன்னிட்டு 5,000 ரூபாய் நிவாரண கொடுப்பனவை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்நிலையில்,

06

## புனித ரமழான் தலைப்பிறை தீர்மானிக்கும் மாநாடு இன்று



ஹிஜ்ரி 1442 ஆம் ஆண்டுக்கான புனித ரமழான் மாத தலைப்பிறையைத் தீர்மானிக்கும் மாநாடு இன்று (12) நடைபெறவுள்ளது. புனித ரமழான் மாதத்திற்கான தலைப்பிறையை தீர்மானிக்கும் மாநாடு இன்று திங்கட்கிழமை மஃரிப் தொழுகையின் பின்னர் இடம்பெறவுள்ளதாக கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது. கொழும்பு பெரிய பள்ளிவாசல் பிறைக்குழு உறுப்பினர்கள், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா, முஸ்லிம் சமய

06

## பண்டிகை காலத்தில் கடுமையான சுகாதாரவிதிமுறை ;

# மீறுவோர் மீது கடும் நடவடிக்கை

### இராணுவ தளபதியும், பொலிஸ் பேச்சாளரும் கூட்டாக தெரிவிப்பு

முகக்கவசம் அணிதலும்
சமூக இடைவெளியை
பேணலும் மிக அவசியம்



சித்திரைப் புத்தாண்டு காலப்பகுதியில் சுகாதார ஆலோசனைகளை முறையாக பின்பற்றுமாறு இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா மற்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன ஆகியோர் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சுகாதார வழிமுறைகளை உரிய வகையில் பின்பற்றாவிடின் மிகுந்த சவாலுக்கு மத்தியில் கொவிட் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொண்ட முயற்சிகள் பயனளிக்காமல் போய்விடும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

06



கொழும்பு வெள்ளவத்தை மயூரா பிளேஸ் ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய மகா கும்பாபிஷேக விழாவினை தொடர்ந்து நடைபெறும் விஷேட பூஜை வழிபாடுகளில் விளையாட்டுதுறை அமைச்சர் நாமல் ராஜபக்ச தனது பாரியாருடன் கலந்து கொண்ட போது எடுத்த படம். (படம் : கொழும்பு வடக்கு நிருபர்)



## யாழ். மேயரின் கைது மக்களது கவனத்தை திசை திருப்பவாம்

03

## அமைச்சர் தினேஷுடன் அமெரிக்க தூதுவர்

### நேரில் சந்தித்து பேச்சு



இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன மற்றும் அமெரிக்க தூதுவர் அலெய்னா டெப்லிடஸ் ஆகியோர் நேரில்

06

## மைத்திரியும் சகாக்களும் என்மீது விமர்சனங்கள்

### வெட்கித்தலை குனிய வேண்டியது அவர்களே



உண்மையை உரத்துச் சொன்னதால் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அவரது சகாக்களும் என்னை விமர்சிக்கலாம். ஆனால், அவர்கள் அனைவரும் வெட்கித் தலைகுனியவேண்டியவர்கள் என்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார். ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையின் பரிந்துரையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

06

## மாநகரை தூய்மையாக்கும் எனது பயணம் தொடரும்

### விடுவிப்புக்கு குரல் கொடுத்தோருக்கு நன்றி – மணி

(சுமித்தி தங்கராசா)



யாழ். மாநகரை தூய்மையாக பேணும் ஒரு நன்நோக்கில் எம்மால் முன்னெடுக்கப்பட்ட முன்மாதிரியான நடவடிக்கை தொடர்பில் தவறான வியாக்கியானம் செய்து என்னை பொலிஸார் கைது செய்தபோது எனக்காக குரல் கொடுத்த அத்தனை

06

## கோழி இறைச்சியின் விலை நிர்ணயம்

### ஒரு கிலோவின் விலை 600 ரூபா

(லோரன்ஸ் செல்வநாயகம்)



ஒரு கிலோ கோழி இறைச்சிக்கான அதிக பட்ச சில்லறை விலையை 600 ரூபாவாக நிர்ணயிப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. கூட்டுறவு, விற்பனை அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சில்

06

### மாகாண சபைத்தேர்தல்

## இவ்வருடம் நடத்த வாய்ப்புகள் குறைவு

இவ்வருட இறுதிக்குள் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாக அரசாங்கம் அறிவித்துள்ள போதும் அதற்கான வாய்ப்பில்லை என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். அநுராதபுரத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்த போதே அவர் இவ்வாறு கூறினார். இதன்போது மேலும் பதிலளித்த அவர், முதலில் மாகாண சபைத் தேர்தலை நடத்த புதிய தேர்தல் முறை அடங்கிய திருத்தச் சட்டம் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட வேண்டும்.

06

### KKS சீமெந்து தொழிற்சாலையின்

## இரும்புகளை இரகசியமாக விற்க சிலர் தீவிர முயற்சி

### ஆலையின் OIC விமலநாதன் குற்றச்சாட்டு



காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் உள்ள பல கோடி ரூபா பெறுமதியான இரும்புகளை உரிய கேள்வி கோரல் ஏதும் இன்றி இரகசியமாக தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களுக்கு விற்பதற்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக காங்கேசன்துறை லங்கா சீமெந்து தொழிற்சாலை பொறுப்பு உத்தியோகத்தர் பொன்னையா விமலநாதன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

06

## வில்பத்து காடழிப்பு தீர்ப்புக்கு எதிராக உச்ச நீதிமன்றில் வழக்கு

### வெற்றி கிடைக்குமென – ரிஷாட் MP நம்பிக்கை



வில்பத்து காடழிப்பு தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக, உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அந்தத் தீர்ப்பில் வெற்றி கிடைக்கும் என நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் மக்கள் காங்கிரஸ் தலைவரும்

06

### சகல அரச, தனியார்

## வங்கிகள் இன்று திறந்திருக்கும்

சகல அரச மற்றும் தனியார் வங்கிகளும் இன்றைய தினம் திறக்கப்படும் என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. பொதுமக்களின் நலனை கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது. எவ்வாறாயினும், சித்திரை புத்தாண்டை முன்னிட்டு இன்றைய தினம் விசேட அரச விடுமுறையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### தொழிலாளர் சட்டங்களை பேணி பாதுகாக்க

## மலையகத்தில் புதியதொரு தொழிற்சங்கம் உதயம்

ஹட்டன் விசேட நிருபர்.




சர்வதேச மட்டத்தில் இலங்கை அரசாங்கம் இலங்கை அரசியல் யாப்புக்கு அமைவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழிலாளர் உரிமைகளையும் நலன்களையும் சட்டதிட்டங்களையும் பாதுகாப்பதற்காக மலையகத்தில் புதிய தொழிற்சங்கம்

06

## வயற்காணிக்குள் குடைசாய்ந்த வான்



மட்டக்களப்பு கொழும்பு பிரதான வீதியில் கடவத்தமடு பிரதேசத்தில் வான் ஒன்று டயர் வெடித்து குடைசாய்ந்ததில் அதில் பயணித்த ஒருவர் படுகாயமடைந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஜய பெரமுன தெரிவித்தார். கொழும்பில் இருந்து சம்மாந்துறை பிரதேசத்திற்கு திருமண

06

### 28 மணித்தியாலம் 19 நிமிடம் 43 செக்கனில்

## பாக்குநீரிணையை இரு தடவைகள் நீந்திக் கடந்து மீளவும் சாதனை

### விமானப்படை வீரர் ரொஷான் தனதாக்கல்





தலைமன்னாரில் இருந்து தனுஷ்கோடி வரை பாக்கு நீரிணையை நீந்தி கடந்து மீள திரும்பிய இரண்டாம் நபர் என்ற சாதனையை இலங்கை விமானப்படையின் ரொஷான் அபேசுந்தர தனதாக்கியுள்ளார்.

06

### விக்கல் வீராச்சாமி



பிள்ளையை கிள்ளிவிட்டு தொட்டிலை ஆட்டுவது சரியா அண்ணே.,....

யாழ். மேயர பிடிச்சு கொடுத்துட்டு அறிக்கையும் விட்டு வெளியால எடுத்து விடுற அப்புக்காத்துமார் சிலரைப் பற்றிதானே சொல்ல வாறீங்க, துணி விருந்தா பெயர்களை சொல்லுங்க....!!!

89 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# சர்வதேச செய்திகள்

இளவரசர் பிலிப் மரணம்:

## அதிக தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பற்றி குறை




பிரிட்டனில் எலிசபெத் அரசியாரின் கணவர் இளவரசர் பிலிப் கடந்த வெள்ளிக்கிழமை காலமானதையடுத்து, அவருடைய நீண்ட வாழ்க்கையைக் குறிப்பிட்டு அஞ்சலி செலுத்துவதில் பிரிட்டிஷ் தொலைக்காட்சி மும்முரமாக இறங்கியுள்ளது.

வழக்கமான நிகழ்ச்சிகள் நிறுத்தப்பட்டு சிறப்புச் செய்திகள் ஒளிபரப்பப்படுகின்றன.

குறிப்பாக பி.பி.சி செய்தி நிறுவனம் தனது 2 ஒளியலைகளை முற்றிலும் இளவரசர் பிலிப் தொடர்பான நிகழ்ச்சிகளுக்காக ஒதுக்கிவிட்டது. இதனால் ஏமாற்றமடைந்த பலர் இளவரசர் பிலிப் குறித்து அளவுக்கதிகமான நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுவதாகக் குறைகூறியுள்ளனர்.

அவர்கள் புகார் அளிப்பதற்காகவே இணைய விண்ணப்ப முறை ஒன்றை பி.பி.சி உருவாக்கியுள்ளது. விருப்பமான நிகழ்ச்சிகளைக் காணும் வாய்ப்பு மக்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்று சிலர் கூறினர்.

இதற்கிடையில் சில தொலைக்காட்சி நிறுவனங்கள் இளவரசரைப் பற்றிய நிகழ்ச்சிகளைப் போதுமான அளவு ஒளிபரப்பவில்லை என்ற குறைகூறல்களும் எழுகின்றன.

இளவரசரின் இறுதிக் கிரியை வரும் ஏப்ரல் 17 ஆம் திகதி நடைபெறவுள்ளது. கொரோனா அச்சுறுத்தல் நேரம் என்பதால் வெகுவிமர்சையாக ஊர்வலம் மற்றும் அரசு மரியாதை எதுவும் முன்னெடுக்கப்படாது என்பது குறிப்பிடத்தக்கது.

## மியன்மாரில் 80க்கும் மேற்பட்ட போராட்டக்காரர் சுட்டுக்கொலை

மியன்மாரின் பாகோ நகரில் பாதுகாப்பு படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 80க்கும் அதிகமான ஆர்ப்பாட்டக்காரர்கள் கொல்லப்பட்டதாக செயற்பாட்டாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கொல்லப்பட்டவர்களின் சடலங்களை இராணுவம் எடுத்துச் சென்றதால் உண்மயான உயிரிழப்பு எண்ணிக்கையை சரியாக உறுதி செய்ய முடியாதிருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

ஆயுதங்களுடன் இருந்த படையினர் நகரும் அனைத்தையும் சுட்டுத் தள்ளியதாக பார்த்தவர்கள் உள்நாட்டு ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் இடம்பெற்ற இராணுவ சதிப்புரட்சிக்குப் பின்னரான ஆர்ப்பாட்டங்களில் 600க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். தனது அதிகாரத்தின் பிடியை தக்கவைத்துக் கொல்ல இராணுவம் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பலப்பிரயோகத்தை மேற்கொண்டு வருகிறது.



இந்நிலையில் அண்மைய துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் பிரதான நகரான யங்கோனுக்கு அருகில் உள்ள பாகோ நகரில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றபோதும், பல குடியிருப்பாளர்களும் அருகாமை கிராமங்களுக்கு தப்பி வந்த நிலையிலேயே வெளி உலகுக்கு இந்த சம்பவம் அம்பலமாகியுள்ளது.

இந்நிலையில் உண்மையான உயிரிழப்பு எண்ணிக்கை கூறப்படுவதை விடவும் அதிகமாக இருக்கும் என்று அரசியல் கைதிகளுக்கான உதவி அமைப்பு என்ற கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

“இது கூட்டுப் படுகொலை போன்றது. அவர்கள் எல்லாவற்றையும் சுட்டுத்தள்ளினார்கள்” என்று ஆர்ப்பாட்ட ஏற்பாட்டுக் குழுவான யே ஹ்டுட் அமைப்பை மேற்கோள் காட்டி ‘மியன்மார் நவ்’ என்ற செய்தி வெளியீடு குறிப்பிட்டுள்ளது. கடந்த பெப்ரவரி 1 ஆம் திகதி ஆட்சியை கைப்பற்றிய இராணுவம் நாட்டில் ஓர் ஆண்டு அவசர நிலையை பிரகடனம் செய்தது தொடக்கம் அங்கு நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

## ஆஸியை நோக்கி வலுப்பெறும் புயல்



மேற்கு அவுஸ்திரேலியாவை நோக்கி நகர்ந்துவரும் செரோஜா என்னும் புயல் வலுவடைந்துவருகிறது.

இந்த வேளையில், அவசரச் சேவைகள் பிரிவு மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. சில பகுதிகளில் உள்ளவர்கள் உடனடியாகப் பாதுகாப்பான இடத்திற்குச் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

புயலின் வேகம் அதிகரித்து வருவதாகவும், கடற்கரைக்கு அருகிலுள்ள இடங்களில் வெள்ளம் ஏற்படக்கூடும் என்றும் எச்சரிக்கப்பட்டது.

டென்ஹம் உள்ளிட்ட 5 கடலோர நகரங்கள் தற்போது விழிப்புநிலையில் வைக்கப்பட்டுள்ளன.

புயலின் தீவிரம் 3ஆம் நிலைக்கு உயர்த்தப்பட்டது. அது, தொடர்ந்து தென்கிழக்குத் திசையை நோக்கி நகர்வதாகக் கூறப்பட்டது.

## சவூதியில் 3 படையினர் மீது மரண தண்டனை நிறைவேற்றம்

எதிரியுடன் கூட்டுச் சேர்ந்த குற்றத்திற்காக தேசத்துரோக குற்றச்சாட்டில் சவூதி அரேபியாவில் மூன்று இராணுவ வீரர்களுக்கு கடந்த சனிக்கிழமை மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

எனினும் அவர்கள் உதவி அளித்த எதிரிகள் பற்றிய விபரத்தை சவூதி நிர்வாகம் வெளியிடவில்லை.

சவூதி அரேபியா தலைமையிலான கூட்டுப் படை மற்றும் யெமன் ஹூத்தி கிளர்ச்சியாளர்களுக்கு இடையிலான மோதம் உக்கிரம் அடைந்திருக்கும் நிலையிலேயே இந்தத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

பிராந்தியத்தின் செல்வாக்கு மிக்க சுன்னி முஸ்லிம் நாடாக இருக்கும் சவூதி மற்றும் பிராந்தியத்தின் பிரதான சியா முஸ்லிம் நாடாக இருக்கும் ஈரானுக்கு இடையே மறைமுகப் போர் இடம்பெற்று வருகிறது. யெமன் ஹூத்தி கிளர்ச்சியாளர்களுக்கும் ஈரான் ஆதரவு அளித்து வருகிறது.



இந்நிலையில் இராணுவத்தினர் மீதான மரண தண்டனை விபரம் மறைமுகமாகவே இடம்பெறும் நிலையில் சவூதி நிர்வாகம் அது பற்றி வெளிப்படையாக அறிவித்திருப்பது அரிதான ஒன்றாகப் பார்க்கப்படுகிறது.

## இந்தோனேசிய பூகம்பத்தில் ஏழு பேர் வரை உயிரிழப்பு

இந்தோனேசியாவின் மாலாங் நகரில் ஏற்பட்ட 6 ரிக்டர் அளவிலான பூகம்பத்தில் குறைந்தது 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

பூகம்பத்தைத் தொடர்ந்து நிலச்சரிவுகளும் வெள்ளமும் ஏற்படலாமென அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். இந்த பூகம்பம் 82 கிலோமீற்றர் ஆழத்தில் மையங்கொண்டிருந்தது.

நூற்றுக்கணக்கான வீடுகள், பாடசாலைகள், அரசாங்க அலுவலகங்கள், பள்ளிவாசல்கள் ஆகியவை சேதமடைந்தன. கிழக்கு ஜாவாவில் பாறைகள் விழுந்ததில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இருவருக்குக் கடுமையாகவும் 10 பேருக்குச் சிறிய அளவிலும் காயம் ஏற்பட்டது. அந்தப் பகுதியிலிருந்து பலர் வெளியேற்றப்பட்டுள்ளனர். பாதிப்பின் முழுமையான அளவை கண்டறியும் முயற்சியில் அதிகாரிகள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். பாலித் தீவு உட்பட கிழக்கு ஜாவா வட்டாரத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பூகம்பத்தின் அதிர்வுகள் உணரப்பட்டன.



இந்தோனேசியாவில் ஒரு வாரத்திற்குள் இடம்பெறும் இரண்டாவது மோசமான அனர்த்தமாக இது உள்ளது. முன்னதாக ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில் குறைந்தது 165 பேர் வரை உயிரிழந்தனர்.

## எகிப்தின் பண்டைய நகரம் கண்டுபிடிப்பு

தொல்பொருள் ஆய்வுக்குழு ஒன்று, உலகின் மிகப் பழமையான பிரமாண்ட நகரைக் கண்டுபிடித்துள்ளது. அந்த எகிப்திய நகர், லக்ஸோரின் மேற்குப் பகுதியில் உள்ள மணலுக்கடியில் கண்டுபிடிக்கப்பட்டது.

தி ரைஸ் ஒப் அடேன் எனப் பெயர்சூட்டப்பட்ட அது, சுமார் 3,000 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அந்த நகரின் வீதியோரங்களில் வீடுகள் நிறைய இருந்தன. பழுதடையாத சுவர்களுடன், 10 அடி உயரமுள்ள அறைகளைக் கொண்ட அந்த வீடுகளில், தினசரி வாழ்க்கைக்குத் தேவையான சாதனங்களும் இருந்தன.

புதைந்த நகரில் நேற்று விட்டுப் போனது போல், பழுதடையாமல் உள்ள பொருட்களைப் பற்றி ஆய்வாளர்கள் குறிப்பிட்டனர்.

ஆய்வுக் குழுவினர் ‘பேக்கரி’ ஒன்றையும் கண்டுபிடித்தனர். அதில் அடுப்பு, உணவைப் பதப்படுத்தும் இடம் போன்றவற்றையும் கண்டனர். கடை பெரிதாக இருந்ததால், அது அதிகமான ஊழியர்களுடன் செயல்பட்டு, பல வாடிக்கையாளர்களுக்கு உணவு வழங்கி வந்ததாக நம்பப்படுகிறது.

இன்னொரு பகுதியில், ஒருவரின் எலும்புக்கூடு காணப்பட்டது.



எலும்புக்கூட்டின் கைப்பகுதிகள் விரிந்திருந்ததாகவும், அதன் முட்டுக்கால் பகுதி கயிற்றால் கட்டப்பட்டிருந்ததாகவும் ஆய்வாளர்கள் கூறினர்.

காணாமற்போன பழமையான நகரத்தைக் கண்டுபிடித்ததன் மூலம் பழங்கால எகிப்தியர்கள் எவ்வாறு வாழ்ந்தனர் என்பதைக் கண்டறியலாம் என்று கூறப்பட்டது.

கி.மு 1391 தொடக்கம் 1353 ஆம் ஆண்டில் ஆட்சி புரிந்த எகிப்தின் பலம்மிக்க பாரோக்களில் ஒருவரான மூன்றாவது அமென்ஹொடப் காலத்தை சேர்ந்ததாக இந்த நகர் உள்ளது.


## சீன சுரங்கத்தில் சிக்கிய 21 பேரை மீட்க முயற்சி

சீனாவின் வடமேற்கு மாநிலமான சின்ஜியாங்கில் நிலக்கரிச் சுரங்கத்தில் மாட்டிக்கொண்டிருக்கும் 21 ஊழியர்களை வெளியேற்ற மீட்புப் படையினர் முயன்று வருகின்றனர்.

அங்கு வெள்ளம் ஏற்பட்டு, நிலத்தடியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. அதனால் தொடர்புகள் தடைப்பட்டன. ஊழியர்கள் அந்தத் தளத்தில் மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

தற்போது 8 பேர் மட்டுமே வெளியேற்றப்பட்டுள்ளனர். சுரங்கத்தில் சிக்கிக்கொண்டிருக்கும் 21 பேரில் 12 பேரின் இடத்தைக் கண்டுபிடிப்பதில் மீட்புப்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

அவர்கள் ஒரே இடத்தில் இருக்கிறார்களா அல்லது தனித்தனியே மாட்டிக்கொண்டிருக்கிறார்களா என்பது தெரியவில்லை.



மீட்பாளர்கள் சுரங்கத்தில் இருக்கும் வெள்ள நீரை வெளியேற்றும் அதேவேளை சுரங்கத்திற்குள் காற்றை அனுப்பி வருவதாக சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சீனாவில் தொழில்துறை பாதுகாப்பு நடைமுறைகள் மோசமாக இருக்கும் நிலையில் அங்கு இவ்வாறான சுரங்க விபத்துகள் அடிக்கடி நிகழ்கின்றன. கடந்த டிசம்பரில் நிலக்கரிச் சுரங்கம் ஒன்றில் நச்சு வாயு கசிந்ததில் 23 சுரங்கத் தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

## ஈரானில் முடக்கநிலை

ஈரானில் நான்காவது முறையாகத் தலைதூக்கியுள்ள கொரோனா நோய்ப் பரவலைக் கட்டுக்குள் கொண்டுவர 10 நாள் முடக்கநிலை அறிவிக்கப்பட்டுள்ளது.



வர்த்தகங்கள், பாடசாலைகள், திரையரங்குகள், விளையாட்டு இடங்கள் ஆகியவை மூடப்பட்டுள்ளன. வரும் புதன்கிழமை ஆரம்பமாகும் ரமழான் மாதத்தில் ஒன்றுகூடுவதற்கும் தடைவிதிக்கப்படும்.

தலைநகர் டெஹ்ரான் உட்பட 250 நகரங்களில் நோய்ப்பரவல் மோசமாகியுள்ளது. ஈரானில் 2 மில்லியனுக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சில நாட்களாக வைரஸ் தொற்றுக்கு ஆளாவோரின் தினசரி எண்ணிக்கை 20,000ஐக் கடந்துவிட்டது. பிரிட்டனில் கண்டறியப்பட்ட புதுவகைக் கொரோனா வைரஸ் தற்போது ஈரானில் பரவி வருகிறது.

கடந்த சனிக்கிழமை அந்நாட்டில் 193 பேர் கொரோனா தொற்றினால் உயிரிழந்தனர். இதன்படி ஈரானில் இதுவரை பதிவான மொத்த உயிரிழப்புகளின் எண்ணிக்கை 64,000 தாண்டியுள்ளது.

இந்நிலையில் ஈரானின் தடுப்பூசித் திட்டம் மெதுவாகவே நடத்தப்படுகிறது. 84 மில்லியன் பேர் வசிக்கும் அந்த நாட்டில், 200,000 தடுப்பூசிகள் மட்டுமே போடப்பட்டுள்ளன.

## செயின்ட் வின்சன்ட் தீவில் மீண்டும் எரிமலை வெடிப்பு

கரீபியன் தீவான செயின்ட் வின்சன்டில் உள்ள எரிமலையில் ஏற்பட்ட மற்றொரு பயங்கர வெடிப்பில் அங்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டு விநியோகங்கள் தடைப்பட்டுள்ளன.

லா சொப்ரிரே என்ற அந்த எரிமலை கடந்த வெள்ளிக்கிழமை முதலில் வெடித்ததை அடுத்து சாம்பல் புகையை கக்கியதோடு சுமார் 16,000 பேர் தமது வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டனர்.

கிழக்காக சுமார் 200 கிலோமீற்றருக்கு அப்பால் இருக்கும் பார்படோஸ் குடியிருப்பாளர்களை வீடுகளில் இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இந்த வெடிப்பு தொடர்ந்து பல நாட்கள் அல்லது வாரங்கள் வரை நீடிக்கலாம் என்று விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.



தலைநகர் கிங்ஸ்டவுன் உட்பட தீவைச் சூழவிருக்கும் கட்டிடங்கள் வீதிகளில் வெள்ளை நிற தூசி படிந்து காணப்படுகிறது.

இதனால் சாம்பல் காரணமாக வீதிகளை பயன்படுத்துவதில் அவதானத்துடன் இருக்கும்படி அந்த தீவின் அனர்த்த முகாமைத்துவ அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த எரிமலை 1979 தொடக்கம் செயலற்று காணப்பட்டபோதும் 2020 இன் பிற்பகுதி தொடக்கம் புகையை கக்கி சத்தம் எழுப்பி வந்தது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444, 0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2021 ஏப்ரல் 12 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN


தொழுகை நேரம்
12 முதல் 14 வரை
ஸுபஹ் - 04.48
லுஹர் - 12.13
அஸர் - 03.17
மஃரிப் - 06.19
இஷா - 07.30

இன்றைய சுபதினம்
சார்வரி வருடம் பங்குனி 30
ராகுகாலம் : பகல் : 07.30 - 09.00வரை
சுபநேரம் : காலை : 06.00 - 07.30வரை
யோகம்: சித்தயோகம்
திதி: பிரதமை



## பிரதமர், முன்னாள் ஜனாதிபதி விசேட சந்திப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உட்பட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் நேற்று பிரதமர் மஹிந்த ராஜபக்சவை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் மேற்படி சந்திப்பு இடம்பெற்றுள்ளதுடன் மைத்திரிபால சிறிசேன அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா துமிந்த திசாநாயக்க

06



## யாழ். மேயரின் கைது மக்களது கவனத்தை திசை திருப்பலாம்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கூறுகிறார்

யாழ்ப்பாண மாநகர முதல்வர் கைது செய்யப்பட்டமையானது மக்களின் கவனத்தை திசைத்திருப்பும் செயற்பாடு என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். யாழ்ப்பாண மாநகர முதல்வர் ஏதேனும் தமது கடமையின் போது தவறிழைத்திருந்தால் அது தொடர்பில் விசாரணைகளை

06



கிருலப்பனை ஸ்ரீ எலன் மெதினியாராமை விகாரையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தியான பூங்கா, தானம் வழங்கும் மண்டபம் உள்ளிட்ட புதிய கட்டடங்களை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மத அனுஷ்டானத்தில் ஈடுபடுவதையும் அருகில் ஜனாதிபதியின் பாரியார், ஜனாதிபதி செயலணி தலைவர் பெசில் ராஜபக்ஷ, அவரின் பாரியார் ஆகியோரையும் காணலாம்.

## மோட்டார் போக்குவரத்து திணைக்களம் இன்று திறப்பு

அரச விடுமுறை தினமாக இன்றைய தினம் அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் நடவடிக்கைகள் வழமை போன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து திணைக்களத்தின் நாரஹேன்பிட்டி மற்றும் வேரஹெர, யாழ்ப்பாணம், அநுராதபுரம், குருநாகல், கம்பஹா மற்றும் ஹம்பாந்தோட்டை அலுவலகங்கள் திறக்கப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேரத்தை ஒதுக்கிக் கொண்டவர்களுக்கான சேவைகள் மாத்திரம் இடம்பெறும் என போக்குவரத்து திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

## 5000 ரூபா கொடுப்பனவு தொடர்பில் விசேட சுற்றுநிருபம் வெளியீடு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொரோனா சூழ்நிலையால் பாதிக்கப்பட்டுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் மற்றும் சமூர்த்தி உதவி பெறும் குடும்பங்களுக்கும் அரசாங்கம் வழங்குவதற்கு தீர்மானித்துள்ள 5000 ரூபா கொடுப்பனவு தொடர்பில் நேற்றைய தினம் பிரதமர் செயலகம் சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதற்கிணங்க மேற்படி 5000 ரூபா கொடுப்பனவு 7 பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்டுள்ள குடும்பங்களுக்கு வழங்குவது தொடர்பில் சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கிணங்க மேற்படி சுற்றுநிறுபம்

மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த சுற்று நிருபத்தின்படி சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்கள், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள், வயது முதிர்ந்தோருக்கான கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளும் குடும்பங்கள், சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டு கொடுப்பனவுகளை பெற்றுவரும் குடும்பங்கள், அங்கவீனர்களுக்கான கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளும் குடும்பங்கள் ஆகியவற்றிடமிருந்து மேன்முறையீடுகளைப் பெற்றுக் கொண்டு கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ள தகுதியான குடும்பங்களுக்கு மேற்படி கொடுப்பனவை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.





மேற்படி சுற்றுநிறுபம் தொடர்பில் பிரதமர் அலுவலகம் தெரிவிக்கையில் குடும்பமொன்றில் சமுர்த்தி உதவி பெறுவோர் அல்லது முதியோருக்கான கொடுப்பனவை பெறுவோர் இருப்பார்களானால் அந்த குடும்பங்களுக்கு 5000 ரூபாய் மட்டும் வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

## இளவரசர் பிலிப் மறைவுக்கு UKயில் 8 நாட்கள் துக்கதினம்

### 17ஆம் திகதி வின்சர் கோட்டையில் நல்லடக்கம்



பிரித்தானிய இளவரசரும் இரண்டாம் எலிசபெத் மகாராணியின் கணவருமான பிலிப் மறைவையடுத்து எதிர்வரும் 17ஆம் திகதி வரை துக்கதினம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை வின்சர் கோட்டையில் உள்ள ஃப்ரொக்மோர் (frogmore) தோட்டத்தில் அவரது உடல் அடக்கம் செய்யப்படவுள்ளது. அத்துடன் கொரோனா வைரஸ் நெருக்கடி நிலைமை காரணமாக இறுதி நிகழ்வு குறித்த முழு விபரம் பின்னர் அறிவிக்கப்படவுள்ளது.

இதேவேளை, அத்துடன், இரண்டாம்

06

## போலி நாணயத்தாள் புழங்கலாம் மக்கள் அவதானமாக செயற்படவும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

புதுவருட பண்டிகைக் காலத்தில் போலி நாணயத்தாள்கள் புழங்கலாம் என்றும் அது தொடர்பில் மக்கள் விழிப்புடன் செயற்படுமாறும் பொலிஸ் தலைமையகம் கேட்டுக்கொள்கின்றது.

அவ்வாறான போலி நாணயத்தாள்கள் எவரது கையிலாவது கிடைத்தால் அருகாமையில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு அது தொடர்பில் அறிவிக்குமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

1000 ரூபா போலி நாணயத்தாளை தம்வசம் வைத்திருந்த 28 வயது நபரொருவர் பனாகொட பகுதியில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

06


வர்த்தக அமைச்சு

சதொச சஹன

| | | |
|---|---|---|
| சிவப்பரிசி | 1Kg | 89/- |
| வெள்ளை சீனி | 1Kg | 93/- |
| நாட்டரிசி | 1Kg | 96/- |
| வெள்ளை சீனி | 1Kg | 99/- |
| சிவப்பு சீனி | 1Kg | 115/- |
| சிவப்பு பருப்பு | 1Kg | 165/- |
| பெரிய வெங்காயம் (பாகிஸ்தான்) | 1Kg | 70/- |
| பெரிய வெங்காயம் (இந்தியா) | 1Kg | 99/- |
| நெத்தலி (தாய்) | 500 g | 288/- |
| மிளகு | 100 g | 160/- |

සතොස

தேசத்திற்கு விலை நிர்ணயிப்பவர்




தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சார்வரி வருடம் பங்குனி மாதம் 30ம் நாள் திங்கட்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1442 ஷஃபான் பிறை 29

### குறள் தரும் சிந்தனை



நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது

புகழுடம்பு மேம்படுதலாகும் வாழ்வில் கேடும், புகழ் நிலை நிற்பதாகும் சாவும் அறிவில் சிறந்தவர்க்கு அல்லாமல் மற்றவர்க்கு இல்லை.

# அறுவடையின் பின்னரான உணவுப் பொருள் விரயம்

இலங்கையில் வருடா வருடம் பெருந்தொகையான மரக்கறி வகைகளும் பழ வகைகளும் வீண் விரயமாகின்றன. இவ்விடயம் அவ்வப்போது நாட்டில் பேசுபொருளாகியுள்ளது. அறுவடைக்கு பின்னர் அதிகளவிலான மரக்கறி வகைகளும் பழ வகைகளும் பாவனைக்கு உதவாத நிலையை அடைவதே இதற்கான காரணமாகும்.

அதன் காரணத்தினால் இந்நிலைமையைத் தவிர்க்கும் நோக்கில் பல வேலைத் திட்டங்களும் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்டமையும் தெரிந்ததே.

இவ்வாறான நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையிலான பாராளுமன்ற கணக்கு குழுவின் அண்மைய அமர்வில் இவ்விடயம் பரிசீலனைக்கு வந்துள்ளது. அங்கு முன்வைக்கப்பட்டுள்ள தரவுகள் மக்கள் மத்தியில் ஆச்சரியத்தை ஏற்படுத்தக் கூடியனவாக உள்ளன.

அதாவது அறுவடைக்கு பின்னர் வீண் விரயமாகும் மரக்கறி வகைகள் மற்றும் பழ வகைகள் தொடர்பில் தேசிய கணக்காய்வு அலுவலகம் 2015 இல் மேற்கொண்ட கணக்காய்வில், இந்நாட்டில் அறுவடை செய்யப்படும் மரக்கறி மற்றும் பழ வகைகளில் 2,70,000 மெற்றிக் தொன்கள் வீண் விரயமாவதோடு இதன் விளைவாக நாட்டுக்கு சுமார் 20 பில்லியன் ரூபா பொருளாதார நஷ்டம் ஏற்படுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. இது 30 , 40 வீத வீண்விரயம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இது ஒரு சாதாரண விடயமல்ல. வளர்முக நாடொன்றில் இவ்வளவு தொகை மரக்கறி மற்றும் பழ வகைகள் அறுவடையில் விரயமாவது தேசத்திற்கே பெரும் இழப்பாகும். அதனால் இவ்விடயத்தில் விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும். அறுவடையின் பின்னர் மரக்கறி மற்றும் பழவகைகள் விரயமாவதற்கான காரணங்கள் கண்டறியப்படுவது அவசியம். அவற்றுக்கு உரிய தீர்வுகள் எட்டப்பட வேண்டும்.

மரக்கறிகளும் பழ வகைளும் அறுவடைக்கு பின்னர் வீண் விரயமாகப் பல காரணிகள் துணை புரிகின்றன. அவற்றில் இடைத்தரகர்களின் செல்வாக்கு, உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை கிடைக்கப் பெறாமை, வீண் விரயத்தைத் தவிர்ப்பதற்கு தேவையான போதிய அறிவு தெளிவு இன்மை, அதிக விளைச்சல் கிடைக்கப் பெறக் கூடிய ஒரு சில பயிர்களைப் பெரும்பாலான விவசாயிகள் ஏக வேளையில் செய்கை பண்ணுதல் என்பன குறிப்பிடத்தக்கவையாகும்.

ஆனால் நாட்டில் மரக்கறி மற்றும் பழ வகைகளைப் போதியளவில் நுகராத மக்கள் நிறையவே இருக்கவே செய்கின்றனர். குறிப்பாக 73 வீதமான சிரேஷ்ட பிரஜைகள் மரக்கறிகள் மற்றும் பழ வகைகளை போதியளவில் நுகராதிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்தோடு ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் மத்தியிலான போஷாக்கின்மை மட்டம் 21 வீதமாகக் காணப்படுவதாக அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இவ்வாறான சூழலில் பெருந்தொகையான மரக்கறி மற்றும் பழ வகைகள் வீண்விரயமாவது எவ்விதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாததாகும். சிரேஷ்ட பிரஜைகளது ஆரோக்கிய மேம்பாட்டுக்கும் சிறுவர்கள் மத்தியிலான போஷாக்கின்மை மட்டத்தைக் குறைப்பதற்கும் மரக்கறிகளும் பழவகைகளும் பெரிதும் உதவக் கூடியன.

அத்தோடு நாட்டில் அவ்வப்போது மரக்கறி மற்றும் பழ வகைகளின் விலைகள் பெரிதும் அதிகரித்து காணப்படுவதைத் தவிர்ப்பதற்கு இவற்றை ஒழுங்கு முறையாக பகிர்ந்து விநியோகிக்கப்பட வேண்டும். அதற்கான கட்டமைப்பு ஏற்பாடுகளும் அவசியமானது. அதுவும் இவற்றின் வீண் விரயத்தைத் தவிர்க்க உதவும். இவ்வாறான விடயங்களைக் கவனத்தில் கொண்டு இந்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறி மற்றும் பழவகைகள் அறுவடையின் பின்னர் வீண் விரயமாவதைத் தவிர்ப்பதற்கு ஏற்ற தேசிய வேலைத் திட்டம் வகுக்கப்பட வேண்டும். அவ்வேலைத் திட்டம் விரிவான அடிப்படையில் முன்னெடுக்கப்பட வேண்டும். அதன் ஊடாக நாட்டின் சகல பிரதேசங்களுக்கும் மரக்கறி வகைகளும் பழ வகைகளும் தட்டுப்பாடுகள் இன்றி நியாய விலையில் தொடராகக் கிடைக்கப் பெறுவதை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

ஆகவே இத்தேசிய வேலைத் திட்டத்தை இந்நாட்டு மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதைக் கருத்தில் கொண்டு முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் வகுப்பது மிகவும் அவசியமானது. அதன் ஊடாக நாட்டின் எல்லாப் பிரதேசங்களுக்கும் இவை எவ்வித குறைபாடுகளும் இன்றி கிடைக்கப் பெறவும் விவசாயிகளின் விருப்பதற்கு ஏற்ப சில உற்பத்திகளை மாத்திரம் மேற்கொள்வதைத் தவிர்த்துக் கொள்ளவும், அவர்களது அறுவடைக்கு நியாய விலை கிடைக்கப் பெறவும் வாய்ப்பு கிடைக்கப் பெறும். இதன் மூலம் அறுவடையின் பின்னரான வீண் விரயத்தை மாத்திரமல்லாமல் பொருளாதார இழப்பையும் கூட தவிர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

editor.tkn@lakehouse.lk

# வி.ஜி.பி உலகத் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக அமெரிக்காவுக்கு 60 திருவள்ளுவர் சிலைகள்

வி.ஜி.பி உலகத் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக, வட அமெரிக்காவிலுள்ள 50 மாகாணங்களில் இயங்கும் 60 தமிழ்ச் சங்கங்களுக்கு 60 திருவள்ளுவர் சிலைகளை வி.ஜி.பி உலகத் தமிழ்ச் சங்கத் தலைவர் டொக்டர் வி.ஜி.சந்தோசம் வடஅமெரிக்கா தமிழ்ச் சங்கங்களின் ஒருங்கமைப்பாளர் கால்டுவெல் வேள்நம்பியிடம் ஒப்படைத்தார்.

திருவள்ளுவர் சிலைகளின் வழியனுப்பு விழா சென்னை அடையாறில் உள்ள சத்யா ஸ்டுடியோ, எம்.ஜி.ஆர் ஜானகி மகளிர் கல்லூரி அரங்கத்தில் நடைபெற்றது. விழாவிற்கு திராவிடர் கழகத் தலைவர் ஐயா கி.வீரமணி முன்னிலை வகித்தார். கவிப் பேரரசு பத்மஸ்ரீ வைரமுத்து சிறப்புரையாற்றினார். வரவேற்புரையை வி.ஜி.பி. ரவிதாஸ் ஆற்றினார். வி.ஜி.பி ராஜாதாஸ் நன்றி கூறினார். விழாவிற்குத் தலைமையேற்று பேசிய டொக்டர் வி.ஜி.சந்தோசம் கூறுகையில், ''இன்று ஒரு அற்புதமான நாள். ஏற்கனவே உலகம் முழுவதும் 62 திருவள்ளுவர் சிலைகளை நிறுவிய நாம், தற்போது அமெரிக்காவுக்கு ஒட்டுமொத்தமாக 60 திருவள்ளுவர் சிலைகளை அனுப்பி வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

மேலும், மே மாதத்தில் புதுடில்லியில் உள்ள 7 தமிழ்ப் பாடசாலைகளில் 7 திருவள்ளுவர் திருவுருவச் சிலைகளை நிறுவவுள்ளோம். இந்த 2021ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 15ஆம் திகதிக்குள் திருக்குறள் அதிகாரங்கள் 133ஐ கருத்தில் கொண்டு, 133 திருவள்ளுவர் சிலைகளை நிறுவ வேண்டும் என்பதே எங்கள் நோக்கமாக இருக்கிறது.

'கவிஞர் சொல் பொய்க்காது' என்பார்கள். வி.ஜி.பி உலகத் தமிழ்ச் சங்க வெள்ளிவிழாவில் கவியரசர் வைரமுத்து அவர்கள், ''நீங்கள் உங்கள் வாழ்நாளில் 133 திருவள்ளுவர் சிலைகள் வைக்க வேண்டும்'' என்று வாழ்த்தினார்.

அவருடைய வாழ்த்துகளின்படி 133 திருவள்ளுவர் சிலைகள் இவ்வருடம் ஒகஸ்ட் 15க்குள் நிறுவப்படும். 133ஆவது திருவள்ளுவர் சிலை இதே எம்.ஜி.ஆர். ஜானகி மகளிர் கல்லூரியில் அமைக்கப்படுகிறது.

இந்த 60 சிலைகளில் ஒன்றை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அவர்களுக்கும், இன்னொன்றை அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் அவர்களுக்கும் கொடுக்கும்படி கால்டுவெல் வேள்நம்பியிடம் கூறியுள்ளேன்.

இவ்வாறெல்லாம் திருவள்ளுவர் சிலைகள் அமைப்பதனால் திருக்குறளின் பெருமையையும், தமிழ்மொழியையும் உலக மக்கள் யாவரும் அறிய பெருந்துணையாக இருக்கும்'' என கூறினார்.

நிகழ்ச்சிகளை பேராசிரியர் அபிதா சபாபதி தொகுத்து வழங்கினார்.



சென்னையில் வழியனுப்பும் விழா



# கசப்பு எதுவுமின்றி 74 ஆண்டுகள் நீடித்து நிலைத்த காதல் வாழ்வு

பிரிட்டிஷ் மகாராணி எலிசபெத்தின் கணவரும், எடின்பரோ இளவரசருமான பிலிப், தனது 99வது வயதில் கடந்த வெள்ளிக்கிழமை காலை வின்ட்சர் கோட்டையில் காலமானார் என்ற செய்தி உலகையே வேதனையில் ஆழ்த்தியது.

பிலிப் மறைந்த செய்தியை அரச குடும்பத்தினர் அதிகாரபூர்வமாக வெளியிட்டனர். அந்த அறிவிப்பில், "உலக மக்கள் அனைவருடனும் எங்கள் துக்கத்தைப் பகிர்ந்து கொள்கிறோம்" எனக் குறிப்பிட்டிருந்தனர். மேலும் அரச குடும்பத்தின் அதிகாரபூர்வ வலைத்தளம் கறுப்பு வெள்ளையாக மாற்றப்பட்டது.

பிலிப் இறப்பதற்கு முன் அறிவுறுத்தியதன்படி, அவரது உடல் செயின்ட் ஜார்ஜ் அரண்மனையில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. கொரோனா வைரஸ் பரவல் காரணமாக மக்கள் அஞ்சலி செலுத்த முடியாத நிலை உள்ளது.

இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜோன்சன், 'இது மிகப்பெரிய சோகம்' என அறிக்கையுடன், பிலிப்பின் சேவை மற்றும் நினைவுகள் குறித்த தனது இரங்கலை நாட்டு மக்களுக்கும் மகாராணி எலிசபெத்திற்கும் கூறியுள்ளார்.

பிலிப் உடன் 74 ஆண்டுகள் காதல் நிறைந்த திருமண வாழ்வை வாழ்ந்துள்ளார் மகாராணி எலிசபெத். இன்னும் 11 நாட்களில் ராணியின் பிறந்தநாள் வரவிருக்கும் நிலையில் பிலிப்பின் மரணம் அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. மேலும் பிலிப் இரு மாதங்களில் தனது 100வது பிறந்த நாளை கொண்டாட இருந்தது குறிப்பிடத்தக்கது.

எலிசபெத் ராணி எப்போதும் 'என் பலமும் இருப்பும்' எனக் குறிப்பிடும் அவரின் கணவர் பிலிப், கடந்த பெப்ரவரி மாதம் இருதயக் கோளாறு மற்றும் பிற நோய்த்தொற்று காரணமாக உடல் நிலை மோசமானதை அடுத்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பின் இருதய சிகிச்சை முடித்து ஒரு மாதத்தில் அரண்மனை திரும்பினார்.

கடந்த 2017ம் ஆண்டு முதல் அரசுப் பணிகளில் இருந்து ஓய்வு பெற்ற பிலிப், கொரோனா பரவல் காலகட்டத்தில் மனைவியுடன் வின்ட்சர் கோட்டையில் இருந்தார். இருவரும் ஜனவரி 9ம் திகதி தடுப்பூசி போட்டுக் கொண்டனர். 1952 முதல் மனைவிக்கு பக்கபலமாக அரசு வேலைகளை கவனித்து வந்த பிலிப், இங்கிலாந்து வரலாற்றில் அதிக ஆண்டு அரசு பணியாற்றியவர். இதுவரை 14 பிரதமர்களுடன் பணி செய்துள்ளார் பிலிப்.




தனது 7 வயதில் இங்கிலாந்திற்கு வந்த பிலிப் தன் பாட்டி விக்டோரியா மவுன்ட்பேட்டன் மற்றும் மாமா ஜார்ஜ் மவுன்ட்பேட்டன் ஆகியோருடன் வசித்து வந்தார். பதின்ம பருவத்தில் கடற்படையில் சேர்ந்து இரண்டாம் உலகப் போரில் பங்கு பெற்றார்.

1947ம் ஆண்டு தனது 26ம் வயதில் எலிசபெத்தை திருமணம் செய்து கொண்டார் பிலிப். அவர் இங்கிலாந்தை பூர்விகமாகக் கொண்டவர் அல்லர் என்பதால், பல சர்ச்சைகளும் வந்தன. திருமணமான புதிதில் எலிசபெத் தன் தந்தைக்கு எழுதிய கடிதத்தில், 'நாங்கள் பல ஆண்டுகள் பழகியவர்கள் போல நடந்து கொள்கிறோம்' எனக் குறிப்பிட்டிருந்தார்.

ஓராண்டிற்குப் பின் இளவரசர் சார்லஸ் பிறந்தார். தொடர்ந்து அன்னா, ஆண்ட்ரூ, எட்வர்ட் ஆகியோர் பிறந்தனர்.

பெப்ரவரி 6, 1952ம் ஆண்டு, மன்னர் ஆறாம் ஜோர்ஜ் இறப்பிற்கு பின் எலிசபெத் மகாராணியாகப் பதவியேற்றதும், அவருக்குத் துணையாக அரசு வேலைகளில் கவனம் செலுத்தினார் பிலிப். உள்நாட்டுப் பயணங்கள், வெளிநாட்டு சுற்றுப் பயணங்கள், கொமன்வெல்த் சுற்றுலா என ராணியின் பலமாக இருந்தார்.

அலுவல் முறை பயணமாக 140 நாடுகளுக்குச் சென்றுள்ளார் பிலிப். பல தசாப்தங்கள் எலிசபெத் மற்றும் பிலிப் இணைந்து ஆட்சி நடத்தினர். நவம்பர் 20, 1997 ம் ஆண்டு நடந்த பொன் விழா திருமண நிகழ்வில் எலிசபெத் ராணி, "எளிமையாக, இத்தனை ஆண்டுகள் என்னுடன் இருந்த என் பலம் அவர்" எனக் கூறினார்.





பிலிப்பின் மறைவு எலிசபெத் ராணிக்கும், அரச குடும்பத்தினருக்கும், இங்கிலாந்து மக்களுக்கும் சோகத்தை ஏற்படுத்தியிருக்கும் சூழலில், அவரது நினைவுகளால் அனைவரும் அவருக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

கிரேக்கத் தீவான கோர்ஃபுவில் 1921ம் ஆண்டு பிறந்த இளவரசர் பிலிப், 1947ம் ஆண்டு இங்கிலாந்து இளவரசி இரண்டாம் எலிசபெத்தைத் திருமணம் செய்து கொண்டார். நான்கு குழந்தைகளைப் பெற்ற இவர்களுக்கு எட்டுப் பேரக் குழந்தைகளும் உள்ளனர். அவர்களின் மூலம் 10 கொள்ளுப் பேரக் குழந்தைகளையும் பார்த்திருக்கிறார்கள்.

இங்கிலாந்து வரலாற்றிலேயே மிக நீண்ட காலம் ஆட்சிப் பணியில் இருந்த அரச தம்பதிகள் என்ற பெருமை இவர்கள் இருவரையே சேரும். இளவரசரின் மறைவுக்குப் பல்வேறு உலகத் தலைவர்களும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

# உணவுப் பொருட்களின் விலையுயர்வின் பின்னணியில் உள்ள காரணங்கள் எவை?

புதுவருடம் என்பது உறவுகளைப் புதுப்பிக்கும் காலமாகும். அதே போன்று வியாபாரிகளுக்கும் வளமான காலமாக அமைவது சிங்கள தமிழ் புதுவருட காலமாகும். ஆடை அணிகலன்களில் மாத்திரமன்றி, உணவுச் சந்தையிலும் அதிக இலாபம் பெறுவது இக்காலத்தில் தான்.

அரிசி உட்பட ஏனைய உணவுப் பொருட்கள் போன்று கோழி இறைச்சி, மீன் போன்றவற்றுக்கும் அதிக கேள்வி நிலவுவதுண்டு. கடந்த வருடம் ஊரடங்கு உத்தரவு காரணமாக புதுவருடத்தை மக்களால் கொண்டாட முடியாமல் போனது. அதனால் புதுவருடத்தைக் கொண்டாடும் ஆர்வம் இம்முறை மக்களிடம் அதிகரித்துள்ளது.

புதுவருடத்தில் வீட்டுக்கு வரும் விருந்தினர்களுக்கு தேநீர் விருந்துக்கு மேலதிகமாக ஒரு நேர உணவையாவது வழங்குவது இலங்கையர்களின் வழக்கமாகும். அதனால்தான் புதுவருடத்துக்கு முன்னர் அத்தியாவசியப் பொருட்களை வீடுகளில் சேமிக்கின்றார்கள். இந்த நிலைமையில் உணவுப் பொருட்களுக்கு அதிகரிக்கும் கேள்விக்கு போதுமான அளவு விநியோகம் இல்லாமையால், பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவது இயற்கை ஆகும்.

## புத்தாண்டு காலத்தில் விலைகள் அதிகரிப்பது வர்த்தக மாபியாக்களின் திட்டமிட்ட செயலா?

அதன் காரணமாக அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிக்கின்றது. ஆனால் அதிக விலை கொடுத்தாவது அவசியமான பாவனைப் பொருட்களை வாங்க பாவனையாளர்கள் முயற்சி செய்வார்கள். புதுவருட காலத்தில் கோழி இறைச்சி,மீன் என்பவற்றின் விலை அதிகரிப்பது வழமை.

இறைச்சிக்காக விலங்குகளை வளர்க்கும் பண்ணையாளர்கள் விலங்குக்கான தீனிக்கு பற்றாக்குறை நிலவுவதால் இறைச்சியின் விலை அதிகரித்துள்ளதாகக் கூறுகிறார்கள். பாவனையாளர்களின் தேவையை நிறைவேற்றும் வர்த்தகத்துக்கு முன்னர் விலங்குகளுக்கான உணவுப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். நாட்டில் மேற்கொள்ளப்படும் உணவு உற்பத்தி போதுமானதல்ல. உற்பத்தி செய்யப்படும் சிலவற்றுக்கு அவசியமான அடிப்படைப் பொருட்கள் இந்நாட்டில் இல்லை. அவற்றின் இறக்குமதி கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்த மாற்றமான காலப் பகுதியில் அர்ப்பணிப்பு அவசியமாகும். வர்த்தகத்தில் 'மாபியா' எனக் கூறுவது இலகு.

மாபியா எனப்படும் ஏகபோகம் உருவாகக் காரணம் ஒரு சிலரிடம் மாத்திரம் சந்தையைக் கையாளும் சந்தர்ப்பம் கிடைப்பதாகும். இன்று அரிசி கட்டுப்பாட்டு விலையை மீறியுள்ளது இந்நிலைமையினாலாகும்.

மாபியா என்னும் வார்த்தையைப் பாவிப்பது இலகு. அரிசி, சீனி, மரக்கறி, தேங்காய் எண்ணெய் மாபியா எனக் கூறும் சந்தர்ப்பம் உண்டு. அதனுடன் கோழி இறைச்சி மாபியாவும் வரக் கூடும். அதன் மூலம் அறியப்படுவது யாதெனில் திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் கோஷ்டியினரே இவ்வாறான வர்த்தகத்தில் ஈடுபடுகின்றனர் என்பதாகும்.

இன்று அவ்வாறானவர்கள் எமது நாட்டில் செயல்படுகிறார்கள் எனக் குறிப்பிடுவதிலும் நியாயமுண்டு.

அரிசிச் சந்தை நடவடிக்கைகளை கட்டுப்படுத்த முடியாத நிலைமையில் அதனை மாபியா என குறிப்பிடுவதோடு, சீனிச் சந்தையை வழிநடத்த முடியாத போதும் அவ்வாறே கூறப்படுகிறது.

அறுவடைக் காலத்தில் குறைந்த விலைக்கு நெல்லை வாங்கி களஞ்சியப்படுத்த முடியும். ஆனால் பாதுகாப்பதற்கான கால எல்லை உண்டு. இன்னொரு நிலைமை அரசாங்கம் நிர்ணயித்த விலைக்கு மேலதிகமாக செலுத்தி தனியார் பிரிவினர் விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்கிறார்கள். இந்நாட்டின் பச்சை அரிசிக்கு வெளிநாடுகளில் பெரும் கிராக்கி உள்ளது.

ஏற்றுமதிக்கான பெரும் சந்தர்ப்பம் உள்ள வேளையில் அதிகளவு பணத்தை செலவழித்து வாங்கி களஞ்சியப்படுத்துவது நியாயமில்லை. அதனால் நெல்லை விலைக்கு வாங்குதல், தரமான முறையில் களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகித்தல் நடைபெற வேண்டும். அதற்காக அரச மற்றும் தனியார் பிரிவினரிடம் போட்டி இருக்க வேண்டும்





அரசு நெல்லை விலைக்கு வாங்கும் அளவு நாட்டின் மொத்த உற்பத்தியைப் பொறுத்தவரை நூற்றுக்கு பத்து சதவீதத்தை தாண்டுவதில்லை. தனியார் துறையினர் அதனை முற்றாகக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் போது சில முரண்பாடுகள் ஏறபடக் கூடும்.

இன்று அரிசியின் விலை அசாதாரணமாக அதிகரித்திருப்பது அரசாங்கத்திடம் உள்ள அளவை விட பல மடங்கு தனியார் பிரிவு வர்த்தகர்கள் சிலரின் கைகளுக்குச் சென்றிருப்பதனால் ஆகும். அதன் பலனாக அரசாங்கம் வெளியிடும் வர்த்தமானியையும் சவாலுக்கு உட்படுத்துகிறார்கள்.

அதே போன்று தற்போது அதிகமாக பேசப்படும் கோழி இறைச்சி உற்பத்தி, முட்டை உற்பத்தியும் முற்றாக தனியார் வழிநடத்தும் வியாபாரமாக மாறியுள்ளது. இங்கு முட்டை உற்பத்தியை ஒரு சிலரே மேற்கொள்கிறார்கள். கோழிக் குஞ்சுகள் உற்பத்தியையும் முக்கியமாக மூன்று நிறுவனங்களே மேற்கொள்கின்றன. பாரியளவில் உற்பத்தி செய்பவர்களுடன் போட்டி போட சிறிய உற்பத்தியாளர்களால் முடியாதுள்ளது. அவர்கள் வழங்கும் கோழிக் குஞ்சுகளை வாங்கி அவற்றைப் பராமரிக்க சிறிய உற்பத்தியாளர்களால் முடியாதுள்ளது.

மக்களின் புரதப் பாவனை கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக மாற்றமடைந்துள்ளது. இறைச்சி பாவனை அதிகரித்துள்ளது. மீன் பாவனை குறைந்துள்ளது. தானியப் பாவனை குறைவுக்கான காரணம் சிக்கலானது. பரபரப்பான சூழலில் காலை நேரம் குழப்பமானது. அதன் காரணமாக துரித உணவுகள் பேக்கரிகளில் வாங்கப்படுகின்றன. அது இல்லத்தரசிகளுக்கு சுலபமாகிறது.

மற்றைய விடயம் தானியங்களின் விலை அதிகம் என்பதாகும். இந்நாட்டு விவசாயிகள் தேவைக்குப் போதுமானளவு தானியங்களை விளைவிப்பதில்லை. அதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை விவசாய அதிகாரிகள் மேற்கொள்வதில்லை.

இங்கு காணப்படும் இன்னொரு நிலைமை உணவு உற்பத்தி பிரிவு ஒழுங்கமைக்கப்படாமையாகும். இலங்கையின் சந்தை நிலைவரம் மற்றும் பாவனையாளர்களின் விருப்பு வெறுப்பு பற்றிய தரவுகள் உள்ளன.

ஆனால் அவை பற்றி கவனம் செலுத்தப்பட்டுள்ளதா என்பது கேள்விக்குறியேயாகும்.

தற்போது செய்ய வேண்டியது என்னவென்றால் நாட்டில் உணவு உற்பத்தியை அதிகரிப்பதுடன், அந்த உற்பத்திகளை விவசாயிகளிடமிருந்து சரியான விலைக்கு பெற்று பாவனையாளர்களுக்கு வழங்க தேவையான வலையமைப்பை தயாரிக்க வேண்டும். தற்போது அரசாங்கம் இது குறித்து கவனம் செலுத்தி வருவதாகத் தெரிகிறது.

# முத்திரைகளுக்குள் மறைந்துள்ள நாட்டின் வரலாற்று இரகசியங்கள்

"முத்திரைகள் என்பது முற்றிலும் அரசியல் கருத்தியலாகும். இதனை நாங்கள் முழுமையாக ஆராய்ந்தால் எமது முழு வரலாற்றையும் அறிந்து கொள்ள முடியும். அதன் பிரகாரம் மனிதர்களின் சிந்தனையில் மாற்றத்தை ஏற்படுத்தலாம்" என்கின்றார் நிரோஷன பீரிஸ்.

பொழுதுபோக்காக ஆரம்பித்த முத்திரை சேகரிப்பு நாட்டம், பின்னாளில் அவற்றிலுள்ள விடயங்களை ஆராய்ந்து அவை எவ்வாறு எமது கலை, கலாசாரம், வாழ்வியலுடன் பின்னிப் பிணைந்துள்ளன என்பதை கற்று அதனை இன்று ஏனையோருக்கு கற்பித்து வருகின்றார் நிரோஷன பீரிஸ்.

'கியவன முத்தர' (முத்திரைகளை படித்தல்) என்ற அமைப்பையும் நிறுவி அதனூடாக இப்பணிகளை முன்னெடுக்கின்றார். "முத்திரையின் ஊடாக சமய, சமூக, கலாசார, பண்பாட்டு விழுமியங்கள், வாழ்க்கை முறை மட்டுமன்றி நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தலாம்" என கூறும் நிரோஷன, அதற்கான பணிகளை தற்போது நூலக மட்டத்தில் முன்னெடுப்பதாக குறிப்பிட்டார். அத்தோடு, பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் இதுதொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்குகளையும் நடத்தி வருகின்றார்.

"எமது நாட்டின் ஆரம்ப கால முத்திரைகளை பார்த்தால் இலங்கையின் பெயர் சிலோன் என்பதிலிருந்து ஸ்ரீலங்கா என மாற்றியமை, அரசியல் மாற்றம் என சகல விடயங்களையும் முத்திரைகள் பிரதிபலிக்கின்றன. வரலாற்று பிரசித்தி பெற்ற பொக்கிஷமாக முத்திரைகள் காணப்படுகின்றன. சில முத்திரைகளில் வருடங்கள், பெயர்கள் இல்லை. அவற்றை நான் புத்தகங்கள், இணையங்கள் போன்றவற்றில் தேடினேன். சிறிய முத்திரைகளை பெரிதாக்கி பார்த்த போது அதில் உள்ள விடயங்களை நாம் நன்கறிந்து கொள்ளலாம். இந்த சிறிய முத்திரையை ஆராய்ந்து ஆராய்ந்து செல்லும் போது, பல விடயங்கள் காணப்பட்டன. குயின் விக்ரோரியா, ஆறுமுகநாவலர், சித்திலெப்பை, சேர் பொன். அருணாச்சலம் ஆகியோர் தேசிய வீரர்களாக கருதப்பட்டுள்ளனர். இனம் மொழி பேதத்தை கடந்து அவர்கள் எமது நாட்டிற்காக உழைத்துள்ளனர். ஆனால், அவர்களை எத்தனை பேர் அறிவார்கள் என்பதே சந்தேகம்.

உதாரணமாக, பேராதனை பல்கலைக்கழகத்தின் 50 வருட பூர்த்தியை முன்னிட்டு முத்திரை வெளியிடப்பட்டது. இப்போது இந்த முத்திரையை வைத்துக் கொண்டு பேராதனை பலகலைக்கழக வரலாற்றை தேட வேண்டும். இலங்கையின் முதல் பல்கலைக்கழகமான இலங்கை பல்கலைக்கழகத்தை (பின்னர் பேராதனை பல்கலைக்கழகமாக மாறியது) நிறுவுவதற்கு இலங்கை பல்கலைக்கழக சங்கம் முன்னோடியாக காணப்பட்டது. இதற்கு சேர் பொன்னம்பலம் அருணாசலம், சேர் ஜேம்ஸ் பீரஸ் மற்றும் சேர் மார்க்கஸ் பெர்ணான்டோ ஆகியோர் வழிகாட்டியாக செயற்பட்டனர். அதன் பின்னர் அதனை எங்கு அமைப்பதென ஒரு சிக்கல் ஏற்பட்டது. கொழும்பு புல்லர்ஸ் வீதியில் அமைப்பதற்கு அப்போதைய அரசியல்வாதிகள் எதிர்ப்பு தெரிவித்தனர். அப்போதைய பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் ஆளுநரான ஹுக் க்ளிஃபோர்ட், நீதியரசர் எம். டி. அக்பர் தலைமையில் குழுவொன்றை நியமித்தார். இக்கதை இப்படியே நீண்டு செல்கின்றது. இந்த ஒரு சிறிய கதையில் பார்த்தால் தமிழ், சிங்களம், முஸ்லிம் இனத்தவர்கள், பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மதத்தவர்கள் அனைவரும் எமது நாட்டின் ஆணிவேரான கல்வி கட்டமைப்பை உருவாக்க பாடுபட்டுள்ளனர்.

சாதாரணமாக ஒரு முத்திரையைப் பார்த்தால் சிலவேளைகளில் எதுவும் விளங்காது. டி.எஸ்.சேனாநாயக்க பற்றி ஒரு முத்திரை உள்ளது. இப்போது இணையத்தில் அவர் பற்றி அறியலாம். நகர மண்டப பகுதியில் அவரது சிலையுண்டு. அதற்கு கீழ் அவர் பற்றிய சிறு குறிப்பு குறிக்கப்பட்டுள்ளது. ஆய்வாளர்களிடம் கேட்கலாம். நூலகங்களில் புத்தகங்களை தேடிப் படிக்கலாம். இப்படித்தான் தேட வேண்டும். இப்படி ஒவ்வொரு முத்திரைக்கும் பின்னால் பல கதைகள் உள்ளன. முத்திரையில் சொல்லப்படாத பல கதைகளையும் நாம் அறிந்துகொள்ளலாம். அதனை ஆராய்ந்து படிக்கும் போது எம்மில் ஒரு மாற்றம் ஏற்படுவதை மறுக்க முடியாது" என்றார் அவர்.

"உலகளாவிய ரீதியில் அச்சுறுத்தலை ஏற்படுத்திய கொரோனா வைரஸிற்கு எதிரான நடவடிக்கையை ஊக்குவிக்கும் பொருட்டு கடந்த 2020ஆம் ஆண்டு 5 முத்திரைகள் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இன, மத, மொழி பேதமின்றி எமது மக்கள் ஒன்றித்து வாழ்ந்தமைக்கு முத்திரைகள் ஒரு சான்று. சுண்டுக்குழி வித்தியாலயம், ஹாட்லி கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, பொன்னம்பலம் ராமநாதன், அறிஞர் சித்திலெப்பை, தேசிய மீலாதுன் நபி, திருக்குர்ஆன், கலாநிதி என்.எம்.பெரோரா, தமிழ் சிங்கள புத்தாண்டு, உலக சமய தினம் என இவை யாவற்றுக்கும் முத்திரைகள் உள்ளன. இதில் உலக சமய தின முத்திரையில் சகல மத இலட்சினைகளும் உள்ளன. எமது நாட்டின் பழங்குடியின மக்கள் பற்றியும் முத்திரைகள் வந்துள்ளன.

யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில் பிறந்த விவேகானந்தன் செல்வகுமார் (ஆனந்தன்) என்ற சட்டத்தரணி, உலக கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்த பெருமைக்குரியவர். நீச்சல் வீரரான இவர் 1984ஆம் ஆண்டு ஆங்கில கால்வாயை நீந்திக் கடக்க முயன்ற போது உயிரிழந்தார். இவரது ஞாபகமாக 1999ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கம் ஒரு முத்திரையை வெளியிட்டது. இவரைப் பற்றி அறிவதற்கு அந்த முத்திரையை படிக்க வேண்டும்.

இவர் பௌத்த மதத்தைச் சேர்ந்த அரசியல்வாதி மங்கள சமரவீரவின் மாமியான மானெல் அவர்களை திருமணம் செய்திருந்தார். இந்த விடயம் எம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்? ஆகவே முத்திரையை படிப்பதன் ஊடாக மக்களின் மனநிலையை மாற்றி அதனூடாக சிறந்த சமூகமொன்றை நிச்சயமாக கட்டியெழுப்ப முடியும்.

"முதலில் முத்திரைகளை சேகரிக்க பழக்க வேண்டும். அதன் பின்னர், அதனை வாசிக்க கற்றுக் கொடுக்க வேண்டும். பின்னர் ஒன்றோடொன்று தொடர்புபடுத்தி கற்பிக்க வேண்டும். பணம் கொடுத்து வாங்கா விட்டால் பரவாயில்லை. கடிதங்களில் வரும் முத்திரைகள், பழைய முத்திரைகள் என்பவற்றை சேகரித்து வகைப்படுத்த வேண்டும். பின்னர், அதுபற்றி நிச்சயமாக தேட ஆரம்பிப்பார்கள். கண்ணால் பார்த்து கற்பதை விட காதால் கேட்டு படிக்க பழகி விட்டோம். தேசிய கீதம் என்றதும் ஆனந்த சமரக்கோன் நினைவுக்கு வருகின்றார். ஆனால், அவரது முத்திரையை காண்பித்து இவர் யார் என்றால் பெரும்பாலானோருக்கு தெரியாது. காரணம், பெயரை கற்றோமே தவிர முகத்தை பார்க்கவும் இல்லை, தேடவும் இல்லை.

வரலாற்றை தனித்தனியாக படிப்பிக்கின்றனர். அதனை விடுத்து ஒன்றோடு ஒன்று தொடர்புபடுத்தி கற்பிக்க வேண்டும். இவை அனைத்திற்கும் முத்திரை உண்டு. அதே போன்று நூலகங்களிலும் இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்" என்பது நிரோஷனவின் கருத்தாகும்.

"எமது நாட்டைப் பொறுத்தளவில் முத்திரை சேகரிப்பில் தற்போது பெரும்பாலானவர்கள் ஆர்வமின்றி காணப்படுகின்றனர். சிலர் சேகரித்தபோதும், அதன் பின்னால் உள்ள கதைகள் பற்றி அறிந்திருக்கவில்லை என்றே கூறினர்.

அப்படி முத்திரை சேகரிப்பவர்கள் சிலரிடம் கேட்ட போது, முத்திரைகளை சேரித்து அதனூடாக சில விடயங்களை கற்பிக்க சிறுவர்களுக்கு கற்பிக்கலாம். எமது நாட்டின் சுதந்திரத்திற்கு பங்களித்த தேசிய தலைவர்கள் சகல சகல இனம், மதம், மொழி பேதமின்றி உள்ளனர். அவர்கள் பற்றி கற்பிக்கலாம். சிறுவர்கள் முதல் இதனை ஆரம்பிக்க வேண்டும்" என்றார் சட்டத்தரணி சந்துஷ் பெர்ணான்டோ.

'எமது நாட்டின் சகல விடயங்களும் எம்மை ஒன்றிணைக்கவே உருவாக்கப்பட்டன. பிரிந்து செல்வதற்கல்ல. ஆனால், பின்னர் அந்த நிலை மாறி விட்டது' என்றார் 82 வயதான முத்திரை சேகரிப்பாளரான லக்ஷ்மணன். இவர் திருகோணமலையைச் சேர்ந்தவர்.

'பழைய விடயங்களை மீட்டிப் பார்க்க முத்திரைகள் ஒரு சிறந்த விடயம். பாடசாலைகள், வரலாற்று பிரச்சித்தி பெற்ற இடங்கள், சிலரது முகங்கள் என்பவற்றை சில சந்தர்ப்பங்களில் காண முடியாமல் உள்ளது. நான் பல சந்தர்ப்பங்களில் முத்திரைகளை பார்த்து அவற்றை அறிந்து கொண்டேன்' என சுமார் 5000 முத்திரைகளை சேகரித்து வைத்துள்ள ஆசிரியரான இரத்தினபுரியைச் சேர்ந்த சுதர்ஷன் கூறினார். கிடைப்பதற்கரிய முத்திரைகளை சேகரிப்பதில் அலாதியான ஆர்வம் உள்ளதென தெரிவித்த ரந்திமா பெர்ணான்டோ என்ற முத்திரை சேகரிப்பாளர், அதனூடாக புதிய விடயங்களை தேடுவதாகவும் புதிய நபர்களை சந்திப்பதாகவும் குறிப்பிட்டார்.

இவர், எமது நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளில் காணப்படும் முத்திரை சேகரிப்பு தொடர்பான சங்கங்களிலும் உறுப்பினராக உள்ளார். ஒவ்வொரு சமூகத்தையும் பற்றி புரிந்து கொள்ள, முத்திரை வாசிப்பு சிறந்த அம்சம் என இவர் மேலும் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், முத்திரை சேகரிப்பாளர்களிடம் பொதுவாக உரையாடிய போது பெரும்பாலானவர்கள் இதனை பொழுதுபோக்காக மாத்திரமே செய்கின்றனர் என்ற விடயம் தெளிவாகியது.






**முத்திரை சேகரிப்பு என்பது வெறுமனே பொழுதுபோக்கு அல்ல; இன்றைய சமுதாயத்துக்கு மறைக்கப்பட்டுள்ள பல தகவல்களை முத்திரைகள் வெளிக்கொண்டு வருகின்றன என்கின்றனர் முத்திரை சேகரிப்பாளர்கள்**



கலாவர்ஷ்னி கனகரட்ணம் ...

# அங்கவீனமுற்ற, உயிரிழந்த இராணுவ வீரர்கள், கொடுப்பனவுக்காக ஆர்ப்பாட்டங்கள் அவசியமில்லை

## பாதுகாப்பு செயலாளர் கமால் குணரட்ண

அங்கவீனமுற்ற மற்றும் உயிரிழந்த இராணுவ வீரர்களின் மனைவிமார் கொடுப்பனவுகளை வழங்குமாறு வலியுறுத்தி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட வேண்டிய அவசியம் கிடையாது என பாதுகாப்பு செயலாளர் கமால் குணரட்ண தெரிவித்துள்ளார்.



அத்துடன் அவர்களது கோரிக்கையை நிறைவேற்றுவதற்கான சகல ஏற்பாடுகளும் நிறைவடைந்துள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அங்கவீனமுற்ற மற்றும் உயிரிழந்த இராணுவ வீரர்களின் மனைவிமார் பாதுகாப்பு அமைச்சின் கட்டட வளாகத்தில் அண்மையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களில் கணவனை இழந்தவர்கள் தமது கணவனுக்கு 55 வயது நிறைவடைந்த பின்னர் வழங்கப்படும் ஓய்வூதியக் கொடுப்பனவிற்கு பதிலாக சம்பளத்தை வழங்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

இந்த கோரிக்கையை நிறைவேற்றுவது இலகுவானதல்ல. எனினும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் கலந்துரையாடி, சுமார் ஒரு வருட முயற்சியின் பின்னர் அவர்களின் கோரிக்கையை வெற்றிகரமாக நிறைவேற்ற முடிந்துள்ளது.

இதற்கான அமைச்சரவை யோசனையில் பாதுகாப்பு செயலாளராக நான் கையெழுத்திட்டதோடு, அமைச்சராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கையெழுத்திட்டுள்ளார் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இலங்கையில் கொரோனாவினால் குணமடைந்தோர் தொகை உயர்ந்த மட்டத்தில்

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகி குணமடைபவர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் உயர்ந்த மட்டத்தில் காணப்படுகிறது. குணமடைபவர்களின் வீதம் 96.52 ஆக காணப்படுவதாக சுகாதார அமைச்சு அறிவித்திருக்கிறது.

நாட்டில் தொற்றிலிருந்து இதுவரை குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 91 ஆயிரத்து 456 ஆகும். அதேவேளை , இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகியிருப்பவர்களின் எண்ணிக்கை 94 ஆயிரத்து 848 ஆக உள்ளது. கொவிட் தொற்றுக் காரணமாக நாட்டில் 595 பேர் உயிரிழந்திருக்கிறார்கள்.

தற்போது வைத்தியசாலைகளில் மருத்துவச் சோதனையிலுள்ளவர்களின் எண்ணிக்கை 316 ஆகும்.

சிகிச்சை பெற்று வருவோரின் எண்ணிக்கை 2 இரண்டாயிரத்து 797 ஆகும். நாட்டில் 9 இலட்சத்து 25 ஆயிரத்திற்கும் அதிகமானோருக்கு கொவிட் தடுப்பூசி ஏற்றப்பட்டிருக்கிறது.

தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் ஏற்றும் நடவடிக்கை எதிர்வரும் 23ம் திகதி ஆரம்பிக்கப்படுமென்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

## அரசின் 5000 ரூபா ...

குறித்த கொடுப்பனவை எதிர்வரும் 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் சமுர்த்தி வங்கிகளினூடாக பெற்றுக்கொள்ள முடியும் என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

## வயற்காணிக்குள்...

நிகழ்வு ஒன்றில் கலந்து கொள்வதற்காக பயணித்த வானின் டயர் வெடித்ததில் வான் குடைசாய்ந்து, அருகில் உள்ள வயலுக்குள் வீசப்பட்டுள்ளது.

வான் முழுமையாக சேதமடைந்துள்ள நிலையில் அதில் பயணித்த இருவரில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## யாழ். மேயரின் கைது... (03ஆம் பக்கத் தொடர்)

முன்னெடுக்க வேண்டிய முறைகள் உள்ளன.

அதனைவிடுத்து அவரை பயங்கரவாதி போல் சித்தரித்து நாட்டில் அரசாங்கத்தினர் தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றார்கள்.

ஏப்ரல் 21 தாக்குதலுடன் தொடர்புடைய நபர்கள் இன்னும் அறியப்படாதுள்ளனர். எனவே, புதிய அச்சங்களை ஏற்படுவதை தவிர்த்து ஏப்ரல் 21 தாக்குதலுடன் தொடர்புடையவர்களுக்கு சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்து, அவர்களுக்கு தண்டனை பெற்றுக்கொடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

## புனித ரமழான் தலைப்பிறை ...

பண்பாட்டலுவல்கள் திணைக்களம், வளிமண்டலவியல் திணைக்களம் ஆகியவற்றின் உறுப்பினர்கள் உள்ளிட்ட சிலர் இதில் கலந்து கொள்ளவுள்ளதாக உலமா சபை செயலாளர் மௌலவி தாஸிம் தெரிவித்தார்.

இன்று தலைபிறை தென்பட்டால் நாளை முதல் புனித ரமழான் ஆரம்பமாகும்.

நாட்டின் எப்பகுதியிலும் பிறை தென்படாத போது நாளை மறுதினம் முதல் ரமழான் ஆரம்பமாகும் என்பது குறிப்பிடத் தக்கது. (பா)

## மீறுவோர் மீது...

புத்தாண்டு காலத்தில் முகக்கவசங்களை அணிந்து, சமூக இடைவெளிகளைப் பேணி முறையான சுகாதார நடைமுறைகளை கடைபிடிக்குமாறும் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேவேளை பண்டிகை காலங்களில் பொது சுகாதார விதிகளை மீறும் வகையில் செயல்படும் மக்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பொதுமக்கள் பின்பற்ற வேண்டிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளதாகவும், இந்த சுற்றறிக்கையின்படி, சுகாதார விதிமுறைகள் பின்பற்றப்படுவதை உறுதிப்படுத்த கடுமையான கண்காணிப்பு செய்யப்படுகிறது எனவும் குறிப்பிட்டார்.

கடந்த சில நாட்களில் பொலிஸ் அதிகாரிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது,மக்கள், கடை உரிமையாளர்கள் மற்றும் பேருந்து ஊழியர்கள் சரியான சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்றவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

இவற்றின் விளைவாக மற்றும் இந்த விதிமுறைகள் சரியாக கடைப்பிடிக்கப்படுவதை உறுதி செய்ய, அனைத்து மூத்த பொலிஸ் அதிகாரிகளுக்கும் இந்த சுற்றறிக்கை வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதனால் நேற்று முதல் பொலிஸாரினால் விசேட சோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்க சுகாதார வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்ட பின்னர் பொலிஸ் தலைமையகம் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் ஒரு சிறப்பு சுற்றறிக்கையினை வெளியிட்டுள்ளது.

சுகாதார வழிகாட்டுதல்களை மீறுவதாகக் கண்டறியப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க குறித்த சுற்றறிக்கையின் கீழ், நேற்று (ஞாயிற்றுக்கிழமை) முதல் சிறப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

கடைகள், பொது போக்குவரத்து மற்றும் ஏனைய இடங்களை ஆய்வு செய்ய பொலிஸார் பணியில் அமர்த்தப்பட்ட நிலையில், கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க சுகாதார அமைச்சகம் பிறப்பித்த சுகாதார வழிகாட்டுதல்கள் கடுமையாக மீறப்படுவதாக அஜித் ரோஹன தெரிவித்தார்.

பெரும்பாலான மக்கள் முகக்கவசம் அணியவில்லை என்றும் சமூக தூரத்தை பராமரிக்கவில்லை என்றும் அவர் சாடினார்.

ஹோட்டல் மற்றும் ஏனைய நிறுவனங்கள் சுகாதார வழிகாட்டுதல்களை நெருக்கமாக பின்பற்றவில்லை என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

இதன் விளைவாகவே பொலிஸார் தகுந்த நடவடிக்கை எடுக்க சிறப்பு சுற்றறிக்கை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மாநகரை தூய்மையாக்கும்...

உள்ளங்களுக்கும் நான் சிரம் தாழ்த்தி நன்றிகளை கூறிக்கொள்கிறேன்.

“தூய்மையான நகரம், தூய்மையான கரங்கள்” என்று நாங்கள் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிக்கு அமைவாக நடந்து கொள்வதே யாழ்.மாநகர மக்களுக்கான எனது பணியாகும். அந்த பணியை செம்மையாகவும், முன்மாதிரியாகவும் செய்வதற்கு எடுத்த முயற்சியை மிக தவறாக வியாக்கியானம் செய்து என்னை கைது செய்தார்கள்.

மிக நெருடலான அந்த சூழலில் மக்கள், உள்நாட்டு வெளிநாட்டு அரசியல் தலைவர்கள், சட்டத்தரணிகள், தூதுவராலயங்கள், ஊடகங்கள், புலம்பெயர் உறவுகள், நண்பர்கள், ஆதரவாளர்கள் எனக்காக கொடுத்த குரல் எனக்கு ஆறுதலளித்தது மட்டுமல்லாமல் என்னை பிரமிப்பில் ஆழ்த்தியது.

என்னுடைய பயணம் மிக நோ்மையாது, வெளிப்படையானது, மக்களுக்கானது.

பாதை எப்படியானது என்பதை தெரிந்து கொண்டுதான் பயணத்தையே ஆரம்பித்திருக்கிறேன். ஆதலால் எந்தவொரு சூழ்நிலையிலும் என்னுடைய பணயம் நிற்கப்போவதில்லை. மக்களுக்கான எனது பயணம் தொடரும், எனக்காக குரல் கொடுத்த அத்தனை உள்ளங்களுக்கும், அமைப்புக்களுக்கும், மன நிறைவுடன் சிரம் தாழ்ந்து நன்றி கூறுகிறேன்.

## அமைச்சர் தினேஷுடன்...

சந்தித்துள்ளனர். கொழும்பிலுள்ள வெளிவிவகார அமைச்சில் நேற்று இந்தச் சந்திப்பு நடைபெற்றது. இலங்கை மற்றும் அமெரிக்காவுக்கு இடையிலான இரு தரப்பு உறவுகள் குறித்து இருவரும் கலந்துரையாடினர் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. இதேநேரம், இலங்கை – அமெரிக்க உறவை மேலும் வலுப்படுத்திக்கொள்வது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது என்றும் வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## மக்கள் வீண் அச்சம்...

எண்ணெய் இதுவரை சந்தைகளில் கண்டறியப்படவில்லை என்பதை தெரிவித்த அவர், பரிசோதனைகளின் முடிவில் அவற்றின் உண்மை நிலை கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 109 தேங்காயெண்ணெய் மாதிரிகளின் பரிசோதனை முடிவுகள் பெற்றுக் கொள்ள ப்பட்டுள்ள நிலையில் மக்கள் அது தொடர்பில் வீண் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ)

## பாக்குநீரிணையை...

அவர், குறித்த சாதனையை 28 மணி 19 நிமிடங்கள் 58 விநாடிகளில் பதிவு செய்துள்ளார்.

மாத்தறை மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவரான ரொஷான் அபேசுந்தர, 2008ஆம் ஆண்டு விமானப்படையில் இணைந்தார். அவர் கடந்த மார்ச் மாதம் 21ஆம் திகதி 49 கிலோமீற்றர் கடல் பயணத்தை 23 மணிநேரத்தில் கடந்து தேசிய சாதனையை பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதற்குமுன்னர் 1971ஆம் ஆண்டு குமார் ஆனந்தன் என்பவர் பாக்கு நீரிணையை நீந்தி கடந்து மீள திரும்பிய முதலாவது இலங்கையர் என்ற சாதனையை படைத்தார். 28 மணித்தியாலங்கள் 19 நிமிடங்கள் 43 செக்கன்களில் பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து இந்தியாவிற்கு சென்று மீண்டும் நாடு திரும்பிய இலங்கை விமானப்படையின் ரொஷான் அபேசுந்தர புதிய ஆசிய சாதனையை பதிவு செய்தார்

அத்துடன், கடந்த மார்ச் 19ஆம் திகதி தலைமன்னாரில் இருந்து தனுஷ்கோடி வரை நீந்தி கடந்து சென்று இந்தியாவின் தெலுங்கானா மாநிலத்தை சேர்ந்த 48 வயதான ஆசிரியர் ஒருவரும் சாதனை படைத்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## இஸ்லாமிய அடிப்படைவாத...

நல்லாட்சி அரசாங்கத்தில் இஸ்லாமிய அடிப்படைவாதம் அரச ஆதரவுடன் எழுச்சி பெற்றது. ஜெனிவா விவகாரம் அரசாங்கத்துக்கு பெரும் சவாலாக காணப்பட்டது. சர்வதேசத்தில் மண்டியிடாமல் இராணுவத்தினரை அரசாங்கம் பாதுகாத்துள்ளது. ஜெனிவா விவகாரத்தை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தில் ஏற்படும் சவால்களை வெற்றிக்கொள்ள அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்றார்.

## கோழி இறைச்சியின்...

கோழி விற்பனையாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. கூட்டுறவு, விற்பனை அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இதில் கோழி இறைச்சி உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் கலந்துக்கொண்டனர். சந்தையில் கோழி இறைச்சியின் விலை அதிகரித்ததை அடுத்து புறக்கோட்டை கோழி இறைச்சி விற்பனையாளர்கள் விற்பனை நடவடிக்கையில் இருந்து விலகுவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தனர். எவ்வாறாயினும், கலந்துரையாடலின் நிறைவில் கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன, பொயிலர் கோழி இறைச்சி ஒரு கிலோ 430 ரூபாவுக்கு விற்பனை செய்ய குறித்த சங்கங்கள் விருப்பம் வெளியிட்டுள்ளதாக தெரிவித்தார். இறுதியாக ஒரு கிலோ கோழி இறைச்சிக்கான அதிகப்பட்ச சில்லறை விலையாக 600 ரூபாவை நிர்ணயிப்பதற்கு தீர்மானித்துள்ளது.

## இரும்புகளை இரகசியமாக....

யாழ். ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

திறந்த விலை மனுக்கோரல் இன்றி சீமெந்து தொழிற்சாலையின் இரும்புகளை தெற்கைச் சேர்ந்தவர்களுக்கு விற்பனை செய்வதற்கு சில அரச அதிகாரிகளும் உடந்தையாக உள்ளதாக அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

லங்கா சீமெந்து நிறுவனத்தில் சுமார் 250 இற்கு மேற்பட்டவர்கள் பங்குதாரர்களாக உள்ள நிலையில் அவர்களுக்கு தெரியாமல் இரும்புகளை எடுத்துச் செல்வதற்கான முயற்சிகளில் முழு வீச்சில் இடம்பெற்று வருவதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

யாழ்ப்பாணத்தில் இரும்பின் கொள் முதல் விலை சுமார் 60 ரூபாய்க்கு மேல் காணப்படுகின்ற நிலையில் 20 தொடக்கம் 25 ரூபாய்க்கு லங்கா சீமெந்துத் தொழிற்சாலையின் இரும்புகளை தனியாருக்கு விற்க முயற்சிகள் இடம்பெறுகின்றன.

கடந்த காலங்களில் சிமெந்து தொழிற்சாலையில் இருந்து திருடப்பட்ட இரும்புகள் தொடர்பில் தகவல்களை வெளிப்படுத்திய எனக்கு 33 மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை. ஏனைய சக உத்தியோகத்தர்களையும் மட்டுப்படுத்தப்பட்ட கொடுப்பனவை கொடுத்து இடைநிறுத்தியுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார். இந்தக் குற்றச்சாட்டு குறித்து விபரங்களை அறிய யாழ்.மாவட்ட அரச அதிபரைத் தொடர்புகொண்டபோதும் இது குறித்து ஆராய்ந்து தகவல்களைத் தெரிவிப்பதாக அவர் கூறினார்.

## பிரதமர், முன்னாள்... (03ஆம் பக்கத் தொடர்)

உள்ளிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அங்கத்தினர்கள் பலரும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டுள்ளனர்.

இந்த சந்திப்பின்போது நாட்டில் தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில தினங்களுக்கு முன் அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 11 கட்சிகளின் தலைவர்கள் ஒன்றிணைந்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர் அதற்கான ஏற்பாடுகளை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியே மேற்கொண்டிருந்தது. கூட்டமும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்திலேயே இடம்பெற்றது.

அதற்கிணங்க மேற்படி கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கும் தெரிவிக்கப்படும் என அப்போது தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அதனை அமைச்சர் மஹிந்த அமரவீர வெளியிட்டிருந்தார்.

ஹெல உறுமய கட்சி, ஜனநாயக இடதுசாரி முன்னணி உட்பட 11 கட்சிகளின் தலைவர்கள் இந்த பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டிருந்தனர்.

அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மையை அடிப்படையாகக் கொண்டே மேற்படி பேச்சுவார்த்தை நடைபெற்றதாக அவர்கள் தெரிவித்திருந்தனர். அந்தப் பேச்சு வார்த்தையின் போது மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஸ)

## போலி நாணயத்தாள் ... (03ஆம் பக்கத் தொடர்)

அவர் அந்த நாணயத் தாளை உபயோகித்து வர்த்தக நிலையமொன்றில் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு முயன்றுள்ளார். என்பதை சுட்டிக்காட்டியுள்ள பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மக்கள் அது விடயத்தில் கவனமாக செயற்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார். அதேவேளை புத்தாண்டு காலங்களில் கொரோனா வைரஸ் பரவுவதை தவிர்த்துக் கொள்ளும் வகையில் மக்கள் செயல்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். இந்த விடயங்களை கவனத்தில் கொண்டு செயற்பட்டால் மாத்திரமே புது வருடத்தை மகிழ்ச்சியாகக் கொண்டாட முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.(ஸ)

## இளவரசர் பிலிப் மறைவுக்கு... (03ஆம் பக்கத் தொடர்)

உலகப் போரின்போது கடற்படை அதிகாரியாகப் பணியாற்றிய மற்றும் உயர் அட்மிரல் பிரபு பதவியில் இருந்த பிலிப்பின் நினைவாக கடலில் றோயல் கடற்படைக் கப்பல்களில் அவருக்கு துப்பாக்கி வேட்டுக்களால் வணக்கம் செலுத்தப்படவுள்ளது.

மேலும், பிலிப்பின் மறைவுக்கு உலக நாடுகளின் தலைவர்கள் மற்றும் அரச குடும்பத்தினர்கள் தமது அனுதாபங்களைத் தெரிவித்து வருகின்றனர்.

இதனைவிட, அவுஸ்ரேலியாவில், கான்பெராவில் உள்ள பாராளுமன்ற வளாகத்திற்கு வெளியில், இளவரசர் பிலிப் இறந்ததைக் குறிக்கும் வகையில் 41 துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு வணக்கம் செலுத்தப்பட்டுள்ளது.

## இவ்வருடம் நடத்த ...

அதன் சட்டமூலத்தை தயாரித்து அது தொடர்பில் பொதுமக்கள் கருத்துக்கான காலத்தை ஒதுக்கி, சட்டமா அதிபரின் கைகளுக்குச் சென்று மீண்டும் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இவ்வாறு நீண்ட நடைமுறை இருப்பதால் இவ்வருடத்திற்குள் மாகாண சபை தேர்தலை நடத்த முடியும் என நான் நினைக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

## வில்பத்து காடழிப்பு தீர்ப்புக்கு ...

பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

புத்தளத்தில் சனிக்கிழமை (10) இடம்பெற்ற கூட்டத்தில், வில்பத்து காடழிப்பு வழக்கு தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் மேலும் கூறுகையில்,

“1990 ஆம் ஆண்டு வடமாகாணத்திலிருந்து முஸ்லிம்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட பின்னர், சுமார் 20 வருடங்களாக தத்தமது கிராமங்களுக்கு மீளக் குடியேற முடியாத சூழ்நிலை இருந்தது. யுத்தம் முடிந்த பின்னர், அவர்கள் தமது கிராமங்களில் மீண்டும் சென்று வாழ விரும்பினர். அந்தவகையில், மன்னாருக்கும் புத்தளத்துக்கும் இடையிலான எல்லைப் பகுதியில், மன்னார் மாவட்டத்தின் இருக்கும் மறிச்சுக்கட்டி, பாலைக்குளி, கரடிக்குளி, முள்ளிக்குளம் ஆகிய கிராம மக்களும் தமது கிராமங்களுக்கு சென்றபோது, அவர்கள் வாழ்ந்த பாரம்பரிய இடங்கள் காடுகளாக காணப்பட்டன. எனவே, அவற்றை துப்புரவு செய்து அங்கு மீளக் குடியேறினர்.

அவர்கள் குடியேற்ற காணிகள் போதாதிருந்ததினால் அரச அனுமதியுடன், முறையான வகையில், ஜனாதிபதி செயலணியின் வழிகாட்டலில், அரசாங்க அதிபர் மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோரின் ஒப்புதலுடன், அவர்களில் சிலருக்கு குடியேற்றத்துக்கென அரச காணிகளும் வழங்கப்பட்டன.

இந்தக் குடியேற்றத்தை இனவாதிகளும் சில ஊடகங்களும் பெரிதுபடுத்தி, பெரும்பான்மை மக்களை பிழையாக வழிநடத்தினர். திட்டமிட்டு பிரசாரங்களை மேற்கொண்டு, அங்குள்ள மக்களுக்கு பல்வேறு இன்னல்களையும் ஏற்படுத்தினர். அந்தக் குடியேற்றத்துக்கு எதிராக நீதிமன்றில் வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டு, தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே, அந்தத் தீர்ப்புக்கு எதிராகவே உச்ச நீதிமன்றத்தை நாம் நாடியுள்ளோம்” இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## மலையத்தில் புதியதொரு ...

ஒன்றினை உருவாக்கியதாக அகில இலங்கை தொழிற்சங்க காங்கிரஸின் பொதுச் செயலாளர் அம்மாசி எஸ். நல்லுசாமி தெரிவித்தார்.

குறித்த தொழிற்சங்கத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று (11) ஹட்டன் சிவ ஸ்ரீ சிவசுப்பிரமணிய தேவஸ்த்தானத்தில் விசேட பூஜைகளுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இதன் தலைவராக நேசன் திருநேசன் அவர்களும் பொருளாளராக கந்தசாமி லோகேஸ்வரி ஆகியோர் உட்பட பலர் செயப்படுகின்றனர்.

குறித்த பூஜை வழிபாடுகளினை தொடர்ந்து தொழிற்சங்கம் பற்றி விளக்கமளிக்கும் ஊடக சந்திப் பொன்று ஹட்டனில் நடைபெற்றது அதில் அவர் அங்கு தொடந்து கருத்து தெரிவ்ககையில் இன்று தொழிற்சசங்கங்கள் என்பது தொழிலாளர்களின் உரிமையினை பாதுக்காகின்ற ஒரு அமைப்பு ஆனால் தொழிலாளர்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகியிருக்கின்றார்கள் அதற்கு நான் தொழிற்சங்கங்களை குறை கூறவில்லை. நடைமுறையிலே சிக்கல்கள் இருக்கின்றன. என்று தான் கூறுகிறேன். மலையகத்தில் பல தொழிற்சங்கங்கள் இருந்தாலும் கூட அவை அனைத்து தொழிலாளர் உரிமை தொடர்பாக அக்கறை கொள்ளாது தங்களது சுய நலத்திற்காக அரசியல் லாபத்திற்காக கொண்டு செல்லும் நிலையினையே காணுகின்றோம.; தோட்டத்தொழிலாளர்கள் உரிமைகள் தொடர்பாக எந்த ஒரு தொழிற் சங்கமும் அக்கறை கொள்வதாக தெரியவில்லை.இன்று தொழிலாளர்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில் ரீதியான எத்தனையோ சட்டங்கள் உள்ளன. குறிப்பாக சர்வதேச தொழிலாளர் சம்மேளனம் தொழிலாளர்களுக்காக எண்ணற்ற சட்டங்களை இயற்றியுள்ளது.அதிலுள்ள கொள்ளைகள் பிரகடனங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா? என்று கேட்டால் அந்த கேள்வி பதில் கிடையாது.சுகாதாரமும் தொழில் பாதுகாப்பு தொழிலாளர்களுக்கு இருக்கின்றதா? என்று பாரத்தால் மலையகத்தில் அதுவும் கிடையாது அதற்கு சிறந்த உதாரணமாக இன்று தொழிலாளர்கள் சிறுத்தை தாக்குதலுக்கு உள்ளாகின்றனர.; தேன் பூச்சி குளவி கொட்டுதல்களுக்கு ஆளாகின்றனர். இது போன்று எத்தனையோ துன்பங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் ஆனால் இவை எதற்குமே எந்த தொழில் பாதுகாப்பு வழங்கப்படுவதில்லை என்றார்

## மைத்திரியும் சகாக்களும்...

குற்றவாளியாகக் குறிப்பிடப்பட்டிருந்தும் அவருக்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுக்கப்படாதது குறித்த அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

அவரது இந்தக் கருத்துத் தொடர்பில் கவலையடைவதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர, பேராயர் அரசியல் செய்கின்றார் எனவும் விமர்சனங்களை முன்வைத்திருந்தனர்.

இது தொடர்பில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஊடகங்களிடம் பதிலளிக்கும்போது,

"இலங்கையில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல்களில் மிக மோசமான தாக்குதலே ஈஸ்டர் தாக்குதல். இந்தத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் குற்றவாளி என்று பெயரிட்டுள்ளது.

நாட்டின் தலைவர் என்ற ரீதியில், பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் அவரே இந்தத் தாக்குதலுக்கு பொறுப்புக்கூறவேண்டியவர். அவர் பொறுப்பற்ற விதத்தில் செயற்பட்டதால்தான் அவரைக் குற்றவாளி என்றுவிசாரணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. அதனால்தான் அவர் மீது உடனடியாக சட்டநடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அரசை நான் கோருகின்றேன்.

இந்த உண்மையை நான் உரத்துச் சொன்னதால் எனது கருத்து அவருக்கு மனக் கவலையையும் அவரின் சகாக்களுக்கு விமர்சனங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

உண்மையில் அவர்கள் வெட்கித் தலைகுனிய வேண்டியவர்கள். அவர்களின் பொறுப்பற்ற நடவடிக்கைகளினால்தான் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். உயிரிழந்தவர்களுக்கு நீதி கிடைக்கவேண்டுமெனில், பரிகாரம் கிடைக்கவேண்டுமெனில் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

எனவே, ஜனாதிபதி விசாரணை அறிக்கையில் குறிப்பிட்ட பரிந்துரைகளை விரைவில் செயற்படுத்துமாறு அரசிடம் நான் கோருகின்றேன். இந்தத் தாக்குதலுடன் தொடர்புடைய அனைவர் மீதும் அரசு உடன் சட்டநடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

புத்தாண்டு காலப்பகுதியில்

# சன நடமாட்டமுள்ள பகுதிகளில் சிவில் உடையில் பொலிஸார்

சுப்பிரமணியம் நிஷாந்தன்

பண்டிகை காலத்தில் கொரோனா தொற்று பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் சனநடமாற்றம் அதிகமாக உள்ளப்பகுதிகளில் சிவில் உடை அணிந்த பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ் மாஅதிபருமான அஜித் ரோஹன தெரிவித்தார்.

புத்தாண்டு காலப்பகுதியில் பொலிஸார் மேற்கொள்ளும் சுற்றிவளைப்புகளில் கொவிட்19 தொற்றை கட்டுப்படுத்தும் சுகாதார வழிகாட்டல்களை மீறும் நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கையெடுக்கப்படும்.

வர்த்தக நிறுவனங்களை நடத்திச் செல்லும் நபர்கள் மற்றும் நுகர்வோர் உரிய சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றுகின்றனரா என்பதை சிவில் உடையில் நேற்று முதல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பொலிஸார் கண்காணிப்பதுடன், வழிகாட்டல்களை மீறுபவர்களுக்கு எதிராக நடவடிக்கைகளும் எடுப்படும்.

அதேபோன்று பஸ்களில் சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய பயணிகள் அழைத்துச் செல்லப்படுகின்றனரா என்பது குறித்தும் அவதானம் செலுத்த விசேட பொலிஸ் அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

புத்தாண்டு காலப்பகுதியில் இலங்கையில் அதிகமான விபத்துகள் ஏற்படுவதால் அவற்றை தடுப்பதற்காக 24 மணித்தியாலமும் விசேட நடவடிக்கைகள் இடம்பெறும் என்றும் அவர் கூறினார்.

# கலைகளை வளர்ப்பதன் மூலம் இன ஒற்றுமையை வலுப்படுத்த முடியும்

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர்

ஒலுவில் விசேட நிருபர்

கலைகளை வளர்ப்பதன் ஊடாக இன ஒற்றுமையை வலுப்படுத்த முடியுமென, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ஏ.பி.எம். அஷ்ரப் தெரிவித்தார்.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரனையுடன் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் மாகாணத்திலுள்ள கசீதா கலைஞர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு சனிக்கிழமை (10) அட்டாளைச்சேனை கலாசார நிலையத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஏ.எல். தௌபீக் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

கலைகளை வளர்ப்பதன் ஊடாக ஆளுமையை விருத்தி செய்து கொள்ளலாம். எமது பாரம்பரிய கலை கலாசார பண்பாடுகளை இளம் சமூகம் இன்று புறம் தள்ளி வேறு திசையை நோக்கி பயணிக்கின்றார்கள்.

தற்போதைய காலகட்டத்தில் கலை கலாசார பாரம்பரியத்தினை சகலரும் தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும். இது தொடர்பான தேடல்களிலும் இளைஞர்கள் ஈடுபட வேண்டும்.

கசீதா கலையை அரபு மொழில் மட்டுமல்லாது தமிழ் மொழியிலும் எதிர்காலத்தில் சிங்கள மொழியிலும் உருவாக்க வேண்டும்.

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்

(வலு அமைச்சு)

**Supply & Installing of Aluminium Composite Cladding Work to the Roof Top of CPC Head Office**

**B/31/2021**

1. கீழே விபரிக்கப்பட்டவாறும் அண்ணளவாக 3.0 மில்லியன் ரூபா ஆகுசெலவில் மதிப்பீடு செய்யப்பட்டதும் **"Supply & Installing of Aluminium Composite Cladding work to the Roof Top of CPC, Head Office"** என்பதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.
2. இவ்வேலையின் நிர்மாணக் காலப்பகுதியானது ஒரு (01) மாதமாகும்.
3. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
4. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் சி-8 அல்லது சி-7 **ICTAD** பதிவை பூர்த்தி செய்பவராகவுமிருத்தல் வேண்டும்.
5. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகைமைத் தேவைப்பாடுகள் பின்வருமாறு: இக்கேள்விக்கு விண்ணப்பிக்கும் விலைமனுதாரர்கள் சி-8 அல்லது சி-7 **ICTAD** பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரிடமிருந்து பெற்று **http://ceypetco.gov.lk/public -tenders/.** என்ற இபெகூ இன் உத்தியோகபூர்வ இணையதளத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
6. 2021.05.04 ஆம் திகதி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமான 2,000 ரூபாவை (அதாவது: ரூபா **1,851 + 8%** பெசேவ) செலுத்திய பின்னர், மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
7. கோவிட்-19 தொற்று காரணமாக, விலைமனுதாரர்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தை http://ceypetco.gov.lk/public-tenders/. என்ற இபெகூ இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாமென்பதுடன் அனைத்து பணக்கொடுப்பனவுகளும் மக்கள் வங்கியின் தலைமை அலுவலகத்திலுள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் 004100110208633 என்ற கணக்கிலக்கத்திற்கு செலுத்தப்படலாம். விலைமனுவுடன் வங்கி பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை தயவு செய்து சமர்ப்பிக்கவும்.
8. விலைமனுக்கள் இரு பிரதிகளில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் 2021.05.05 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
9. விலைமனுக்கள் அவைகளை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியிலிருந்து அறுபத்தி மூன்று (63) நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
10. அனைத்து விலைமனுக்களும் 50,000 ரூபா பெறுமதியானதும் வங்கியொன்றிலிருந்து அல்லது திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதி கம்பனியிலிருந்து பெறப்பட்ட விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது 2021.08.05 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

**மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரி பின்வருமாறு:**
**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,**
**முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள் மே/பா,**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள் செயற்பாடு,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**1 ஆம் மாடி, இல. 609, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09.**
**தொலைபேசி: 5455331. தொலைநகல்: 5455424.**

# அரசு அபிவிருத்தி திட்டத்தில் பாகுபாடு காட்டவில்லை

திலீபன் எம்.பி

வவுனியா விசேட நிருபர்

அரசாங்கம் அபிவிருத்தி திட்டத்தில் பாகுபாடு காட்டவில்லை. இந்த அரசாங்கத்தை விமர்சிப்பவர்கள் கூட அரசாங்கத்தால் பயன் அடைவதை மறந்து விடுகிறார்கள் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு.திலீபன் தெரிவித்தார்.

வவுனியா, வேப்பங்குளம் பகுதியில் சமுர்த்தி திணைக்களத்தின் புத்தாண்டு சந்தையை நேற்று திறந்து வைத்து உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,.......

எமது நாட்டில் தினம் தினம் மக்களுக்கு பயன்படக் கூடிய பாரியளவிலான அபிவிருத்திகள் இடம்பெற்று வருகின்றன. ஆனால் வடக்கில் உள்ள சிலர் எமது ஆளுமை மிக்க அரசாங்கத்தை வெறும் விமர்சனத்தால் மட்டும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

அந்த விமர்சிப்பவர்கள் கூட இந்த அரசாங்கத்தால் பயன் அடைவதை மறந்து விடுகிறார்கள். இந்த அரசாங்கம் அம்பாந்தோட்டைக்கு ஒரு அபிவிருத்தி திட்டத்தையும் வவுனியாவில் கிள்ளித் தெளிப்பதைப் போன்றும் செய்யவில்லை. அம்பாந்தோட்டைக்கு என்ன அபிவிருத்தியோ அதே அபிவிருத்தியே வவுனியா மாவட்டத்திலும் சம நேரத்தில் நடைபெறும். ஆகவே இந்த அரசாங்கத்தில் பாகுபாடு இல்லை. ஆனால் விமர்சிப்பவர்கள் விமர்சித்துக் கொண்டு தான் இருப்பார்கள்.

## பொருட் கொள்வனவு அறிவித்தல்

### அரசாங்க அச்சுத் திணைக்களம்

N-102

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் பொருட் கொள்வனவுத் தலைவர் பின்வரும் பண்டங்கள் தொடர்பில் உற்பத்தியாளர்கள், அவர்களின் பிரதிநிதிகள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்களிடமிருந்து விலை மனுக்களைக் கோருகின்றார்.

Item 01-

Strapping Rolls for Fully Automatic Heavy Duty strapping machines - 700 Rolls

விலைமனு ஏற்றுக் கொள்ளும் இறுதித் தினம் 2021.04.30ஆந் திகதி பி. ப. 2.00 மணி வரையாகும்.

விலைமனு குறிப்பு இல. SCP02/NCB08/STR/2021-9

மேற்குறிப்பிட்ட விலைமனு தொடர்பில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000/- கொண்டதும் அத்துடன் விலை மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி தினத்துக்கு முந்திய தினம் பி. ப. 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கப் பெறும் எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பேரில் அரசாங்க அச்சுத் திணைக்கள, வழங்கல் பிரிவில் கடமை நாட்களில் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணி வரை விலைமனு தொடர்பான ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். மேலதிக விபரங்கள், கடமை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 வரை எமது அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**கங்கானி லியனகே,**
**பொருட் கொள்வளவுத் தலைவர்.**

**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு -08.**

2021.04.12
**தொலைபேசி: 011-2694898**
**இணையத்தளம்: www.documents.gov.lk**

150 ஏக்கரில் 400 மில். அமெரிக்க டொலரில்

# தெற்காசியாவின் முதலாவது டிஸ்னி லேண்ட் இலங்கையில்

தெற்காசியாவின் முதலாவது 'டிஸ்னி லேண்ட்' இலங்கையில் நிர்மாணிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. மலேசியா மற்றும் கொரியாவின் முதலீட்டுடன் கொரிய நிறுவனமான Korea Cavitation Co வினால் இதன் நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

'டிஸ்னி லேண்ட்' அமைப்பதற்காக 150 ஏக்கர் காணியை பெற்றுக் கொள்வதற்கு இலங்கை அரசாங்கத்துடன் கலந்துரையாடல்கள் நடைபெற்று வருவதாக கொரிய நிறுவனத்தின் இலங்கை பிரதிநிதி குறிப்பிட்டுள்ளார்.

பிரதானமாக கொரியா மற்றும் மலேசியா உள்ளிட்ட நாடுகளிடமிருந்து 400 மில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டு நிதி உதவி இந்தத் திட்டத்திற்கு பெறுவதற்கு எதிர்பார்ப்பதாகவும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்படுவதற்கு முன்னர் 30 வீதம் நிதி சேகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படுகின்ற நிலையில், தடுப்பூசி போடும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதனால் இந்தியாவும் முதலீடு செய்யுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் திட்டம் மலேசியாவின் Genting Highlands திட்டத்திற்கு சமமானதாகும். இதில் விசேட ரயில் வீதி உட்பட பல்வேறு விடயங்களை உள்ளடக்க எதிர்பார்ககப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். சுற்றுலா பயணிகள் தங்குவதற்கு 300 அறைகள் கொண்ட ஹோட்டல்களையும் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பொருட் கொள்வனவு அறிவித்தல்

### அரசாங்க அச்சுத் திணைக்களம்

N-99

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் பொருட் கொள்வனவுத் தலைவர் பின்வரும் பண்டங்கள் தொடர்பில் உற்பத்தியாளர்கள், அவர்களின் பிரதிநிதிகள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்களிடமிருந்து விலை மனுக்களைக் கோருகின்றார்.

Hot Melt Glue For Perfect Binding machine BQ 470

| Item | Qty | Bid Reference No | Bid Fee |
|---|---|---|---|
| Side Glue (HM 409) | 100 kg | SCP02/NCB13/S/B/ Glue/2019-20 | Rs.1500 |
| Back Glue (HM 225) | 600 kg | | |

விலைமனு ஏற்றுக் கொள்ளும் இறுதித் தினம் 2021.0505ஆந் திகதி பி. ப. 2.00 மணி வரையாகும்.

மேற்குறிப்பிட்ட விலைமனு தொடர்பில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1500/- கொண்டதும் அத்துடன் விலை மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி தினத்துக்கு முந்திய தினம் பி. ப. 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கப் பெறும் எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பேரில் அரசாங்க அச்சுத் திணைக்கள, வழங்கல் பிரிவில் கடமை நாட்களில் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணி வரை விலைமனு தொடர்பான ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். மேலதிக விபரங்கள், கடமை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 வரை எமது அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**கங்கானி லியனகே,**
**பொருட் கொள்வளவுத் தலைவர்.**

**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு -08.**

2021.04.12
**தொலைபேசி: 011-2694898**
**இணையத்தளம்: www.documents.gov.lk**

## திகதி 10.04.2021 சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் : 4453
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 14,165,660.00
ஆங்கில எழுத்து: A — வெற்றி இலக்கங்கள்: 4 0 9 6 5 5
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 17,835,047.00

**கொவிசெத** (Govisetha) — சீட்டிழுப்பு இலக்கம் : 2748
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,713,160.00
ஆங்கில எழுத்து: U — வெற்றி இலக்கங்கள்: 06 07 12 60
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 64,520,405.60

**Mega POWER மெகா பவர்** — கோடி 10 — சீட்டிழுப்பு இலக்கம் 813
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,538,700.00
ஆங்கில எழுத்து: B — சுப்பர் இலக்கம்: 03 — வெற்றி இலக்கங்கள்: 04 32 39 79
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 128,452,694.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் : 490
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,775,920.00
ஆங்கில எழுத்து: F — வெற்றி இலக்கங்கள்: 06 28 36 57
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 92,607,175.60

**ஜாதிக சம்பத** (JATHIKA SAMPATHA) — சீட்டிழுப்பு இலக்கம் : 1112
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,399,700.00
வெற்றி இலக்கினம்: கன்னி — வெற்றி இலக்கங்கள்: 4 3 2 9 6 0
வெற்றி இலக்கினம்: கும்பம் — விஷேட இலக்கம்: 02945
அடுத்த சீட்டிழுப்பின சுப்பர் பரிசு ரூ. 15,722,715.62

10.04.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 735,367
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 33,593,140.00
ரூ. 2,000,000.00 பரிசுகள் 02 ரூ. 1,000,000.00 பரிசுகள் 02
ரூ. 100,000.00 பரிசுகள் 33

- ரூ. 5 லட்சத்துக்கு அதிகமான பரிசுகள் அரசாங்க வரி விதிகளுக்கு உட்படும்.
- பரிசு தொகையை பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமானதாகும்.
- வெற்றி பெரும் லொத்தர் சீட்டு செல்லுபடியாகும் காலமானது சீட்டிழுக்கும் தினத்தில் இருந்து 6 மாத காலம் வரையிலாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

## திகதி 09.04.2021 வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் : 4452
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 14,416,950.00
ஆங்கில எழுத்து: Z — வெற்றி இலக்கங்கள்: 1 7 5 1 2 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 17,583,361.00

**கொவிசெத** (Govisetha) — சீட்டிழுப்பு இலக்கம் : 2747
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,255,560.00
ஆங்கில எழுத்து: F — வெற்றி இலக்கங்கள்: 05 10 60 65
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 64,231,522.80

**Mega POWER மெகா பவர்** — கோடி 10 — சீட்டிழுப்பு இலக்கம் 812
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,461,800.00
ஆங்கில எழுத்து: E — சுப்பர் இலக்கம்: 05 — வெற்றி இலக்கங்கள்: 15 16 25 60
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 128,346,366.80
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் : 489
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,773,780.00
ஆங்கில எழுத்து: K — வெற்றி இலக்கங்கள்: 19 34 40 46
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 92,354,961.60

**சுபிரி வாசனா** — சீட்டிழுப்பு இலக்கம் : 1590
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,393,120.00
சுப்பர் இலக்கம்: 15 — வெற்றி இலக்கங்கள்: 06 38 45 55
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,187,666.80

09.04.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 775,649
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 33,301,210.00
ரூ. 2,000,000.00 பரிசுகள் 02 ரூ. 1,000,000.00 பரிசுகள் 01 ரூ. 500,000.00 பரிசு 01
ரூ. 100,000.00 பரிசுகள் 31

- ரூ. 5 லட்சத்துக்கு அதிகமான பரிசுகள் அரசாங்க வரி விதிகளுக்கு உட்படும்.
- பரிசு தொகையை பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமானதாகும்.
- வெற்றி பெரும் லொத்தர் சீட்டு செல்லுபடியாகும் காலமானது சீட்டிழுக்கும் தினத்தில் இருந்து 6 மாத காலம் வரையிலாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# கணவனால் அடித்துக் கொலை செய்யப்பட்ட மனைவியின் சடலம் கட்டிலுக்கடியிலிருந்து மீட்பு

## புத்தளம் முள்ளிபுரத்தில் சம்பவம்

மனைவியை கொலை செய்து உரப்பைக்குள் போட்டு கட்டிலுக்கடியில் மறைத்து வைத்துள்ள சம்பவமொன்று புத்தளம் முள்ளிபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

புத்தளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முல்லிபுரம் பகுதியிலேயே இக்கொலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிபொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் ,

புத்தளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முள்ளிபுரம் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றிலிருந்து நேற்று சனிக்கிழமை பெண்ணொருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

இது தொடர்பில் புத்தளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். அதற்கமைய வெட்டாலை பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர். உயிரிழந்த பெண்ணுக்கும் அவரது கணவருக்குமிடையில் வெள்ளிக்கிழமை இரவு ஏற்பட்ட முரண்பாட்டில் கோபமடைந்த கணவன் மனைவியை பொல்லால் தாக்கி கொலை செய்துள்ளதாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் அவரது மனைவியின் சடலத்தை உரைப்பையில் மூடி கட்டிலின் கீழ் மறைத்து வைத்துள்ளதுடன், அன்றைய தினம் இரவு சடலத்தை வேறு பிரதேசத்திற்கு எடுத்து சென்று மறைத்து வைக்கவும் திட்டமிட்டிருந்துள்ளார்.

எனினும் பொலிஸாருக்கு தகவல்கள் கிடைக்கப் பெற்றதையடுத்து கட்டிலின் கீழ் மறைத்து வைக்கப்பட்டிருந்த சடலம் மீட்கப்பட்டுள்ளது. 35 வயதுடைய சந்தேகநபரை கைதுசெய்த புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். இதேவேளை சடலம் தொடர்பான நீதிவான் பரிசோதனைகளின் பின்னர் மரண பரிசோதனைகளும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.


## பெறுகை அறிவித்தல்

(தேசிய போட்டிரீதியிலான விலைமனுக் கோரல்)

**நீர்ப்பாசன அமைச்சு**

**மொரகஹகந்த களுகங்கை அபிவிருத்தித் திட்டம்**

**மொரகஹகந்த, கோங்கஹவெல.**

நீர்ப்பாசன அமைச்சு, மொரகஹகந்த மற்றும் களுகங்கை அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் குருவெல மற்றும் வெல்லேவெல பிரிவுகளில் மீள்குடியேற்றப்பட்ட குடும்பங்களிற்காக 2021 மே மற்றும ஜூன் மாதங்களிற்கான உலர் உணவுப் பங்கீட்டை வழங்குவதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. இவ்விலைமனுக்கள், திறக்கப்படும் தினத்திலிருந்து 60 நாட்களுக்கு செல்லுபடியாகுதல் வேண்டும்.

**வழங்கப்பட வேண்டிய உலர் உணவு வகைகளின் விபரம்:**

❖ விலைமனு இலக்கம் : MKDP/SUP/Q/5204

❖ தேவையான உலர் உணவு வகை :

| | | |
|---|---|---|
| அரிசி (தேசிய படபத்)நாடு | = | 125310kg |
| நெத்தலி | = | 4115kg |
| பருப்பு | = | 8235kg |
| சீனி | = | 8235kg |
| செமன் 400g | = | 7875 டின்கள் |
| செமன் 200g | = | 715 டின்கள் |
| பால்மா | = | 200 பெக்கற்றுகள் |

❖ வழங்கப்பட வேண்டிய நிலையம் : மொரகஹகந்த பிரதான களஞ்சியசாலை

**அதிவுறுத்தல்கள் மற்றும் நிபந்தனைகள்**

**விலைமனுப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளல்:-**

1. இதற்கான மாதிரிப்படிவங்களுடன் கூடிய விலைமனுப்படிவத் தொகுதியொன்றை எழுத்துருவ விண்ணப்பமொன்றின் மூலம் பின்வரும் முகவரியின் பெறுகைப் பிரிவில் வார வேலை நாட்களில் 2021.04.15 முதல் 2021.05.10 வரை மு.ப. 9.00- பி.ப. 3.00 வரையான காலப்பகுதியில் நேரடியாக வருகை தந்து 1000.00 ரூபா விற்கான மீளளிக்கப்படாத தொகையை கணக்குப்பிரிவில் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

**விலைமனுக்களைச் சமர்ப்பித்தல்**

- வழங்கப்படும் மாதிரிப்படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு, 2021.05.11 அன்று பி.ப. 2.30 இற்கு முன்னர் பதிவுத்தபாலில் அல்லது முத்திரையிட்டு அலுவலகப் பெறுகைப் பெட்டியிற் சேர்க்கப்படல் வேண்டும்.
- விலைமனுக்களை அடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில், விலைமனு இலக்கம் குறிப்பிடப்படல் அத்தியாவசியமாகும்.
- 2021.05.11 அன்று பி.ப. 2.30 இற்கு விலைமனுத் திறக்கப்படுவதுடன், அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் தேவையெனின் சமுகமளிக்கலாம்.

**மேலதிக விபரங்களிற்காக:**

**01. பெறுகைப் பொறியியலாளர்,**
**பெறுகைப் பிரிவு**
**மொரகஹகந்த - களுகங்கை அபிவிருத்தி செயற்றிட்டம்**

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**மொரகஹகந்த - களுகங்கை அபிவிருத்தி செயற்றிட்டம்**
**மொரகஹகந்த**
**கோங்கஹவெல.**
**தொ.பே.இல. 066-2053601**



## கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை – 2021/2022

## முந்தல் பிரதேச செயலக பிரிவு - புத்தளம் மாவட்டம்

2021 ஜுலை மாதம் 01 திகதி முதல் 22 ஜுன் மாதம் 30ஆம் திகதி வரையுமான காலப்பகுதிக்கு முந்தல் பிரதேச செயலகப் பிரிவின் கீழ் குறிப்பிடப்படும் கள்ளுத் தவறணைகளுக்கான குத்தகை விற்பனைக்கான கேள்விப்பத்திரங்கள் 2021.05.17ஆம் திகதி காலை 10.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 2021.04.16ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசு வர்த்தமானியினை பார்வையிடவும்.

| பிரதேச செயலாளர் பிரிவு | கிராமம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | தவறணை கேள்விப் பத்திரம் ஏற்கும் நேரமும் இறுதித் திகதியும் | கேள்வி பத்திர வைப்புப் பணம் |
|---|---|---|---|---|---|
| முந்தல் | 01. முந்தல் | காலை - 11.00<br>பி.ப. - 05.00 | பி.ப. -2.00<br>இரவு -8.00 | காலை - 10.30 மணி<br>2021-05-17 | 1000.00 |
| முந்தல் | 02. மதுரங்குளி | காலை - 11.00<br>பி.ப. - 05.00 | பி.ப. -2.00<br>இரவு -8.00 | காலை - 10.30 மணி<br>2021-05-17 | 1000.00 |
| முந்தல் | 03. முக்குதொடுவாவ | காலை - 11.00<br>பி.ப. - 05.00 | பி.ப. -2.00<br>இரவு -8.00 | காலை - 10.30 மணி<br>2021-05-17 | 1000.00 |
| முந்தல் | 04. உடப்பு | காலை - 11.00<br>பி.ப. - 05.00 | பி.ப. -2.00<br>இரவு -8.00 | காலை - 10.30 மணி<br>2021-05-17 | 1000.00 |

2021.03.30

**ஜெ.ஏ.விஜானி வசந்திகா**
**பிரதேச செயலாளர்**
**முந்தல்**



## மில்கோ (பிறைவட்) லிமிட்டெட்

**(கால்நடை, பண்ணை ஊக்குவிப்பு மற்றும் பால், முட்டை சார்ந்த தொழில் இராஜாங்க அமைச்சுடன் இணைக்கப்பெற்றது)**

மில்கோ நிறுவனமானது ‘ஹைலண்ட்’ வர்த்தகக் குறிப் பெயருடன் நாடு முழுவதும் பால் சேகரிப்பு, உற்பத்தி மற்றும் விற்பனையில் பரந்த வலைப்பின்னலைக் கொண்ட உள்நாட்டு பால் நிறுவனமாகும். அது கொழும்பு, திகன, அம்பேவளை மற்றும் பொலன்னறுவையில் நான்கு பால் உற்பத்தி தொழிற்சாலைகளை கொண்டுள்ளது. எமது அணியில் இணைவதற்கு ஊக்கமுடைய மற்றும் தகுதி கொண்ட தனிநபர்களை நாம் தேடுகிறோம்.

### உதவி முகாமையாளர் - IT (MM 1-1)

**தகைமைகள்:-**

1. இலங்கை ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட தகவல் தொழில்நுட்பம்/ கணனி விஞ்ஞானம் அல்லது அதற்கு இணையான பட்டம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் IT துறையில் 05 ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான நிறைவேற்று அனுபவம்.

**அல்லது**

2. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் தகவல் தொழில்நுட்ப துறையில் 05 வருட பட்டப்பின் தகைமைப்பட்ட நிறைவேற்று அனுபவத்துடன் மூன்றாம் நிலை மற்றும் வாழ்தொழில் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் தொழில்நுட்பம்/ வாழ்தொழில் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட 7ஆம் மட்டத்திற்கு குறையாத) தேசிய வாழ்தொழில் தகைமைக்கான தேர்ச்சி சான்றிதழொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.

(விண்ணப்பதாரர்கள் சிறந்த நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ திறன் மற்றும் தொடர்பாடல் திறனை பெற்றிருத்தல் வேண்டும்)

### உதவி முகாமையாளர் - நிதி IT (MM 1-1)

**தகைமைகள்:-**

1. ICASL/CIMA/ACCA இன் பகுதி அளவு தகைமையுடன் இலங்கை ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட வர்த்தக நிர்வாகம்/ B.Com பட்டம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் நிதித் துறையில் 05 ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான நிறைவேற்று அனுபவம்.

**அல்லது**

2. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் நிதித் துறையில் 05 ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான நிறைவேற்று அனுபவத்துடன் இலங்கை ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட கணக்கியல் பட்டம்.

**அல்லது**

3. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் நிதித் துறையில் 05 ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான நிறைவேற்று அனுபவத்துடன் ICASL/CIMA/ACCA இல் இடைநிலை சான்றிதழ். (விண்ணப்பதாரர்கள் சிறந்த நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ திறன் மற்றும் தொடர்பாடல் திறன் மற்றும் கணனி அறிவை பெற்றிருத்தல் வேண்டும்)

### பொறியியல் உதவியாளர் (மின்/ சிவில் பொறியியல்) (MA 2-3)

**தகைமைகள்:-**

- மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்கல்வி பயிற்சி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழில் தகைமை தரம் 5 ஐ விட குறையாத மின் அல்லது சிவில் பொறியியலில் தேர்ச்சி சான்றிதழ் ஒன்றை பெற்றிருப்பதோடு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் பொறியியல் துறையில் ஓர் ஆண்டு அனுபவம்.

(கணனி அறிவு தேவையான தகைமை ஒன்றாக கருதப்படும்)

### Boiler man (PL 2)

**தகைமைகள்:-**

- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் இருந்து வகுப்பு I Boiler சான்றிதழுடன் க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தி.

**வயது** :- 18 - 45 வயது

**சம்பளம் மற்றும் நன்மைகள்** :- அரசின் அங்கீகாரத்திற்கு அமைவாக பதவிக்கு பொருத்தமான சம்பள அளவு மற்றும் நன்மைகள்.

விண்ணப்பதாரர்கள் உறவினர் அல்லாத இரு நடுவர்களின் பெயர்கள் மற்றும் தொடர்பு இலக்கங்களுடன் தமது சுயவிபரக்கோவையை இந்த விளம்பரத்தின் 07 நாட்களுக்குள் கீழ் கையெழுத்திட்டு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “பதவியை” குறிப்பிடவும்.

**முகாமையாளர் - மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்**
**மில்கோ (பிறைவட்) லிமிட்டெட்**
**மில்லேனியம் கோபுரம், இல. 345-7/1, காலி வீதி**
**கொழும்பு - 03**



## விலைமனுக்களுக்கான அழைப்பு

**உள்ளூர் அதிகாரசபைகளை வலுவூட்டல் (முதலீடு) நிகழ்ச்சித்திட்டம்**

**உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அலுவலகம், திருகோணமலை**

1. கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கீழே குறிப்பிட்டுள்ள உள்ளூர் அதிகாரசபைகளின் சார்பாக, பிராந்திய பெறுகை குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும். இந்த பெறுகையின் கீழ் நிறைவேற்றப்படவுள்ள வேலையின் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பெறுமதியானது (பெசேவ மற்றும் ஏனைய வரிகள் நீங்கலாக) 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாக இருப்பதனால், பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை ஆகியன 04/ 2016(ii) என்ற இலக்கமுடைய அரச நிதி சுற்றறிக்கையில் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு பிரயோகப்படுத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள துறை மற்றும் தரத்தில் நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் (ICTAD) / நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) உடன் பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.
4. விலைமனுக்கோரல் ஆவணத்தின் 4 ஆம் பிரிவில் தகைமைத் தேவைப்பாடுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. மேலதிக விபரங்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் 5 ஆம் பிரிவிலுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளன.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை திருகோணமலை உள்ளூராட்சி பிராந்திய உதவி ஆணையாளரிடமிருந்து பெற்று (தொலைபேசி இல.: 026-2222427. தொலைநகல் இல.: 026-2223639) விலைமனுக்கோரல் ஆவணங்களை அதே இடத்தில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் பரீட்சிக்கலாம்.
6. 2021 ஏப்ரல் 12 ஆம் திகதியிலிருந்து 2021 ஏப்ரல் 29 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 3,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், திருகோணமலை உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
7. 2021.04.30 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக வந்தடையும் வகையில் திருகோணமலை உள்ளூராட்சி பிராந்திய உதவி ஆணையாளரின் அலுவலகத்தில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
8. விலைமனுக்களின் சமர்ப்பித்தலுக்கான இறுதித் திகதியிலிருந்து 77 நாட்களுக்கு (எழுபத்தேழு) விலைமனுக்கள் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
9. அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தகவலின் பிரகாரம் விலைமனுக்கள் விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. 2021 ஏப்ரல் 21 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு திருகோணமலை உள்ளூராட்சி பிராந்திய உதவி ஆணையாளரின் அலுவலகத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் அவர்களின் சொந்த செலவிலேயே இக்கூட்டத்தில் பங்கேற்கலாம்.

| ஒப்பந்த இல. | வேலையின் விளக்கம் | மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆகுசெலவு – மில்லியன் ரூபாவில். | ஒப்பந்தக் காலம் | தேவைப்படும் தரம் | தேவைப்படும் விலைமனுப்பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைத் தொகை | செல்லுபடியாகும் காலப்பகுதி |
| EP/C-IG/01 | கிண்ணியாவில் கச்சகொடிதீவில் கடைத்தொகுதியின் நிர்மாணம் | 9.26 | 150 நாட்கள் | கட்டிடங்களுக்காக சி-7 மற்றும் சி-6 | 100,000.00 | 2021.05.01 ஆம் திகதியிலிருந்து 2021.08.13 ஆம் திகதி வரையும் |
| EP/C-IG/02 | காவன்திஸ்ஸபுர நீர் தாங்கியின் நிர்மாணம் மற்றும் திஸ்ஸபுர புதிய நீர் வழங்கல் திட்டத்தின் நீர் வழங்கல் விநியோக குழாயின் நீடிப்பு | 9.15 | 150 நாட்கள் | நீர் வழங்கலுக்காக சி-7 மற்றும் சி-6 | 100,000.00 | 2021.05.01 ஆம் திகதியிலிருந்து 2021.08.13 ஆம் திகதி வரையும் |

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அலுவலகம்,**
**புனித அந்தோனியார் வீதி,**
**திருகோணமலை.**
12.04.2021.




# நவீன இயந்திரங்களின் வருகையும் தேயிலை தொழிலாளர்களின் நிலையும்

பெருந்தோட்ட கைத்தொழில் துறையில் தேயிலை உற்பத்தியில் தோட்டத் தொழிலாளர்களே முதன்மை வகிக்கின்றனர். எதிர்காலத்தில் அத்துறையில் அவர்களின் பங்களிப்பு அவ்வாறு இருக்கும் என அறுதியிட்டு கூறமுடியாது?

ஏனெனில் நவீனயுகத்தில் பயணிக்கும் மனிதனின் தேவைகளையும் வேலைகளையும் இலகுவாக்க அன்றாடம் ஏதேனும் ஒரு கருவியை கண்டுபிடிப்பதிலேயே முனைப்பு கொள்கிறான். இது வரவேற்கக்கூடிய ஒன்றாயினும் அது பல பாதகமான விழைவுகளையும் கொண்டு வருகிறது இன்று தேயிலை உற்பத்தியுடன் தொடர்புற்ற ஆராய்ச்சி நிறுவனங்கள் தேயிலை உற்பத்தி திறனை அதிகரிக்கவும் விரைவாகவும் வினைதிறனாகவும் வேலைகளை இலகுபடுத்தவும் இயந்திரங்களை பயன்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன. அண்மையில் தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் ஒரு விளம்பரத்தை வெளியிட்டிருந்தது. தேயிலை பறிப்பதற்கான இயந்திரத்தை கண்டுபிடித்திருந்தால் அல்லது அவ்வாறான ஒரு இயந்திரத்தை வடிவமைத்திருந்தால், ஆர்வம் உள்ளவர்களை விண்ணப்பிக்குமாறு அந்த விளம்பரத்தில் குறிப்பிட்டப்பட்டிருந்தது. இவ்வாறான முயற்சிகள் வரவேற்கத்தக்கது. நவீன மாற்றத்திற் ஏற்றவாறு மாற்றமடைய வேண்டும். ஆனால் மனிதத்துவம் பேணி பாதுகாக்கப்பட்டாலே அவ்வாறான முயற்சிகள் வெற்றியளிக்கும். இல்லை என்றால் கோரோனா வைரஸை போல் ஏதோ ஒன்று எங்களை மாற்றி விடும் அல்லது அழித்துவிடும்.

ஆனால் நாம் குறிப்பிடுவது இவ்வாறான இயந்திரங்களால் மனித அழிவை நோக்கி செல்லுகிறது என்ற கருத்தியலிலாகும்.

பன்னெடுங்காலமாக கொழுந்து பறிப்பதில் தொழிலாளர்களே ஈடுபட்டு வந்தனர். இம்முறையானது இருசாராருக்கும் நன்மைபயக்கும் விதமாகவே அமைந்தது.தேயிலைத் தொழில் துறையில் பணியாற்றுபவர்களுக்கு அத்தொழிலை தவிர மாற்றுத் தொழிற்றிறன் இல்லை என்பதால் அவர்களின் வாழ்வாதாரத்தை கேள்விக்குறியாக்கும்.

அதுமட்டுமல்ல இன்றைய கால சூழ்நிலையில் கொரோனாவின் கோரத்தாண்டவத்தால் சிக்கித்தவிப்பதோடு உழைப்புக்கேற்ற ஊதியம் இல்லாமல் அன்றாடம் போராடிப் போராடி களைத்துபோய் இனிசெய்வதற்கு ஏதுமின்றி விழிபிதுங்கி நிற்கும் தருணமிது. கொரோனாவின் கோரபிடிக்குள் சிக்கி தவிக்கும் தோட்ட தொழிலாளர்களுக்கு உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் இன்மையால் வாடி வதங்கியவர்களை புதிய கண்டுபிடிப்புகளும் விட்டு வைக்கவில்லை. சொற்ப வருமானத்தில் தனது குடும்ப வாழ்க்கையை நடத்தும் இவர்களின் வாழ்க்கையில் தற்காலத்தில் மலையகத்தில் நிலவிவரும் கடும் குளிரும் பனியும் இன்னும் சொல்லொணா துன்பத்தை தருகிறது.

புதிய கண்டுபிடிப்புகளால் நன்மை இருக்கதான் செய்கிறது. ஆனால் அது குறுகிய வட்டுத்துக்குள் நின்று விடுகிறது. தேயிலை கொழுந்து பறிப்பதற்கு இயந்திரம் தேவையான சந்தர்ப்பங்கள் இருக்கத்தான் செய்கிறது. தேயிலை மலைகளில் இருக்கும் விச ஜந்துகள், சிறுத்தைகள். குளவி போன்ற கொடிய மிருங்களின் தாக்கத்திலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கு உந்து சக்தியாக இருக்கலாம். ஆனால் அது சிறுக பலனை தான் கொடுக்கும். இவ்வாறு கொடிய ஜீவன்களில் இருந்து பாதுகாத்து கொள்வதற்கு நிறைய வழி முறைகள் இருக்கின்றன. இயந்திர பாவனையால் ஏற்படும் தொழில் இழப்பால் பாரிய சவால்களுக்கு சமூகம் முகம் கொடுக்க நேரிடலாம். தோயிலை தோட்டங்களில் கொழுந்து பறிப்பதில் பெண்களே அதிகம் ஈடுபடுகின்றனர். அவர்களே பெருந்தோட்டங்களில் அதிகம் வேலை செய்வர்களாவர். ஆண் தொழிலாளர்களுக்கு வேலைகள் குறைவாகவே இருக்கும். அத்தோடு அவர்கள் பெரும் சம்பளமும் மிக குறைவு.



> தேயிலை கொழுந்து பறிப்பதற்கு இயந்திரம் தேவையான சந்தர்ப்–பங்கள் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் அது அத்துறையின் உயர்ச்சிக்கு முட்டுக்–கட்டையாகவுள்ளது



> நவீன மாற்றத்திற்கு ஏற்றவாறு மாற்றமடைய வேண்டும். ஆனால் மனிதத்துவம் பேணி பாதுகாக்கப்பட்டாலே அவ்வாறான முயற்சிகள் வெற்றியளிக்கும்








> கொரோனாவின் கோரபிடிக்குள் சிக்கி தவிக்கும் தோட்ட தொழிலாளர்களுக்கு உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் இன்மையால் வாடிவதங்கியவர்களை புதிய கண்டுபிடிப்புகளும் விட்டு வைக்கவில்லை

பெண் தொழிலாளர்கள் பெறும் சம்பளத்திலேயே பெருவாரியான குடும்பங்களின் வாழ்க்கை நடக்கிறது. இயந்திரங்களின் பாவனை அதிகரிக்கும் போது தொழிலாளர்களின் குறைப்பு நிகழ்வது தவிர்க்கமுடியாத ஒன்றாகிவிடும். அக் குறைப்பு அந் நிறுவனங்களில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தாது. ஏன்னென்றால் தொழிலாளர் குறைப்பில் ஏற்படும் பாதிப்பை இயந்திரம் நிவர்த்தி செய்து விடும். இயந்திரங்கள் பராமரிப்பால் ஏற்படும் பாரிய செலவினம் தொழிலாளர் குறைப்பில் ஈடுசெய்யப்படும். இவ்வாறான நிறைய காரணங்களால் அதிகம் பாதிக்கப்படுவது தொழிலாளர் வர்க்கமாகவே காணப்படுகிறது. அனைத்து தொழில் துறைகளுக்கும் இயந்திர பாவனை சாத்தியப்படாது. தோயிலை தொழில்துறையை எடுத்து கொண்டால் பறிக்கப்படும் கொழுந்தின் உயர் தன்மையில் தான் தொழில் துறையின் வளர்ச்சி தங்கியுள்ளது. தொழிலாளர்கள் பறிக்கும் கொழுந்தில் இருக்கும் தரம் மற்றும் தன்மை இயந்திர பாவனையில் இருக்க முடியாது என்பதே எனது கருத்தாகும்.

தோயிலை தோட்டங்களில் நவீன இயந்திரங்களால் கொழுந்து பறிக்கும் முறை கண்டுபிடிக்கப்படுமானால் அது தோயிலை தொழில் துறையை பாதிப்பதோடு தோயிலை கொழுந்து பறிக்கும் பெண்களான எமது சொந்தகளுக்கு ஏற்படும் அநீதிகளுக்கு யாரிடம் நீதி கேட்பது. அவற்றால் ஏற்படும் தொழில் இழப்பு மலையக சமூகம் கண்டிராத சமூக பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதோடு இந் நாட்டின் பொருளாதாரத்துக்கு பெரும் பங்காற்றும் பெருந்தோட்ட துறை வீழ்ச்சியடைய நேரிடலாம். அது அரச இயந்திரத்தை வீழத்தவும் எத்தனிக்கலாம் இவற்றுக்கான தீர்வை அரசே கொடுக்கவேண்டும்.

> தேயிலை பறிப்பதற்–கான இயந்திரத்தை கண்டுபிடித்திருந்தால் அல்லது அவ்வாறான ஒரு இயந்திரத்தை வடிவமைத்திருந்தால், ஆர்வம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்



சுந்தரராஜன் சுபாஷினி

# மேலதிக கொழுந்திற்கான 40 ரூபாய் கொடுப்பனவும் பெற்றுக் கொடுக்கப்படும்

ஆயிரம் ரூபாய் நாட் சம்பளத்தை பெற்றுக்கொடுத்த இ.தொ.கா விற்கு மேலதிக கொழுந்திற்கான 40 ரூபாய் கொடுப்பனவை எவ்வாறு பெற்றுக் கொடுப்பதென்று தெரியும் என பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

ஆரம்பம் முதல் இன்று வரை இ.தொ.கா மக்கள் உரிமைகளை போராடிப் பெற்றுக் கொடுத்ததாகவே சரித்திரம் உள்ளது. மற்றவர்களை போல் கையேந்தி நின்றதாக சரித்திரம் இல்லை.

தற்போது கொழுந்து அதிகமாக இருக்கும் காலம் எனவே மக்களின் மேலதிக கொடுப்பனவு விடயத்தில் கம்பனிகள் மாற்று வழியின்றி அடிபணிந்து தான் செல்ல வேண்டும். மறைந்த தலைவர் ஆறுமுகன் தொண்டமானின் முன்மொழிவுக்கு அமைய 1000 ரூபாவிற்காக இ.தொ.கா முழுமூச்சுடன் செயற்பட்டு 1000 ரூபாய் சம்பளத்தை பெற்றுக்கொடுத்தது போல, முழுமையான கொடுப்பனவுகளும் பெற்றுத்தரப்படும் என செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.



புதிய சம்பள அதிகரிப்பு தொடர்பாக ஊவா மாகாணத்தில் உள்ள பல தோட்டங்களுக்கு செந்தில் தொண்டமான் விஜயம் மேற்கொண்டு, மக்களுடன் கலந்துரையாடியதுடன், தொழிலாளர்களுக்கு மேலதிக கொடுப்பனவுகள் வழங்காத தோட்டங்களில் இனிவரும் காலங்களில் மேலதிக வேலைகளில் தோட்டத் தொழிலாளர்கள் ஈடுபட மாட்டார்கள் என தெட்டத்தெளிவாக அந்த, அந்த தோட்ட நிர்வாகங்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# தொழிலாளர் சட்டங்களை பேண புதிய தொழிற் சங்கம்

**ஹற்றன் விசேட நிருபர்**

சர்வதேச மட்டத்தில் இலங்கை அரசியல் யாப்புக்கு அமைவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழிலாளர் உரிமைகளையும் நலன்களையும் சட்ட திட்டங்களையும் பாதுகாப்பதற்காக மலையகத்தில் புதிய தொழிற்சங்கம் ஒன்றினை உருவாக்கியதாக அகில இலங்கை தொழிற்சங்க காங்கிரஸின் பொதுச் செயலாளர் அம்மாசி எஸ். நல்லுசாமி தெரிவித்தார். தொழிற்சங்கத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று ஹற்றன் சிவ ஸ்ரீ சிவசுப்பிரமணிய தேவஸ்தானத்தில் விசேட பூஜைகளுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இதன் தலைவராக நேசன் திருநேசனும் பொருளாளராக கந்தசாமி லோகேஸ்வரி ஆகியோர் உட்பட பலர் தெரிவாகினர். பூஜை வழிபாடுகளினை தொடர்ந்து தொழிற்சங்கம் பற்றி விளக்கமளிக்கும் ஊடக சந்திப்பொன்று ஹற்றனில் நடைபெற்றது. அதில் அவர் தொடந்து கருத்து தெரிவ்ககையில்,..

இன்று தொழிற்சசங்கங்கள் என்பது தொழிலாளர்களின் உரிமையினை பாதுகாக்கின்ற ஒரு அமைப்பு, ஆனால் தொழிலாளர்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகியிருக்கின்றார்கள் அதற்கு நான் தொழிற்சங்கங்களை குறை கூற வில்லை. நடைமுறையிலே சிக்கல்கள் இருக்கின்றன என்று தான் கூறுகிறேன். மலையகத்தில் பல தொழிற்சங்கங்கள் இருந்தாலும் கூட அவை அனைத்து தொழிலாளர் உரிமை தொடர்பாக அக்கறை கொள்ளாது தங்களது சுய நலத்திற்காக அரசியல் இலாபத்திற்காக கொண்டு செல்லும் நிலையினையே காணுகின்றோம்.





நூலக வாசிப்பு வாரத்தை முன்னிட்டுஅக்குறணை பிரதேசத்தில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் அக்குறணை பிரதே சபையின் தவிசாளர் இஸ்திஹார் இமாமுதீனினால் பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக வாசிப்பு நூல்கள் வழங்கி வைக்கும் வைபவம் அக்குறணையில் இடம்பெற்ற போது.... படம் மாவத்தகம தினகரன் நிருபர்





மலையக கலாசார அமைப்பின் ஏற்பாட்டில் மகாத்மா காந்தி மற்றும் நடிகர் காமினி பொன்சோகா நினைவு தின விருது கண்டியிலுள்ள தமிழ் ஊடகவியலாளர்களுக்கு வழங்கும் வைபவம் கண்டி கெப்பெட்டிப்பொல மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மத்திய மாகாண இணைப்புச் செயலாளரும் முன்னாள் மத்திய மாகாண சபையின் பிரதி தலைவருமான சி.பி. ரத்நாயக பிரதம அதிதியாக கலந்து கொண்டு விருதுகளைப் வழங்கினார். மூத்த ஊடகவியலாளர்களான எம். எஸ். குவைல்தீன், ஜே.எம். ஹாபிஸ், டி. வசந்தகுமார், இராமானுஜம், இக்பால் அலி ஆகியோர் விருதுகளை பெற்றுக் கொண்டனர்.

# சீர்மிகு சிந்தை மகிழும் சிறப்புடைய சித்திரை




சீர் மிகு சித்திரை, சிறப்புடைய சித்திரை, சிந்தை மகிழும் சித்திரை, பார்போற்றும் சித்திரை என சித்திரை மாதத்தின் பெருமைகளை அனைவரும் அறிவர். சித்திரை மாத பிறப்பை விஷு புண்ய காலம் என்று அழைப்பர். அதாவது ராசி மண்டலத்தில் உள்ள முதல் ராசியான மேஷ ராசியில் சூரியன் பிரவேசிக்கும் முதல் நாள் தமிழ் வருட பிறப்பு நாள். இந்தியா முழுவதிலும் ஒவ்வொரு பகுதியிலும் இம்மாத பிறப்பே அவர்களின் வருடபிறப்பாய் கொண்டாடி மகிழ்கின்றனர். ஆந்திராவில் யுகாதி, கேரளாவில் விஷு, வடநாட்டில் பைசாகி என்றவாறு சித்திரை முதல்நாளே வருடபிறப்பாய் கொண்டாடி மகிழ்கின்றனர்.

தமிழகத்தை பொறுத்தவரையில் சித்திரை மாதம் வசந்த காலமாகவும், திருவிழா கோலமாகவும் திகழ்கிறது. சிறப்பு மிக்க சித்திரை மாதம் முழுவதும் தமிழகத்தில் உள்ள கோவில்களில் திருவிழாவும், கொண்டாட்டமும் நிறைந்திருக்கும். தமிழ் வருட பிறப்பாய் இவ்வாண்டு பிறப்பது 'பிலவ' வருடம்.

இன்பமுடன் இளவேரிற் காலம் இனிதே தொடங்குகிறது. கரும்பு வில்லேந்தி மன்மதன் பானம் பொழிவும் பேரின்ப திருநாள். மாமரமும், வேப்பமரமும் பூத்து குழுங்கி வசந்தத்தை வரவேற்கும் உன்னத திருநாளே சித்திரை திருநாள்.

சித்திரையின் முதல் நாள் வீடுகளிலும், ஆலயங்களிலும் பஞ்சாங்கத்தை படிப்பார்கள். திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் ஆகிய ஐந்து அங்கங்களை கொண்டது பஞ்சாங்கம். இப்பஞ்சாங்கத்தில் உள்ள திதியை அறிந்தால் திருமகள் அருளும், நட்சத்திரம் அறிந்தால் வினைநீக்கமும், அன்றைய யோகம் அறிவதால் நோயற்ற வாழ்வும், மரணம் அறிந்தால் காரிய சித்தியும் கண்டிப்பாய் கிட்டும். அதனை வருட முதல் நாளில் இருந்து அந்த ஆண்டின் பஞ்சாங்கத்தை வைத்து ஆரம்பித்திட வேண்டும்.

**சித்திரை மாதத்தின் சீர்மிகு சிறப்புகள்:**

பிரம்மன் உலகத்தினை படைத்தது சித்திரை முதல் நாள் தான். வேதம் கூறுகிறது.சித்திரை மாத சுக்ல பட்ச பஞ்சமியில் லட்சுமி தேவி வைகுண்டத்திலிருந்து பூமி வந்ததாய் புராணம் கூறுகிறது. அன்றைய தினம் லட்சுமி பூஜை செய்யப்படுகிறது.

சித்திரை திருவோண நட்சத்திரத்தில் ஸ்ரீநடராஜ பெருமானுக்கு ஆண்டின் முதல் அபிஷேகமாக வசந்தகால அபிஷேகம் நடைபெறும்.

சித்திரையில் மேஷ ராசியில் தொடங்கி கால புருஷன் இயங்குகிறான். மக்களின் பிறப்பு, இறப்பு வாழ்க்கை என அனைத்தையும் இயக்குபவன், ஆள்பவன் கால புருஷன்தான். ஆள்பதால் தான் ''ஆண்டு'' என்று பெயர் பெற்றதாம். அத்தகைய 12 மாதங்களை கொண்ட கால புருஷனின் உடல் உறுப்புகளாக 12 மாதங்களும் பாவிக்கப்படும். கால புருஷனின் தலை தான் சித்திரை மாதம். எனவே சித்திரையை ஆண்டு பிறப்பாக கொண்டாடுகிறோம்.

சித்திரை மாதத்தில் தான் ஆதிசங்கரர், இராமனுஜர் அவதரித்தனர். விஷ்னு மீனாக அவதாரம் எடுத்த மத்ஸ்ல ஜெயந்தி சித்திரை மாதம் திருதியை அன்று தான் சித்ர குப்தன் தோன்றியது சித்ரா பௌர்ணமி அன்று தான்.

## சைவ மஞ்சரி







கண்டி மடுல்கல்லை அபிராமி தமிழ் மகா வித்தியாலயத்தின் அருள்மிகு வித்தியா கணபதி திருக்கோயிலின் மகாகும்பாபிஷேக நிகழ்வுகளில் பூரண கும்ப ஊர்வலத்தையும் கலச அபிஷேகத்தையும் வித்தியா கணபதிக்கு பிரதிஸ்டா பிரதம குரு பிரம்ம ஸ்ரீ ச.ஸ்கந்தராஜக் குருக்கள் மற்றும் பிரம்ம ஸ்ரீ சுதன் சர்மா இணைந்துகும்பாபிஷேக நிகழ்வு நாடாத்துவதையும் பால்குடபவனி நிகழ்வில் கலந்துகொண்ட ஆசிரியர்கள் பழைய மாணவர்கள் வர்த்தகர்கள் பிரமுகர்களைப் படத்தில் காணலாம்.

## மானுடவியல்

(தொடர்)



27

இந்து மதத்தின் பெருமை வேறு எந்த மதத்திலும் இல்லாத ஒரு பெருமை ஹிந்து மதக் கடவுளுக்கு உண்டு. ஏனெனில் கடவுளை எல்லா விதமாகவும் வழிபடும் தன்மை ஹிந்து மதத்தில் மட்டும் தான் உண்டு.

சிலர் கேட்கலாம் கடவுள் ஒருவர் தானே! பிறகு ஏன் இந்து மதத்தில் இத்தனை கடவுள்கள் என்று. இப்படிப் பட்டவர்களுக்கு ஞானிகள் தரும் விளக்கம் இது தான்.

மனிதனுக்கு வியாதிகள் பல வருகின்றன. அதற்கு மருந்துகள் பல. அதே போலத் தான் நமக்கு வரும் வெவ்வேறு பிரச்சனைகளுக்கு வெவ்வேறு விதமான கடவுள்களை நாம் வழிபடுகிறோம்.

இதனை இப்படியும் சொல்லலாம். ஒரே நபர், ஒருவருக்கு தாயாக, மற்றொருவருக்கு தங்கையாக, அக்காவாக இன்னொருவருக்கு தாராமாக, மற்றவருக்கு தோழியாக, ஏன் ? முதலாளியாக, தொழிலாளியாக, எனப் பல வடிவங்களில் இருக்கிறார் அல்லவா? அதே போலத் தான் இதுவும். அந்த விதத்தில் நமது இந்து மதத்தில் கடவுளை கீழ்வரும் எல்லா விதமாகவும் வழிபடலாம்.

1. தாயாக = அம்மன்
2. தந்தையாக = சிவன்
3. நண்பனாக = பிள்ளையார்,கிருஷ்ணன்
4. குருவாக = தட்சிணாமூர்த்தி
5. படிப்பாக = சரஸ்வதி
6. செல்வ மகளாக = லக்ஷ்மி
7. செல்வ மகனாக = குபேரன்
8. மழையாக = வருணன்
9. நெருப்பாக = அக்னி
10. அறிவாக = குமரன்
11. ஒரு வழிகாட்டியாக = பார்த்தசாரதி
12. உயிர் மூச்சாக = வாயு
13. காதலாக = மன்மதன்
14. மருத்துவனாக = தன்வந்திரி
15. வீரத்திற்கு = மலைமகள்
16. ஆய கலைக்கு = மயன்
17. கோபத்திற்கு = திரிபுரம் எரித்த சிவன்
18. ஊர்க்காவலுக்கு = ஐயனார்
19. வீட்டு காவலுக்கு = பைரவர்
20. வீட்டு பாலுக்கு = காமதேனு
21. கற்புக்கு = சீதை
22. நன் நடத்தைகளுக்கு = ராமன்
23. பக்திக்கு = அனுமன்
24. குறைகளை கொட்ட = வெங்கடாசலபதி
25. நன் சகோதரனுக்கு = லக்ஷ்மணன், கும்பகர்ணன்
26. வீட்டிற்கு = வாஸ்து புருஷன்
27. மொழிக்கு = முருகன்
28. கூப்பிட்ட குரலுக்கு = ஆதி மூலமான சக்கரத் தாழ்வார், மாயக் கிருஷ்ணன்
29. தர்மத்திற்கு = ஆர்யமான்
30. போர்ப் படைகளுக்கு = வீரபாகு
31. பரதத்திற்கு = நடராசன்
32. தாய்மைக்கு = அம்பிகை
33. அன்னத்திற்கு = அன்ன பூரணி
34. மரணத்திற்கு = யமன்
35. பாவ கணக்கிற்கு = சித்திரகுப்தன்
36. பிறப்பிற்கு = பிரம்மன்
37. சுகப் பிரசவத்திற்கு = கர்ப்ப ரட்சாம்பிகை

என இன்னும் பல...

இப்படியாக இந்துவாய் பிறந்தமைக்கு பெருமைப் பட்டுக் கொள்வோம் !!!!

தொகுப்பு:
**கலாநிதி சிவஸ்ரீ கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**

## ஹம்ஸ யோகம் - 15



ஹம்ஸ சாதனையைப் பற்றி பாசுபத பிரம்மோபனிஷத் கீழ்வருமாறு கூறுகிறது: ஹம்ஸ என்பது அகத்தில் பிரம்மம் வெளிப்படும் நிலையாகும். இதுவே ஸோஹம் என்றநாதத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது. இந்த ஹம்ஸம் வெளிப்புறமாக புறவுலகமாகவும், அந்தர்முகமாகவும் விரிகிறது. இது இறைவனின் ஸ்வரூபமானது. இந்த ஸோஹ யக்ஞத்தின் பாவனையானது நாதயோகத்தின் முழுமையான அனுபவத்தைத் தரக்கூடியது.

ஹம்ஸ என்பது பிரம்மத்தின் தெறிப்பு. ஆன்மாவிற்கு பிரம்மத்திற்குமான இடைத் தொடர்பினை ஒருவன் தொடர்ச்சியான ஹம்ஸ சாதனையால் உணரமுடியும். இதுவே எல்லையற்ற அந்த பிரம்மத்தின் ஸ்வரூபம்.

சூத்ர ஸம்ஹிதைஎன்ற நூல் இந்தசாதனையைப் பற்றிஒருவன் சாதனா இரகசியத்தை அறிந்து ஹம்ஸ யோகத்தில் சித்தி பெறும் போதுமுழுமையான விடுதலையை அடைந்து எல்லாவித உத்வேகங்கள்,ஆசைகளிலிருந்து விடுபடுகிறான்.

ஸ்ரீகோபனிஷத் அன்னங்கள் (ஹம்ஸங்கள்) எப்படிவானத்தில் சுதந்திரமாக பறக்கின்றதோ அதைப்போல் ஹம்ஸ யோக சாதகன் எல்லாவித உலக பந்தங்களிலிருந்தும் விடுபட்டு உயர்யோக நிலையில் இருக்கஆரம்பிப்பான் என்று இந்தசாதனையின் சிறப்பினைக் கூறுகிறது.


அனேக யோகமந்திர சாஸ்திரங்கள் ஹ என்ற அட்சரத்தையும் ஸ என்றஅட்சரத்தையும் அனேகவிதமான பலனிற்காக தனித்தனியாக மந்திரங்களில் சேர்க்கப்பட்டு உச்சரிக்கப்படுகிறது. எனினும் ஹம்ஸ என்ற இந்த இரண்டு எழுத்தும் சேர்ந்த மந்திரம் சாதனையின் சரியான இலக்கிற்குச் செலுத்துகிறது.

சிவஸ்வரோதய நூல் வெளிச்சுவாசமானரேசகம் ஹகார ஸப்தத்தையும் உட்சுவாசமான பூரகம் ஸகார ஸப்தத்தையும் உற்பத்திசெய்து சிவத்துவத்தையும் சக்திதத்துவத்தையும் ஒருவனில் உற்பத்தி செய்கிறது என்று கூறுகிறது.

யோகசிகோபனிஷத் ஹகார ஸப்தம் சூரிய கலையுடனும் (வலது நாசியால் செல்லும் சுவாசத்தினால் கவரப்படும் பிராணன்) ஸகார ஸப்தம் சந்திரகலையுடனும் (இடதுநாசியால் செல்லும் சுவாசத்தினால் கவரப்படும் பிராணன்) தொடர்புடையது என்றும் கூறுகிறது. இந்த இரண்டுநாசிகளினது சுவாசத்தினைசமப்படுத்துதல் ஹத யோகத்தினது இலக்காக இருக்கும் அதேவேளை அதுமாத்திரம் யோகத்தில் இலக்கு அல்ல. ஒருசாதகன் தனது இரு மூக்கிலும் செல்லும் சுவாசத்தினை மாத்திரம் சமப்படுத்தினால் யோகசித்தி பெறமுடியாது. அறியாமையையும், அகத்தில் இருக்கும் மலங்களையும் அகற்றி அவன் மூல பரம்பொருளுடன் தனது சுவாசத்தினை சேர்த்தால் மாத்திரமே ஒருவன் உண்மையான யோகசித்தி பெறமுடியும். **(தொடரும்)**

மூலம்:
பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்திசுமனன்

## அறநெறி அறிவுநொடி



**கே. ஈஸ்வரலிங்கம்**
**தமிழர் நற்பணி மன்றத் தலைவர்**

***18307) இந்து சமயத்திற்குரிய வேறு பெயர் என்ன?***
'சனாதன தர்மம்'

***18308) இதன் பொருள் என்ன?***
'என்றுமுள்ள வாழ்க்கை நெறி' என்பதாகும்.

***18309) இதன் அடிப்படை என்ன?***
அதாவது எந்த வழியில் அணுகினாலும் இறைவனை அடையலாம் என்பது இதன் அடிப்படையாகும்.

***18310) இந்து சமய வாழ்க்கை எவற்றை அடிப்படையாகக் கொண்டது?***
அன்பு, அறிவு, ஆற்றல், செல்வம், ஒழுக்கம், ஒற்றுமை, செயல், தியாகம், நம்பிக்கை உட்பட பல்வேறு அம்சங்களை அடிப்படையாகக் கொண்டது.

***18311) மேற்கண்ட அனைத்தும் ஒருங்கிணையும்போது என்ன நடக்கும்?***
அது ஒரு சிறந்த ஆளுமையை வளர்க்கும்.

***18312) இந்து சமயத்தின் இந்த ஒருங்கிணைந்த பயிற்சியைப் பெறும் போது என்ன நடக்கும்?***
மனிதன் வாழ்க்கையில் சலனம் இல்லாத மேம்பாட்டை எட்ட முடியும்.

***18313) பொதுவாக இறைவனை அடைவதற்கான வழிகள் எத்தனை?***
நான்கு

***18314) அந்த நான்கு வழிகளும் எவை?***
கர்மயோகம், பக்தியோகம், ஞான யோகம், ராஜயோகம்

***18315) இறைவனை நெருங்குவதற்கும்உதவும் வகையில் எத்தனை வகை குணங்களை இந்து சமயம் வரையறுத்துள்ளது?***
எட்டு

***18316) அந்த எட்டு வகைகளும் எவை?***
★உலகில் உள்ள எல்லா உயிர்களிடமும் அன்புடன் இருக்க வேண்டும். கருணையை கைவிடக்கூடாது.

***18317) இதை வலியுறுத்த என்ன கூறப்படுகிறது?***
'அன்பே சிவம், அதுவே நலம்'





ஹொரண மில்லனிய முகப்பட்டி தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு கொழும்பு கெப்பிட்டல் நகர மாவட்ட லயன்ஸ் கழகத்தால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. கே. கே. கனகரின் வேண்டுகோளுக்கு இணங்க லயன் வீ. கே. பாலசுப்பிரமணியம், லயன்ஸ் கழகத் தலைவர் எஸ். குகராஜாவின் தலைமையில் செயலாளர் பாஸ்கரன், .லயன்ஸ் கழக உறுப்பினர்களான எஸ். மனோகரன், என். கணேசலிங்கம், வர்த்தக பிரமுகர் வீ. ஷானாசேகரன் சிறிகாந்த் ஆகியோர் இவற்றை வழங்கினார்கள். அறநெறி ஆசிரியை செல்வி. அகிலா பிரியதர்சினி இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

# யாழ்ப்பாணம் திருநெல்வேலி பொதுச் சந்தை மீள திறப்பு

## பி.சி.ஆர் அறிக்கையுள்ளவர்களுக்கே வியாபாரத்தில் ஈடுபட அனுமதி





திருநெல்வேலி பொதுச் சந்தை மற்றும் கடைத் தொகுதி இரண்டு வாரங்களின் பின் மீளத் திறக்கப்பட்டது.திருநெல்வேலி பொதுச் சந்தையில் வழமையாக 300 இற்கும் மேற்பட்ட வியாபாரிகள் வியாபாரத்தில் ஈடுபடும் நிலையில் பி.சி. ஆர் அறிக்கையின் படி நேற்று 55 வியாபாரிகளுக்கு மட்டுமே அனுமதியளிக்கப்பட்டிருந்த்து.

கடந்த இரண்டு வாரங்களாக திருநெல்வேலி பொதுச் சந்தை மற்றும் கடைகள் அனைத்தும் மூடப்பட்டு வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்.

இந்த நிலையில் கடந்த 14 நாட்களாக மேற்கொள்ளப்பட்ட இரண்டு பிசிஆர் பரிசோதனைகளில் தொற்று இனங்காணப்பட்டோரின் கடைகள் தவிர்ந்த ஏனைய கடைகளை நேற்றுக் காலை முதல் திறப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

மேலும் பிசிஆர் பரிசோதனை முன்னெடுக்கப்படாத உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்களை கடைகளைத் திறக்க அனுமதிக்க முடியாது என்று கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

இந்த நிலையிலேயே பிசிஆர் அறிக்கை வைத்துள்ள வியாபாரிகள் மட்டும் நேற்று வியாபாரத்தில் ஈடுபட அனுமதிக்கப்பட்டனர்.

# வவுனியாவில் முகக்கவசம் அணியாத 80பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா நகரில் கொரோனா தொற்று வைரஸிலிருந்து பாதுகாக்கும் முகக்கவசம் அணியாத நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையை மேற்கொள்ளும் செயற்பாடுகளை சுகாதார பிரிவினருடன் இணைந்து வவுனியா பொலிஸார் முன்னெடுத்திருந்தனர்.

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு வவுனியா நகரில் மக்களின் நடமாட்டம் அதிகரித்த நிலையில் காணப்படுகின்றது. இதன் காரணமாக கொரோனா தொற்று வைரஸ் பரவும் அபாய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதனை கருத்தில் கொண்டு வவுனியா சுகாதார பிரிவினருடன் இணைந்து பொலிஸார் திடீர் நடவடிக்கை ஒன்றினை வவுனியா தர்மலிங்கம் வீதி சந்தியில் முன்னெடுத்திருந்தனர்.

இதன் போது சீரான முறையில் முகக்கவசம் அணியாமை, முகக்கவமின்றி காணப்பட்ட நபர்கள் ஆகியவர்களை மறித்து அவர்களின் பெயர், அடையாள அட்டை இலக்கம் என்பவற்றினை பதிவு மேற்கொண்டதுடன் சுகாதார பிரிவு காரியாலயத்திற்கு சமுகமளிக்குமாறு உத்தரவும் பிறப்பித்துள்ளனர்.

குறித்த நடவடிக்கையின் போது 80 க்கு மேற்பட்ட நபர்களின் விபரங்கள் பெறப்பட்டுள்ளதாகவும் இவ்வாறான திடீர் நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெறுமென சுகாதார பிரிவினர் தெரிவித்தனர்.

# தடைசெய்யப்பட்ட மாத்திரைகளுடன் மூவர் கைது

**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியா நகரப்பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் தடைசெய்யப்பட்ட மாத்திரைகளை வைத்திருந்த மூன்று பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த வியாபார நிலையத்தில் தடைசெய்யப்பட்ட மாத்திரைகள் இருப்பதாக இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து மூவரும் இராணுவப் புலனாய்வு பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்

அவர்களிடம் இருந்து தடை செய்யப்பட்ட 100 மாத்திரைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் வவுனியா பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்.மாவட்ட திரையரங்குகள் மறுஅறிவித்தல் வரை மூடல்



யாழ்ப்பாணம் மாவட்டத்தின் அனைத்து திரையரங்குகளும் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் தீவிரமாக உள்ள நிலையில் தனியார் கல்வி நிலையங்கள், திருமண மண்டபங்கள் தடை இடைநிறுத்தப்பட்டுள்ளன.

எனினும் திரையரங்குகளை மூடவில்லை என்று எமக்கு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அது தொடர்பில் ஆராயப்பட்டது.ஆகையால் யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து திரையரங்குகளும் மறு அறிவித்தல்வரை மூடப்படுவதாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

# கிளிநொச்சி உருத்திரபுரீஸ்வரன் ஆலயம் தொடர்பில் கலந்துரையாடல்



**பரந்தன் குறூப் நிருபர்**

கிளிநொச்சி உருத்திரபுரீஸ்வரன் ஆலயத்தில் பௌத்த விகாரை அமைக்கவுள்ளமை தொடர்பில் நேற்று விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடல் ஆலய மண்டபத்தில் நேற்று பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றது. நாடாளுமன்ற உறு்பபினர்களான எம். ஏ. சுமந்திரன், எஸ். சிறிதரன் ஆகியோர் தலைமையில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் கரைச்சி பிரதேச சபை தவிசாளர், உறுப்பினர்கள், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

குறித்த ஆலய வளாகத்தில் அகழ்வு பணிகள் மேற்கொள்ளப்பட எடுத்த முயற்சியினை அடுத்து அப்பகுதியில் பௌத்த விகாரை அமைக்க நடவடிக்கை எடுக்க முயற்சிக்கலாம் என தெரிவித்து இக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

தொடர்ந்து குறித்த குழுவினர் ஆலய வளாகத்தில் காணப்பட்ட பண்டைகாலத்து கருங்கல், தூண்களையும் பார்வையிட்டனர்.

# நாட்டில் முப்பது வருடங்களில் இந்துக்களின் தொகை எட்டு வீதம் குறைவடைந்துள்ளது

## மறவன்புலவு சச்சிதானந்தம் தெரிவிப்பு

**சாவகச்சேரி விசேட நிருபர்**

நாட்டில் முப்பது வருடங்களில் சைவர்களின் தொகை எட்டு விழுக்காடு குறைவடைந்திருப்பதாக மறவன்புலவு சச்சிதானந்தம் தெரிவித்துள்ளார்.

சனிக்கிழமை மூன்று கோரிக்கைகளை முன்வைத்து முன்னெடுக்கப்பட்ட உண்ணாநோன்பின் போது ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்;

நாட்டில் தற்போது 22 இலட்சம் சைவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த எண்ணிக்கை படிப்படையாக குறைவடைந்து செல்கிறது. முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த தொகையை விட எட்டு விழுக்காடு சைவர்கள் குறைவடைந்துள்ளனர். அதேநேரம் முகமதியர்கள் 4 விழுக்காடும், கிறிஸ்தவர்கள் 3 விழுக்காடும், பௌத்தர்கள் 2 விழுக்காடும் அதிகரித்துள்ளனர்.

இந் நாட்டு அரசியலமைப்பில் சைவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

சைவ சமயத்தை பாதுகாப்பதற்குரிய மதமாற்ற தடைச் சட்டத்தை அரசியலமைப்பிற்குள் உள்ளடக்க வேண்டும். சைவ சமயத்தை பாதுகாக்க பசுக்கள் வதை செய்வதனை தடை செய்ய வேண்டும். இந்த நாட்டில் எந்த நாட்டிலும் இல்லாதவாறு சைவ சமயத்தை அழிக்க மதவாதிகள் முனைகிறார்கள்.

அதை தடுத்து நிறுத்த 11 மாவட்டங்களில் 18 ஆலயங்களில் வழிபாடுகளை மேற்கொண்டு உண்ணா நோன்பு இருக்கிறோம்.எமது மூதாதையர்கள் விட்டுச்சென்ற மரபுகள் தொடர்ச்சியாக இருக்க வேண்டும். இலங்கையில் மிகத் தொன்மையான சமயம், இந்த மண்ணோடு பிறந்த சமயம் சைவ சமயம் என அவர் தெரிவித்துள்ளார்.





கிளிநொச்சி இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹரேந்திர ரணசிங்கவின் எண்ணக்கருவுக்கு அமைய கிளிநொச்சியில் வாழும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களும் அவர்களது பிள்ளைகளுக்கான பாடசாலை உபகரணங்களும் அடங்கிய பொதிகளைப் பகிர்ந்தளிக்கும் வைபவம் அண்மையில் கிளிநொச்சியில் நடைபெற்றது. மேஜர் ஜெனரல் ஹரேந்திர ரணசிங்க, நவீன் பெரேரா உள்ளிட்ட பிரதிநிதிகள் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் இல்லங்களுக்கு சென்று இப்பொருட்கள் அடங்கிய பொதிகளைப் பகிர்ந்தளித்தனர்.

# ஒட்டுசுட்டான் பனிக்கன்குளம் பகுதியில் புகையிரத கடவை இன்மையால் ஆபத்து

**சண்முகம் தவசீலன்**



முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பனிக்கன்குளம் கிராம அலுவலர் பிரிவில் புகையிரத வீதியின் 302.5 ஆவது கிலோமீற்றர் பகுதியில் புகையிரத கடவை ஒன்றினை அமைத்து தருமாறு கிராம மக்கள் மிக நீண்ட காலமாக கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்தப் பகுதியில் பாதுகாப்பான புகையிரதக் கடவை இல்லாததன் காரணமாக அவ்வீதியை பயன்படுத்தும் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள், மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்ட பலர் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

புகையிரதக் கடவை அமைத்து தருமாறு பல தடவைகள் பல்வேறு தரப்பினரிடம் கோரிக்கை விடுக்கப்பட்ட போதும் இதுவரை எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரிடம் பல தடவைகள் குறித்த விடயம் தொடர்பில் தெரியப்படுத்தப்பட்டு அவர் புகையிரத திணைக்களத்துக்கு இவ் விடயம் தொடர்பில் பல தடவைகள் கடிதங்கள் அனுப்பியும் இன்று வரை புகையிரத திணைக்களத்தினால் சாதகமாக எந்த பதிலும் வழங்கப்படவில்லை

இது விடயமாக பனிக்கன்குளம் கிராம அறிவுநதி சனசமூக நிலையத்தினால் குறித்த விடயம் தொடர்பில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமான காதர் மஸ்தானிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. ஆனால் பல ஆண்டுகளாக பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டும் எவ்வித செயற்பாடுகளும் இடம்பெறாமையால் மக்கள் அச்சத்துடன் வாழ்வதாகவும் மிக விரைவில் தீர்வாக பாதுகாப்பான புகையிரத கடவை ஒன்றை அமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# முன்னாள் புலி உறுப்பினரின் பெயரில் வீதி பெயர்ப் பலகை

## கிளிநொச்சியில் சர்ச்சை; பொலிஸ் விசாரணை

**கிளிநொச்சி குறூப் நிருபர்**



கிளிநொச்சி, சாந்தபுரம் பகுதியில் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளியின் பெயரில் திறக்கப்பட்ட வீதியின் பெயர்ப்பலகை விவகாரம் தொடர்பில் கிளிநொச்சி பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

'வெற்றி' வீதியின் பெயரை அகற்றுமாறும் அல்லது அந்த நபரின் சொந்தப் பெயரை வைக்குமாறும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கரைச்சி பிரதேச சபைக்குச் சொந்தமான இவ் வீதியின் பெயரை 'வெற்றி' வீதி என பெயரிடப்பட்டு கடந்த 28.03.2021 அன்று திறந்து வைக்கப்பட்டது.

இது தொடர்பில் பயங்கரவாத தடுப்பு பிரிவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக கிளிநொச்சி பொலிசார் நேற்று முன்தினம் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளரை அழைத்து விசாரணை மேற்கொண்டனர். .

இதன்போது, அந்தப் பெயருக்கு சொந்தமானவர் புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளி எனவும், புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்டதன் பின்னர் சமூகமட்ட செயற்பாடுகளில் முன்னின்று உழைத்தமைக்காக அவரது பெயரை பொதுமக்கள் சூட்டியதாகவும் விசாரணைகளின்போது பொலிசாருக்கு தெரிவித்ததாக கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் தெரிவித்தார்.

இவ் வீதி பிரதேச சபைகள் சட்டத்திற்கு அமைவாகவோ அல்லது, வர்த்தமானி அறிவித்தல் ஊடாகவோ பிரதேச சபையினால் திறந்து வைக்கப்படவில்லையெனவும்,

பொதுமக்கள் தாமாக முன் வந்து வீதிக்கு பெயர் வைக்க ஏற்பாடு செய்த நிகழ்வில் மக்கள் பிரதிநிதியாக தானும் கலந்து கொண்டதாக விசாரணைகளில் தான் குறிப்பிட்டதாக தெரிவித்தார்.

வீதியின் பெயர்ப்பலகையை அகற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் தவறும் பட்சத்தில் பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் விடுதலைப்புலிகளை மீள் உருவாக்கும் வகையில் செயற்பட்டதாக நடவடிக்கை எடுக்கப்படும் என அவர்கள் குறிப்பிட்டதாகவும் தவிசாளர் தெரிவித்தார்.அதற்குமைவாக தாம் நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் தவிசாளர் தெரிவித்தார்.

# கிழக்கின் குரல்



## மீனவர்களுக்கு தொழில் உபகரணங்கள் அன்பளிப்பு

(மட்டக்களப்பு சுழற்சி நிருபர்)



கொரியா மற்றும் இலங்கை நாட்டு சிறுவர் நிதியங்களின் உதவியில் தன்னார்வ தொண்டு நிறுவனமான ஆக்சன் யூனிட்டி லங்கா நிறுவனம், வவுணதீவு பிரதேச செயலக பிரிவில் வாழ்வாதார உதவி வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது

இத்திட்டதின்கீழ் வவுணதீவு பிரதேச செயலகம் ,வவுணதீவு பிரதேச சபை , மாவட்ட மீன்பிடி திணைக்களம் மத்திய சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபை ஆகியவற்றுடன் கிராம நலன் சார்ந்த இளைஞர் கழக இளைஞர்கள் இணைந்து அனர்த்த அபாய குறைப்பு திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அனர்த்த வேளைகளில் மாற்றுத் தொழில்கள் மூலம் வறிய மக்கள் வாழ்வாதாரத்தினை தொடர்ந்து செல்ல வேண்டுமென்பது இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

அந்த வகையில் வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவின் கன்னங் குடா கரையக்கான்தீவு, கொத்தி யாப்புல ஈச்சந்தீவு ஆகிய கிராமங்களில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு மீன்பிடி துறை சார்ந்த விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டு மீன்பிடி தொழிலுக்கான மீன்பிடி வலைகள் , டோச் லையிட் , பாது காப்பு அங்கிகள் என ஒருமீனவருக்கு சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வு வவுணதீவு பொதுச்சந்தை கட்டிட கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

## புனரமைக்கப்பட்ட மட்டு. பொதுச் சந்தை

மட்டக்களப்பு விசேட நிருபர்



தமிழ் சிங்கள புதுவருடப் பிறப்பை முன்னிட்டு மரக்கறி மற்றும் பழங்கள் உள்ளிட்ட உணவுப் பொருட்களை மக்கள் கொள்வனவு செய்யும் நோக்கோடு, புனரமைக்கப்பட்ட மட்டக்களப்பு பொதுச் சந்தையின் வியாபார நடவடிக்கைகள் நேற்று முன்தினம் (10) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கொரோணா தொற்றுக் காரணமாக பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் பொதுச் சந்தையினுள் இருந்த வியாபாரிகளை சுகாதார நடைமுறைக்களுக்கேற்றவாறு சந்தை வளாகத்தின் வெளியிடத்தில் பரவலாக சமூக இடைவெளியைப் பேணும் வகையில் விற்பனைக்கு அனுமதிக்கப்பட்டிருந்தது.

தற்போது மட்டக்களப்பில் கொரோணா தொற்று கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ள நிலையில் சுகாதார வைத்திய அதிகாரி கே.கிரிசுதனின் ஆலோசனைக்கமைவாக வியாபார நடவடிக்கைகள் புதுப்பொலிவுடன் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தங்களது அன்றாட அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்வதைக் காணமுடிந்தது.

# கிண்ணியா குறிஞ்சாக்கேணி பாலத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு

### இராஜாங்க அமைச்சர் நிமால் லான்சாவினால் அங்குரார்ப்பணம்

திருமலை மாவட்ட விசேட நிருபர்



திருகோணமலை கிண்ணியா மற்றும் குறிஞ்சாக்கேணி பிரதேசத்தை இணைக்கும் குறிஞ்சி பாலத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் (10) கிராமிய வீதிகள் மற்றும் நகர உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் நிமால் லான்சாவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது .

இப்பாலத்திற்கான ஆரம்ப பணியை திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவான் அத்துக் கோரள மற்றும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் ஆகியோர் திரைநீக்கம் செய்து வைத்தனர்.

சுமார் 750 மில்லியன் ரூபா செலவில் புனர்நிர்மாணம் செய்யப்படும் இப் பாலத்திற்கான வேலைகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மேற்பார்வையின் கீழ் நடைபெற்று வருகின்றன.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான், கபில நுவான் அத்துகோரள மற்றும் கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.கனி, குச்சவெளி பிரதேச சபைத் தவிசாளர் ஏ. முபாரக், மூதூர் பிரதேசபை தவிசாளார் எம் எம்.ஏ.அருஸ், கிண்ணியா பிரதேச சபைத் தவிசாளர் கே.எம் நிகார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இந் நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா கருத்து தெரிவிக்கையில்;

பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக்கின் வேண்டுகோளின் பேரில் இப்பாலம் நிர்மாணிப்பதற்கான ஏற்பாடுகளை செய்து இருந்தோம்.

பாரிய அபிவிருத்திகளை மேற்கொள்ளுகின்ற இந்த அரசாங்கமானது பாதுகாப்பான வீதிகள் மற்றும் பாலங்களை புனர்நிர்மாணம் செய்து வருகின்றது. யுத்தத்தின் பின்னர் எமது அமைச்சின் ஊடாகவே பல்வேறு வீதி அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு மக்கள் வாக்களிக்காமல் இருந்த போதிலும், எமது ஜனாதிபதி வாக்கினை பார்க்காமல் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றார் என பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா கருத்து தெரிவித்தார்.

இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக், இசாக் ரஹ்மான் மற்றும் கபிலர நுவான் அத்துக்கோரள ஆகியோர் கருத்து தெரிவித்தனர்.

## பயிற்சி நெறியை பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ்

தோப்பூர் குறூப் நிருபர்



மூதூர் வலயக்கல்வி அலுவலகத்தின் முறைசாராப் பிரிவினால் தோப்பூர் கோட்டக்கல்வி அலுவலகத்தில் நடத்தப்பட்ட மின் இணைப்பு தொடர்பான பயிற்சி நெறியினை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு வௌ்ளிக்கிழமை (9) தோப்பூர் அல்ஹம்றா மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வில் பயிற்சி நெறியினை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ்கள் விருந்தினர்களால் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி முனவ்வரா நளீம், ஏனைய அதிதிகளாக கல்லூரி முதல்வர் எஸ்.எம்.றஹீம், தோப்பூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஜே.எம்.இக்பால், முறைசாராப் பிரிவின் பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஜஹார், பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஹாஜா முகைதீன், ஆசிரிய ஆலோசகர்களான ஏ.எச்.மௌஜீத், கே.எம்.கியாஸ் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## அக்கரைப்பற்றில் கட்டாக்காலி மாடுகளின் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்கு

(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

அக்கரைப்பற்று பிரதான வீதியில் கடந்த வாரம் போக்குவரத்துக்கு இடைஞ்சலாகவும் ,சுற்று சூழலுக்கு குந்தகத்தை ஏற்படுத்திவந்த 51 கட்டக்காலி மாடுகளைப் பிடித்து அவற்றிள் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்கு தொடர்ந்த அக்கரைப்பற்று பொலிசார், மேலும் ஒன்பது மாடுகளை பிடித்துள்ளனர்.

பொது மக்கள், வியாபாரிகள் குறிப்பாக வாகன உரிமையாளர்கள் மாநகர சபையிடம் முறையிட்டதை தொடர்ந்தே பொலிசார் மாடுகள் விடயத்தில் மிகவும் தீவிரகண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். கடந்த சில வாரங்களாக மாநகர சபை பிரதான வீதிகளில் கட்டாக்காலி மாடுகள் போக்குவரத்துக்கு இடைஞ்சல்களை கொடுத்து வருகின்றன.

அதனால் பலர் திடீர் விபத்துகளுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளதையும் மாநகர சபையிடம் முறையிட்டனர்.

மாநகர சபை இது தொடர்பாக கால்நடைகளின் உரிமையாளர் களுக்குக்கு பலமுறை வேண்டியும் உரிமையாளர்கள் செவிசாய்க்கவில்லை என தெரியவருகின்றது.

இதனையடுத்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

### மூன்று பெண் பிள்ளைகளின் தந்தையொருவர்

# அரசினால் வீடு வழங்கப்பட வேண்டும் என கோரி மின் கம்பத்தில் ஏறி சத்தியாக்கிரகம்

(காரைதீவு குறூப் நிருபர்)

அரசினால் தனக்கு வீடு வழங்கப்பட வேண்டும் என கோரி மூன்று பெண் பிள்ளைகளின் தந்தையொருவர் உடம்பில் மண்ணெண்ணையை ஊற்றி தீப்பெட்டியுடன் மின்கம்பத்தில் ஏறி சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடாத்தினார்.

இச்சம்பவம் அம்பாறையை அடுத்துள்ள வளத்தாப்பிட்டிக் கிராமத்தில் நேற்றுமுன்தினம் (10) இடம்பெற்றுள்ளது. இதனால் அங்கு சிலமணி நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

வளத்தாப்பிட்டியைச் சேர்ந்த சண்முகம் சந்திரகுமார் (வயது 40) என்பவரே இவ்விதம் மின்கம்பத்தில் ஏறி சத்தியாக்கிரகத்தை மேற்கொண்டவராவார்.

சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜயலத், சம்மாந்துறை பிரதேச செயலக கணக்காளர் பாரீஸ், சமுர்த்தி தலைமை அலுவலக அதிகாரி சலீம், கிராமசேவை உத்தியோகத்தர் கே.ரவி, இராணுவம் மற்றும் பொதுமக்கள் அனைவரும் இணைந்து அவரை இறக்குவதற்கு கடும் முயற்சிகளை மேற்கொண்டனர்.


அரச உத்தியோகத்தர்கள் கடமையை சரியாகச் செய்ய வேண்டும். தனக்கு ஒரு வீட்டினை அரசின் மூலம் பெற்றுக் கொடுக்க வேண்டும் அத்தோடு கிராம சேவகர் தனிப்பட்ட வீட்டில் அலுவலகத்தை அமைக்காமல் பொது இடத்தில் இருக்க வேண்டும் ,கிராம பொதுக் கட்டிடத்தில் கிராம சேவகர் மற்றும் சமுர்த்தி அலுவலகங்கள் இருக்க வேண்டும் என்ற கோரிக்கையை நிறைவேற்றினால் மட்டுமே தான் இறங்குவதாக மேலிருந்து கூறினார். எதற்கும் இறங்குங்கள் என்று கூறியபோதிலும் அவர் செவிசாய்க்கவில்லை. அதனிடையே அவரது மனைவி 3 பெண்பிள்ளைகள் கீழிருந்து அழுதுகொண்டு நின்றனர்.

பிரதானவீதி என்பதால் வாகனங்கள் சனக்கூட்டம் நிரம்பிவிட்டது. சம்மாந்துறை பிரதேசபையின் முன்னாள் உபதவிசாளரும் சு.கட்சி அமைப்பாளருமான வி.ஜெயச்சந்திரன் கலந்துகொண்டு முயற்சியெடுத்தார். சுமார் 4 மணியளவில் மின்கம்பத்தில் ஏறியவர் 7.15வரை அங்கிருந்து தமது கோரிக்கையை முன்வைத்து இறங்காமல் அடம்பிடித்தார்.

பழையவளத்தாப்பிட்டி பதிய வளத்தாப்பிட்டி இஸ்மாயில்புரம் பழவெளி ஆகிய நான்கு கிராமங்களின் 1200 குடும்பங்களை கவனிக்கவேண்டிய கிராம உத்தியோகத்தர் கே.ரவியின் முயற்சியால் வீடு பெற்றுத்தருவதாக உறுதியளித்தைத் தொடர்ந்து போராட்டம் இறுதிக் கட்டத்திற்கு வந்தது.

இறுதியில் வீடுதருவதாக கிராம சேவை உத்தியோகத்தர் கி.ரவி உறுதியளித்தன் பேரில் 7.15மணியளவில் கீழிறங்கினார்.

கீழிறங்கியதும் வீடு ஒன்று சமுர்த்திதிட்டத்தின்கீழ் பெற்றுத்தருவதாக கடிதம் எழுதி சமுர்த்தி தலைமையக அதிகாரி சலீம் ஒப்பமிட்டு சாட்சிக்கு இருவர் ஒப்பிமிட்டுக் கொடுத்தபின்னர் போராட்டம் முடிவுக்குவந்தது.



## டயர் வெடித்து வான் விபத்து

கல்குடா தினகரன் நிருபர்



மட்டக்களப்பு கொழும்பு பிரதான வீதியில் கடவத்தமடு பிரதேசத்தில் சனிக்கிழமை (10) மாலை வான் ஒன்றின் டயர் வெடித்து குடைசாய்ந்ததில் அதில் பயணித்த ஒருவர் காயமடைந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஜயபெரமுன தெரிவித்தார்.கொழும்பிலிருந்து சம்மாந்துறை பிரதேசத்திற்கு திருமண நிகழ்வு ஒன்றில் கலந்து கொள்வதற்காக பயணித்த வானின் டயர் வெடித்ததில் வான் குடைசாய்ந்து அருகில் உள்ள வயலுக்குள் வீசப்பட்டுள்ளது.

வான் முழுமையாக சேதமடைந்துள்ள நிலையில் அதில் பயணித்த இருவரில் ஒருவர் காயமடைந்துள்ளார். சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை போக்குவரத்து பொலிஸார் விசாரனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



கல்முனை பொதுச் சந்தையில் தமிழ் சிங்கள புத்தாண்டிற்காக மக்கள் உடுதுணிகளை கொள்வனவு செய்வதை படத்தில் காணலாம். (படம்: நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)

## புதிய அரசியலமைப்பில் மதமாற்ற தடை சட்டத்தை ஏற்படுத்துமாறு கோரிக்கை

### அக்கரைப்பற்றில் உண்ணாவிரத போராட்டம்

வாச்சிக்குடா விஷேட நிருபர்



புதிய அரசியலமைப்பில் மதமாற்ற தடைச் சட்டத்தை இயற்றுவதுடன், பசுவதையினை உடன் நிறுத்துமாறும், சைவ சமயத்துக்கு முன்னுரிமை வழங்குமாறும் ஜனாதிபதியிடம் கோரி சிவசேன அமைப்பினரால் 18 ஆலயங்களில் அடையாள உண்ணாவிரதம் நேற்றுமுன்தினம் (10) அனுஷ்டிக்கப்பட்டது.

இதன் ஒரு கட்டமாக அக்கரைப்பற்று கோளாவில் ஸ்ரீ விக்னேஸ்வரர் ஆலயத்தில் ஆரம்பமான குறித்த அடையாள உண்ணாவிரத போராட்டத்தில் சிவசேன அமைப்பின் அம்பாரை மாவட்ட இணைப்பாளர் ரி.ஜெயாகர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தவத்திரு விபுலானந்தா அடிகளாரின் 119 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு சிவசேன அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட அடையாள உண்ணாவிரத நிகழ்வில் கலந்து கொண்ட அமைப்பின் உறுப்பினர்கள் பிரார்த்தனை வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

இதன் பிற்பாடு அடையாள உண்ணாவிரத நிகழ்வின் நோக்கம் பற்றி பல்வேறு கருத்துக்களையும் முன்வைத்தனர்.

ஜனாதிபதி மதத்தினை மதிக்கும் பக்குவம் கொண்டவர். அவர் மீது பூரண நம்பிக்கையும் எமக்குள்ளது. ஆகவே அவரது காலத்தில் மதமாற்ற சட்டத்தை உருவாக்கி இந்து மதத்தை மாத்திரமன்றி அனைத்து மதங்களின் உரிமையினையும் பாதுகாக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

எல்லா மதங்களும் ஒருமித்து வாழும் எமது நாட்டில் சில மதத்தவர் மக்களிடம் உள்ள ஏழ்மை நிலை மற்றும் பொருளாதார நிலையினை காரணம் காட்டி அவர்களை மதமாற்றம் செய்ய முயற்சிக்கின்றனர். இது தவறான செயற்பாடாகும்.

# நகர்வலம்






## வருட இறுதிக்குள் இரு மின்சார நிலையங்கள் நிறுவப்படும்

### அனைவருக்கும் மின்சாரமே அரசின் இலக்கு

**அமைச்சர் டலஸ் அலகப்பெரும**

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

இவ்வருட இறுதிக்குள் இரண்டு நீர் மின் உற்பத்தி நிலையங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மின் சக்தி அமைச்சர் டலஸ் அலகப்பெரும தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபையின் தென் மாகாண பிரதேச காரியாலயத்தை தங்காலையில் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து

உரயைாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். இந் நிகழ்வில் இளைஞர் விவகார

விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஸ உட்பட அதிகாரிகளும் கலந்து கொண்டனர். மின் சக்தி அமைச்சர் டலஸ் அலகப்பெரும இங்கு தொடர்ந்தும் உரையாற்றும் போது

தெரிவித்ததாவது, உமா ஓய மற்றும் புரோட்லண்ட் ஆகிய இரண்டு நீர் மின் உற்பத்தி நிலையங்களையும் இவ் வருட இறுதிக்குள்நாட்டிற்கு வழங்குவோம். 2013 ஆம் ஆண்டு நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையம் திறந்து வைக்கப்பட்டதன் பின்பு எமது நாட்டில் எந்த

மின் உற்பத்தி நிலையமும் திறக்கப்படவில்லை. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவின் ஆட்சி காலத்தில் 25 வீதம் மின் கட்டணம்

குறைக்கப்பட்டது. இதன் பிறகு காற்று மின் உற்பத்தி நிலையங்களையும் ஆரம்பித்தார். 2012 ஆம் ஆண்டு முதலாவது எல். என். என்ஜீ. மின் எற்பத்தி நிலையத்தினையும்

அவரே ஆரம்பித்தார். இவை அனைத்திற்கும் எமக்கு கௌரவமான நன்றிக் கடன் உள்ளது. 21ஆம் நுர்ற்றாண்டின் மூன்றாவது தசாப்தத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் சற்று பின்னோக்கிப்பார்த்தால் 118000 குடும்பங்கள் மின்சார வசதியின்றி வாழ்வதைப் புரிந்து கொள்வீர்கள்.

ந்து ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதிக்கு முன்பு நாட்டிற்கு வெளிச்சம் திட்டத்தினூடாக 38,000 குடும்பங்களுக்கு மின்சாரம் வழங்க திட்டமிட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

## வடமத்திய மாகாணத்தில் பாரிய மண்டபம் திறப்பு

### ஆயிரம் இருக்கைகள், நவீன வசதிகளுடன் ஏற்பாடு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

வடமத்திய மாகாண சபைக்கான 900 ஆசனங்களை கோண்ட முழுமையாக நவீனமயப்படுத்தப்பட்ட புதிய மண்டபத்தை மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் அண்மையில் திறந்து வைத்தார்.இந்த நவீனமயப்படுத்தப்பட்ட கூட்ட மண்டபத்திற்கு தற்போது 1.6 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது. இதனை முழுமையாக பூர்த்தி செய்வதற்கு இன்னும் 450 மில்லியன் ரூபா தேவைப்படுவதாகவும் மாகாண செயலாளர் எச்.எம்.பீ.பண்டார தெரிவித்தார். இங்கு கருத்து தெரிவித்த ஆளுநர், இந்த கூட்ட மண்டபம் சர்வதேச அளவிலான மண்டபத்திற்கு ஒப்பானதாகும். அதனூடாக பல்வேறுபட்ட தேசிய மற்றும் சர்வதேச அளவிலான விழாக்களை நடத்துவதற்கும் வழியேற்பட்டுள்ளது.இந்த கூட்ட மண்டபம் இம்மாகணத்திற்கு கிடைக்கப்பெற்ற

பாரிய வளமாகும் . முன்னாள் முதலமைச்சர் பேர்டி பிரேமலால் திஸாநாயக்கவின் தூர சிந்தனை கொண்ட அரசியல் முதிர்ச்சிதான்,இந்த மண்டபத்தை கட்டுவதற்கு உதவியது. மாகாணத்தின் தேவைகளை கருத்திற்கொண்டு செயற்பட்ட தலைவராகவே,அவர் திகழ்ந்தார்.

சகல பிரிவுகளிலும் அபிவிருத்தியை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்த,தலைவரும் அவரேதான். எதிர்கால சந்ததியினரின் நன்மை கருதியே இந்த மண்டபத்தை உருவாக்குவதற்கு தீர்மானமிக்கப்பட்டது. அமரர்,பேர்டி பிரேம்லால் அன்று எடுத்த தீர்க்க தரிசனமிக்க தீர்மானம் இன்று மலர்ந்துள்ளது.யாரேனும் அதனை குறைத்து மதிப்பிட்டாலும் குறை காணாமலும் இம்மாகணத்திற்கு பாரிய வளத்தை,அவர் தந்துவிட்டு எம்மைப் பிரிந்து சென்று விட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஆளுநரின் செயலாளர் ஏ.கே.என்.விக்கிரமசிங்க உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## யானைத் தந்தங்கள் வைத்திருந்தவர் கைது

திறப்பனை தினகரன் நிருபர்

யானை தந்தங்களை வைத்திருந்த நபர் ஒருவர் பொலிஸார் கைது செய்துள்ளனர்.அநுராதபுரம் சாலியபுரயில் வைத்து, இவரை பொலிஸார் கைது செய்தனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர் மாங்கடவல,சாலியபுர என்ற இடத்தில் வசிக்கும் 38 வயதுடைய செதுக்கல் தொழிலில் ஈடுபடும் சிற்பி ஒருவர் என தெரியவந்துள்ளது.பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் குறித்த சந்தேக நபரின் வீட்டில் பொலிஸார் தேடுதல் நடத்தினர்.இதையடுத்து,வீட்டின் மறைவான

இடமொன்றில் ஒழித்து வைத்திருந்த யானை தந்தங்களை பொலிஸார் கைப்பற்றினர். மன்னார் பகுதி நபர் ஒருவரிடமிருந்து இதைக் கொள்வனவு செய்ததாக,அந்நபர் பொலஸாரிடம் தெரவித்தார். சந்தேக நபர் அநுராதபுரம் நீதி மன்றில் ஆஜர் படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.



தம்புத்தேகம பிரதேச செயலக பகுதிக்குட்பட்ட கொத்மல்புர கிராமத்தில் வசித்து வரும் குடும்பங்களின் குடிநீர் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும்நோக்கில்,இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க புதிய வேலைத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.இதன் பின்னர், அங்குள்ள மகளிர் சங்க உறுப்பினர்களுக்கு,இராஜாங்க அமைச்சர் ஆவணங்களைக் கையளிப்பதையும் படத்தில் காணலாம். படம் : அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

## மர்ஹூம் பழீல் மௌலானாவின் 'வாழ்வும் பணியும்' நூல் வெளியீடு

பெரியநீலாவணை விசேட, மருதமுனை தினகரன் நிருபர்கள்

கல்விமானும் முன்னாள் கல்வி அதிகாரியுமான மருதமுனையைச் சேர்ந்த மர்ஹூம் ஐ.எம்.எஸ்.எம். பழீல் மௌலானா பற்றி சட்டத்தரணி ஸாஹிர் தொகுத்த 'அபுல் கலாம் ஐ.எம்.எஸ்.எம்.பழீல் மௌலானா வாழ்வும் பணியும் (19202013)' நூல் நேற்றுமுன்தினம் (10) மருதமுனை, பொது நூலக கேட்போர் கூடத்தில் வெளியீட்டு வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் பேராதனை பல்கலைக்கழக மெய்யியல் துறை முன்னாள் தலைவரும், தேசிய கல்வி நிருவக பேரவை உறுப்பினருமான பேராசிரியர் கலாநிதி எம்.எஸ்.எம். அனஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். எம். முஸாரப் முதுநபின், முன்னாள் இராஜாங்க அமைச்சர் அலிஸாஹிர் மௌலானா, கல்முனை மாநகர சபை முதல்வர் ஏ.எம். றக்கிப், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ஏ.பி.எம். அஸ்ரப் (நளீமி) உட்பட சிரேஸ்ட நிர்வாக சேவை அதிகாரிகள், பல்கலைக்கழக பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், கல்விமான்கள், கலை, இலக்கியவாதிகள், பழீல் மௌலானாவின் குடும்பத்தினர் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது தபால் திணைக்களத்தினால் 25 ரூபா பெறுமதியான ஞாபகார்த்த முத்திரையும் வெளியீட்டு வைக்கப்பட்டது.



## வீதிகளில் குப்பை வீசுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

### அட்டாளைச்சேனை பிரதேச சபை தவிசாளர்

ஒலுவில் விசேட நிருபர்

அட்டாளைச்சேனை பிரதேசத்திலுள்ள வீதிகளில் குப்பைகளை வீசுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென, அட்டாளைச்சேனை பிரதேச சபைத் தவிசாளர் ஏ.எல். அமானுல்லாஹ் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை, பாலமுனை மற்றும் ஒலுவில் ஆகிய பிரதேசங்களில் அன்றாடம் பிரதேச சபையினால் வீதி வீதியாகச் சென்று குப்பைகள் அகற்றப்படுகின்றன. இதனை சிலர் உதாசீனம் செய்து வீதிகளில் வீசி வருகின்றார்கள்.

இதனால் அப் பிரதேசங்களில் சுகாதாரத்திற்கு பங்கம் விளைப்பதோடு, டெங்கு நுளம்பு பெருகக் கூடிய அபாயமும் தோன்றியுள்ளது.

குப்பைகளை அகற்றிய பின்னர் மீண்டும் குறிப்பாக வியாபாரிகள் வீதிகளில் அங்கும் இங்கும் குப்பைகள் வீசுகின்றனர்.

குறித்த இடங்களில் குப்பைகளை சேகரிப்பதற்கான குப்பைத் தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளதாகவும், கழிவுப் பொருட்களை இதில் இடுமாறும், அவர் கேட்டுள்ளார்.

வியாபார நிலையங்களில் சேருகின்ற குப்பை கூழங்களை ஒரு இடத்தில் சேமித்து வைத்து பாதுகாப்பான முறையில் அகற்றவும்.

அத்தோடு, அட்டாளைச்சேனை பிரதேசத்தை பொலித்தீன் பாவனையற்ற பிரதேசமாக மாற்றியமைப்பதற்கு அதற்கான செயற்திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் இவை நடைமுறைப்படுத்தப்படுமெனவும், தவிசாளர் மேலும் தெரிவித்தார்.



நகர சபை உறுப்பினர் ஜோசப் பெண்ணான்டோவின் பன்முகப்பட்ட நிதியிலிருந்து300ற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவ மாணவிகளுக்கு அப்பியாச கொப்பிகள்,பாடசாலை உபகரணங்கள் பாதணிகள் வழங்கப்பட்டன.இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் பிரதி அமைச்சர் .பிரபா கணேசன் கலந்து கொண்டார். இந்நிகழ்வு கொட்டாஞ்சேனை சங்கமித்த மாத்தையில் நடைப்பெற்றது. படம்: எம்.நசார்

## வீட்டிலிருந்த தங்க நகைகள் திருட்டு

திறப்பனை தினகரன் நிருபர்

கஹட்டகஸ்திகிலிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட துருக்குராகம பகுதி வீடொன்றில் சுமார் 15 இலட்சம் பெறுமதியான தங்க நகைகள் திருடப்பட்டுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது குறித்து வீட்டு உரிமையாளர் அண்மையில்

பொலிஸில் நிலையத்தில் முறைபாடு செய்திருந்தார.இதற்கு இணங்க உரிய சந்தேக நபர்களை கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். கஹட்டகஸ்திகிலிய நகரில் புத்தகக் கடை ஒன்றை நடாத்தும் ஒருவரின் வீட்டிலேயே இக் களவு இடம் பெற்றுள்ளது.வீட்டு அலுமாரியில் வைக்கப்பட்ட நகைகளே திருட்டுப் போயுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது. இதுகுறித்த மேலதிக விசாரணைகளை கஹட்டகஸ்திகிலிய பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## கடத்திவரப்பட்ட மஞ்சள் பொலிஸாரால் மீட்பு

புத்தளம் தினகரன் நிருபர்

புத்தளம் பகுதியில் மீன் வாடிக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 20 உறைகள் அடங்கிய 320 கிலோ கிராம் மஞ்சள் தூள் புத்தளம் பொலிஸ் போதை ஒழிப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டது. இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக கடல் வழியாக,இது,கொண்டு வரப்பட்டிருக்கலாமென பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது புத்தளம் பகுதியைச் சேர்ந்த ஒருவரையும் பொலிஸார் கைது செய்தனர். பொலிஸ் போதை ஒழிப்புப் பிரிவினருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போதே குறித்த மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளது. இவை, பொதிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மற்றும் மஞ்சள் என்பன புத்தளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதாக பொலிஸ் போதை ஒழிப்பு பிரிவினர் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## படகில் கடத்தப்பட்டு வந்த பீடி இலைகள் ஏலக்காய் மீட்பு

புத்தளம் தினகரன் விசேட நிருபர்

இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட ஒரு தொகை பீடி இலைகள் மற்றும் ஏலக்காய் என்பவற்றுடன் ஐவரை கடற் படையினர் கைது செய்துள்ளனர். இச்சம்பவம் வென்னப்புவ சிங்தாத்ராய கடற் கரை பிரததேசத்தில் இடம்பெற்றது.

கடலில் பயணித்துக் கொண்டிருந்த ஒரு சிறிய படகினை பரிசோதித்த கடற் படை அதிகாரிகள்

அதிலிருந்த பீடி இலைகள் மற்றும் ஏலக்காய் என்பவற்றினை தமது கைப்பற்றியதுடன்,படகிலிருந்த ஐவரையும் கைது செய்தனர். படகில், 770 கிலோ கிராம் எடையுள்ள பீடி இலைகள் 22 பொலித்தீன் உறைகளில் கட்டடப்பட்டிருந்தன. 05 கிலோ கிராம் ஏலக்காய் மற்றுமொரு உறையில் போடப்பட்டிருந்தது.



புத்தளம் சாஹிரா தேசிய கல்லூரியின் மாணவர் தலைவர்களுக்கான சின்னம் அணிவிக்கும் நிகழ்வு அதிபர் எச். . அப்துல் ஜப்பார் தலைமையில் அஸ்வர் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் புத்தளம் ஸாஹிரா கல்லூரியின் பழைய மாணவரும் புத்தளம் கல்வி வலயத்துக்கான கெடட் அதிகாரியுமான ஏ.டப்லி.எம். அலி சப்ரி பிரதம அதிதியாக கலந்து கொண்டு,மாணவர்களுக்கு சின்னங்களைச் சூட்டிவைத்தார்

புத்தளம் தினகரன் விசேட நிருபர்

## போதைப் பொருள் வியாபாரம்; பெண் உட்பட நால்வர் கைது

ஏறாவூர் நிருபர்

போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுவந்த குற்றச்சாட்டின் பேரில் பெண் ஒருவர் உட்பட நான்கு பேர் மட்டக்களப்பு ஏறாவூர்ப் பொலிஸாரினால் வெள்ளிக்கிழமை (09 ) கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் போதைப் பொருள் வியாபாரத்திற்குப் பயன்படுத்தியதாகக் கருதப்படும் முச்சக்கர வண்டியொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவர்களிடமிருந்து ஒரு தொகுதி போதை மருந்துகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச்டபிளியு.கே. ஜயந்த தெரிவித்தார்.

இராணுவ புலனாய்வுப்பிரிவினர் போதைப் பொருள் வியாபாரியைப் போல நடித்து தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அறுபதாயிரம் ரூபா பணத்துடன் குறித்த வீட்டிற்குச் சென்றவேளை போதை மருந்தினை கைமாறிய பெண்ணொருவரை பொலிஸார் கைது செய்துள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

இப்பெண்ணின் மூத்த சகோதரி போதைப் பொருள் குற்றச்சாட்டின் பேரில் ஏலவே கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதேவேளை ஹெறொயின் பக்கற்றுக்ளுடன் மதகு ஒன்றின்மீது அமர்ந்திருந்த மூன்று பேரை பொலிஸார் கைது செய்யதுள்ளதாக பொலிஸார் கூறினர்.

## காலி மஹமோதர போதனா வைத்தியசாலை

## சிற்றுண்டிச்சாலையை நடைமுறைப்படுத்துவதற்கான விலைமனு கோரல்

2021.06.01 முதல் 2022.05.31 வரை காலி மஹமோதர போதனா வைத்தியாசலையின் சிற்றுண்டிச் சாலையை நடைமுறைப்படுத்துவதற்காக தகைமை பெற்றுள்ள வலைமனுதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. படிவக்கட்டணமாக மீளளிக்கப்படாத 2,000/- ரூபாவுக்கான தொகை அறவிடப்படும். '2021.04.15 முதல் 2021.05.05 வரை (வார வேலை நாட்களில் மு. ப. 9.00 முதல் பி. ப. 2.00 வரை) கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டுடன் தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பித்து மஹமோதர போதனா வைத்தியசாலையின் கணக்குப் பிரிவில் விலைமனுப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

03. விலைமனுக்களை அடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் '2021/2022 ஆண்டில் சிற்றுண்டிச்சாலைச் சேவையை வழங்கல்' என்று குறிப்பிட்டு 2021.05.06 அன்று மு.ப. 10.00 இற்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு 'தலைவர், பிராந்தியப் பெறுகைக் குழு, போதனா வைத்தியசலை, மஹமோதர, காலி' என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புவதற்கு அல்லது பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்ப்பதற்கு முடியும்.

04. விலைமனுக்கள் இரண்டு பிரதிகளாக மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு தனித்தனியான உறைகளில் சேர்த்து அவ்விரு உறைகளையும் ஒரே உறையில் சேர்த்துச் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளல் முடிவுறும் 2021.05.06 அன்று மு. ப. 10.00 இற்கு அதே இடத்தில் அவை திறக்கப்படுவதுடன் விலைமனுதாரர் அல்லது பிரதிநிதியொருவர் அவ்வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்.

06. அரச ஒப்பந்தங்களை மீறியமைக்காக அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்பட்ட நபர்களுக்கு விலைமனுப்படிவங்கள் வழங்கப்பட மாட்டாது.

07. விலைமனுவை முழுமையாக அல்லது அதன் பகுதியொன்றை ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரித்தல் மேற்கொள்ளும் உரிமை பெறுகைக் குழுவிற்கு உரித்தாகும்.

08. மேலதிக விபரங்களிற்காக மஹமோதர போதனா வைத்தியசாலையின் கணக்காளரை அழைக்கவும்: 091 2222261

**தலைவர்**
**பிராந்தியப் பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**மஹமோதர, காலி.**

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சு

### கொழும்பு 05, இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சில் தற்போதுள்ள கட்டிடத்தின் புனரமைப்பு – கட்டம் 1

**ஒப்பந்த இல.: SMGJ/ADM/05/01/02**

1. 25 மில்லியன் ரூபா (VAT தவிர்த்து) மதிப்பிடப்பட்ட செலவு கொண்டதும் கீழ் விபரிக்கப்பட்டதுமான கட்டம் 1 - கொழும்பு 05, இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சில் தற்போதுள்ள கட்டிடத்தின் புனரமைப்புக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சு சார்பில் அமைச்சு பெறுகைக் குழு (MPC), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

   தற்போதுள்ள கட்டிடத்தின் தேவையான *M&E* சேவைகளின் ஏற்பாடுகளுடன் கூரை பலகத்தின் நீர்க்காப்பு, கூரையின் நீடித்த பகுதி உட்பட முதல்மாடி முகப்பு அறை, இரண்டாவது மாடியின் மாடி முகப்பு பகுதியின் முழுமையான புனரமைப்பு பணிகளைக் கொண்டது. இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சின் வழக்கமான செயற்பாட்டுக்கு எந்த ஒரு இடையூறு அல்லது தொந்தரவையும் தவிர்க்கும் வகையில் இந்த பணிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதோடு புனரமைப்பு பணிகள் இடம்பெறும் அதேநேரம் இராஜாங்க அமைச்சு மற்றும் கட்டிடத்தில் அமைந்திருக்கும் மற்ற அலுவலகங்களின் அலுவலகப் பணிகள் வழக்கம்போல் செயற்பட வகைசெய்தல் வேண்டும்.

   இல. 561/3, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 05 இல் இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சு வளாகத்தில் இந்தத் தளம் அமைந்துள்ளது.

   நிர்மாணக் காலம் 84 நாட்களாகும்.

2. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைகேட்பு நடத்தப்படும்.

3. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்காக தகுதியை பெறுவதற்கு வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் பின்வரும் தேவைகளை பூர்த்தி செய்தவராகவும் இருத்தல் வேண்டும்.
   - கட்டிட நிர்மாணப் பணிகளுக்காக C4 மற்றும் C5 தரத்தில் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் (CIDA) பதிவு செய்திருத்தல் வேண்டும்.
   - விலைமனு விலை 5.0 மில்லியன் ரூபாவை விஞ்சும் ஒவ்வொரு விலைமனுவுக்காகவும் 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் பிரிவு 8 இற்கு அமைய பொது ஒப்பந்த பதிவாளர் மூலம் வழங்கப்பட்ட செல்லுபடியான சான்றிதழ் ஒன்றை விலைமனுதாரர் வைத்திருத்தல் வேண்டும் (இந்த சட்டத்தின் பிரிவு 2 ஐ பார்க்க)

4. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகுதிக்கு தேவையான தகைமைகளில் உள்ளடங்குவன:
   - கடந்த ஐந்து ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணப் பணிகளின் சராசரி ஆண்டு புரள்வு குறைந்தது 50 மில்லியன் ரூபா இருத்தல் வேண்டும்.
   - கடந்த ஐந்து ஆண்டுகளில் பூர்த்தி செய்யப்பட்டதும் 25 மில்லியன் ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட திட்ட பெறுமதியில் நியாயமான கால எல்லைக்குள் பூர்த்தி செய்யப்பட்டதுமான இதனை ஒத்த பண்பு மற்றும் சிக்கற்பாடுடைய கட்டிட புனரமைப்பு திட்டம் ஒன்றின் பிரதான ஒப்பந்ததாரர்/ உப ஒப்பந்ததாரராக வெற்றிகரமாக பூர்த்திசெய்திருத்தல்.
   - இந்த ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட எந்த ஒரு முற்கொடுப்பனவுகளையும் தவிர்த்து குறைந்தபட்ச திரவச் சொத்துகள் மற்றும்/ அல்லது கடன் வசதிகள் 15 மில்லியன் ரூபாவுக்கு குறையாதிருத்தல் வேண்டும்.

5. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் திட்டமிடல் பணிப்பாளர், இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சு, இல. 561/3, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 05 (தொலைபேசி: 011-2589087, தொலைநகல்: 011-2369790, மின்னஞ்சல்: smjadm@gmail.com) என்ற முகவரியில் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு 2021.04.15 ஆம் திகதி தொடக்கம் 2021.04.30 ஆம் திகதி வரை 09:00 மணி தொடக்கம் 15:00 மணி வரை விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.

6. மீளளிக்கப்படாத கட்டணம் எட்டாயிரம் இலங்கை ரூபாவை (8,000.00 ரூபா) செலுத்தி, 2021.04.15 தொடக்கம் 2021.05.05 வரை 09:00 மணி தொடக்கம் 15:00 மணி வரை நிர்வாக அலுவலகம், நிர்வாகப் பிரிவு, இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சு, இல. 561/3, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 05 என்ற முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும்.

7. 2021.05.07 அன்று 14.00 மணி அல்லது அதற்கு முன்னர் இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சு, இல. 561/3, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 05 இல் கீழுள்ள முகவரிக்கு இரு பிரதிகளில் விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற பின் அவை திறக்கப்படும்.

8. 2021.08.05 ஆம் திகதி வரை விலைமனுக்கள் செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

9. அனைத்து விலைமனுக்களும் இல. 561/3, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 05 இல் இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சு, செயலாளரின் பெயருக்கு பெறப்பட்ட முந்நூறு ஆயிரம் ரூபா (300,000.00 ரூபா) விலைமனு பிணை ஒன்றை கொண்டதாக இருத்தல் வேண்டும். விலைமனு பிணையானது 2021.09.02 ஆம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

10. இல. 561/3, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 05 இல் இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சின் 2ஆவது மாடி, மாநாட்டு அறையில் 2021.04.28 அன்று 10:00 மணிக்கு விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு இடம்பெறும் என்பதோடு அதனைத் தொடர்ந்து தளப்பயணம் ஒன்று இடம்பெறும்.

மேல் குறிப்பிடப்பட்ட முகவரியானது:

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு (MPC)**
**இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சு,**
**இல. 561/3, எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு 05.**

## விலைமனுக் கோரும் திகததியை நீடிப்பு செய்தல்

### கமத்தொழில் திணைக்களம் - பேராதெனிய

01. பேராதெனிய கமத்தொழில் திணைக்களத்தின் விரிவாக்கல் மற்றும் பயிற்சி நிலையத்தின் பிராந்தியப் பெறுகைக் குழுத் தலைவரினால் நெல், கொச்சிக்காய். சோளம், உளுந்து, பயறு, கவுபி, சோயா எள்ளு, குரக்கன் மற்றும் நிலக்கடலை பயிர் செய்கை மேம்பாட்டு செயற்றிட்டத்திற்காக பணடங்களைக் கொள்வனவு செய்வதற்காக 2021.03.31ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட விலைமனுக் கோரும் திகதிகள் பின்வருமாறு திருத்தி அமைக்கப்படுகின்றன.

02. அதற்கமைவாக விலைமனு ஆவணங்கள் மற்றும் படிவங்களைப் பெற்றுக் கொள்ளும் காலம் 2021.04.28 அன்று பி. ப. 2.00 வரை நீடிக்கப்பட்டுகின்றது. அனைத்து விலைமனுக்களினதும் மற்றும் விலைமனுப் பிணையங்களினதும் செல்லுபடிக் காலம் 07 திணங்களினால் நீடிப்பு செய்யப்படல் வேண்டும்.

03. விலைமனுக்களை ஏற்றுக் கொள்ளல் 2021.04.29 அன்று மு. ப. 10.00 இற்கு முடிவுறுத்தப்படும். அன்றைய தினம் ஏற்கனவே அறிவித்தலின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகளிற்காக குறிப்பிடப்பட்டிருந்த நேரங்களில் கமத்தொழில் திணைக்களத்தின் விரிவாக்கல் மற்றும் பயிற்சி நிலையத்தில விலைமனு திறக்கப்படும்.

04. ஏனைய அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் 2021.03.31 அன்று பிரசுரமான அறிவித்தலின் பிரகாரம் மாற்றங்களின்றி அமையப் பெறும்.

**தலைவர்,**
**பிராந்தியப் பெறுகைக் குழு,**
**விரிவாக்கல் மற்றும் பயிற்சி நிலையம்,**
**கமத்தொழில் திணைக்களம்,**
**பேராதெனிய.**
**தொலைபேசி இல. 071-8047509, 081-2389127**

## பெறுகை அறிவித்தல்

## அரசாங்க அச்சுத் திணைக்களம்

N-105

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் உருப்படியை வழங்குவதற்காக இலங்கையின் வழங்குநர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளிடமிருந்து விலைமனுக் கோரப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| 1. Item | : | DIGITAL PRINTING MACHINE |
| Quantity Required | ; | 01 No |
| விலைமனுக் கோரப்படும் இறுதித்திகதி | : | 2021.05.06 பி. ப. 2.00 |
| குறியீட்டு இல. | : | SCP07/D.P.M./2020-25 |

அன்று பி. ப. 2.00 இற்கு விலை மனுக் கோரல் முடிவுறுவதுடன் உடனடியாகவே அவை திறக்கப்படும். விலைமனுப்படிவங்கள் பின்வரும் முகவரியில் அமைந்துள்ள அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் வழங்கல் பிரிவில் வார வேலை நாட்களில் மு. ப. 9.00 முதல் பி. ப. 3.00 வரை வழங்கப்படும். மீளளிக்கப்படாத 5000.00 ரூபாவிற்கான கட்டணமொன்றுடன் விலைமனுப்படிவமொன்றை மேற்படி விலைமனு மூடப்படும் திகதிக்கு முன்னைய தினத்தன்று பி. ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன்னர் நேரில் சமுகமளித்துப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

இதற்காக விலைமனு முன்னோடிக் கூட்டம் (Pre Bid Meeting) 2021.04.22 அன்று மு. ப. 10.30 இற்கு திணைக்களக் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

மேலதிக விபரங்களை வேலை நாட்களில் மு. ப. 8.30 முதல் பி. ப. 4.15 வரை எனது அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**கங்கானி லியனகே,**
**தலைவர், பெறுகைக்குழு,**
**அரசாங்க அச்சுத் திணைக்களம்.**
**இல. 118, டாக்டர் டனிஸ்டர்,**
**டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு -08.**
**தொலைபேசி- தொலைநகல்: 011-2694898**

**இணையம்: www.documents.gov.lk**

## தேசிய கல்வி நிறுவனம்

### மஹரகம

## கேள்வி அழைப்பு

தேசிய கல்வி நிறுவனத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் இலங்கையின் தகைமை வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து தேசிய கல்வி நிறுவனத்தின் ஐந்து மாடிக் கட்டிடத்திலுள்ள கேட்போர் கூடத்திற்கான கேட்போர்கூட கதிரைகளை வழங்கி நிறுவுவதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

| | கேள்வி கோப்பிலக்கம் | அம்சங்கள் | மீளளிக்கப் படாத கேள்வி ஆவணத்தின் பெறுமதி | கேள்விப் பிணை முறி (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | NIE/LP/2020/73 | கேட்போர்கூட கதிரைகளை வழங்கி நிறுவுதல் | ரூபா 1,500.00 | ரூபா 77,500.00 |

கேள்வி ஆவணங்களுக்காக (Tender Document) மீளளிக்கப்படாத வைப்பை 607628 எனும் பணிப்பாளர் நாயகத்தின் கணக்கிலக்கத்திற்குச் (இலங்கை வங்கி, மஹரகம) செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பிப்பதன் பேரில் பெறுகை உத்தியோகத்தரிடமிருந்து வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை கேள்வி ஆவணங்கள் மற்றும் ஏனைய அனைத்து விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் படிவங்கள் வழங்கப்படுதல் 2021-04-22ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முடிவுறுத்தப்படும்.

இதற்கு இயைபான கேள்வி முன்னோடிக் கூட்டம் 2021-04-22ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம், நிதி மற்றும் உதவிச் சேவைகள்) அலுவலகத்தில் இடம்பெறும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை முத்திரை பொறித்து 2021-05-04ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பெறுகைக் குழு, தேசிய கல்வி நிறுவனம், மஹரகம எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம், நிதி மற்றும் உதவிச் சேவைகள்) அவர்களின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் இயைபுடைய கேள்வி கோப்பிலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும். 2021-05-04ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு கேள்விப் படிவங்கள் திறக்கப்படும்.

இந்த பெறுகைச் செயற்பாடுகள் தொடர்பிலான இறுதித் தீர்மானமே தேசிய கல்வி நிறுவகப் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமாகும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 0117601797, 0117601799 எனும் தொலைபேசியின் ஊடாகத் தொடர்புகொள்ளவும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**தேசிய கல்வி நிறுவனம்,**
**மஹரகம.**
2021-04-12.

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

பலாதொட்டை எஸ்டேட் மெத மாவத்தை களுத்துறை தெற்கு இல் வசித்தவரும் தற்பொழுது 12 Sienna Court Roxburgh Park victoria 3064, Australia இல் வசிப்பவருமான **கமனி ஓஸாகா கருணாதிலக** (தே.அ.அ. இல. 655970185V) ஆகிய நான்,

களுத்துறை பிரசித்த நொத்தாரிசு திருமதி **அஜிதா C சமரசேகர** என்பவரினால் 19.01.2018இல் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 3633 என்ற இலக்கமுடையதும்,

இலங்கை, களுத்துறை தெற்கு ட அல்விஸ் பிளேஸ் இல. 9/1 இல் வசிக்கும் **பமிதவிஜய சமந்த கருணாதிலக** (தே.அ.அ. இல. 640961090V) என்பவருக்கு வழங்கப்பட்டதுமான அற்றோணி தத்துவமானது இன்று முதல் செயல்வலுப் பெறும் வகையில் இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதென இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசிற்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

## 1964 இலக்கம் 28 காணி கையகப்படுத்தல் திருத்தங்கள் சட்டத்தின் அடிப்படையில் காணி கையகப்படுத்தல் சட்டம் 7(1)ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பின்வரும் அட்டவணையில் விபரிக்கப் பட்டுள்ள காணியை அபிவிருத்திக்காக அரசு கையகப்படுத்த விரும்புகின்றது. மேலும் விபரங்களுக்கு 2220/31 இலக்க 2021 மார்ச் 23ஆம் திகதியிடப்பட்ட இலங்கை குடியரசின் வர்த்தமானியின் 3ம் பக்கத்தைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| மாவட்டம் | : | குருநாகல் |
| பிரசே செயலகம் | : | பொல்கஹவெல |
| கிராமம் | : | வலகம்முல்ல |
| காணியின் பெயர் | : | வேகும்புரேஹேன மற்றும் பாரந்தரஹேன |
| வரைபு இலக்கம் | : | F. 2483 |
| காணித்துண்டு இலக்கம் | : | 1 மற்றும் 2 |
| மொத்த அளவு | : | 0.1044 ஹெக்டேர் |

**பிரதேச செயலாளர்/**
**காணி கையகப்படுத்தும் அதிகாரி**
**பிரதேச செயலாளர் பிரிவு**
**பொல்கஹவெல.**

## வாகனங்கள் விற்பனைக்கு

| வாகன இல. | வகை | மாதிரி | வருடம் |
|---|---|---|---|
| **கார்** | | | |
| KH -2XXX | TOYOTA | VIOS 1.5E A | 2003 |
| KW -2XXX | TOYOTA | PRIUS ALPHA ZVW41W | 2011 |
| CAE -0XXX | SUZUKI | CELERIO VXT | 2014 |
| CAO -9XXX | TATA | NANO TWIST | 2015 |
| **கெப்** | | | |
| PI -1XXX | TOYOTA | HILUX KUN126R | 2017 |
| **வேன்** | | | |
| 053 -2XXX | TOYOTA | HIACE LH61V | 1988 |
| **லொறி** | | | |
| 042 -7XXX | TATA | 1210SE | 1991 |
| 068 -6XXX | TOYOTA | LY61 | 1993 |
| **முச்சக்கர வண்டிகள்** | | | |
| JT -0XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2004 |
| HK -5XXX | BAJAJ | AUTO RE 2 STROCE | 2003 |
| QC -4XXX | BAJAJ | 4ST | 2005 |
| QE -4XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QN -2XXX | BAJAJ | AUTO AR 4S | 2007 |
| QJ -8XXX | BAJAJ | AUTO AR4S | 2007 |
| QQ -8XXX | BAJAJ | AUTO AR4S | 2008 |
| QT -6XXX | BAJAJ | BAJAJ 4 S | 2009 |
| QZ -0XXX | BAJAJ | AR4S-UG | 2010 |
| YQ -4XXX | PIAGGIO | APE | 2011 |
| AAJ -6XXX | BAJAJ | RE205 | 2012 |
| YX -5XXX | BAJAJ | RE205 | 2012 |
| AAR -8XXX | BAJAJ | RE | 2014 |
| **துவிச்சக்கர வண்டிகள்** | | | |
| BIK -5XXX | HERO | MAESRTO EDGE | 2019 |

வாகன பரிசீலித்தல்களுக்கு:
**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**
வாகன முற்றம் - இல.176, வாவி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112088505

**வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்**

மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 2021 ஏப்ரல் 12ஆம், 15ஆம், 16ஆம், மற்றும் 19ஆம் திகதிகளில் மு.ப.9.00 முதல் பி.ப.5.00 வரை பரிசீலிக்க முடியும். (கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2021 ஏப்ரல் 19ஆம் திகதி பி.ப.5.00 மணியுடன் நிறைவுபெறும்)

மீளப் பெற முடியாத கட்டணமான ரூ.200/-ஐ செலுத்தி கேள்வி படிவங்களை மேற்குறித்த விலாசத்தில் மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ வாகன முற்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். வெற்றிகரமான கேள்விதாரர் தொலைபேசியூடாக அறிவிக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்பான வாகனம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். கேள்வியிலிருந்து எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு வாகனத்தையும் விலக்கிக் கொள்ள கம்பனிக்கு பூரண உரிமையுண்டு. அத்தோடு வெற்றிகரமான கேள்விதாரர் வாகனத்தை அதன் தற்போதைய நிலையிலேயே பொறுப்பேற்க வேண்டியதோடு, அதனுடன் தொடர்பான அரச வரி மற்றும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் போன்றவற்றின் நிலுவைக் கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் கேள்விதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

இக் கேள்விகள் தொடர்பான மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ இன் முடிவுகளே இறுதியானதாகும்.

மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சி


Mercantile Investments and Finance PLC

தலைமை அலுவலகம்
236, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பேசி: 2343720 - 7 நீட்சி: 210

தொடர்பு:
ஜானக்க - 0711624559 / மொதித - 071 9530350

www.skillsads.com

# சிறு விளம்பரம்



வேலைவாய்ப்பு

காணி/தோட்டம்



319

வெற்றிடங்கள்
வீட்டு வேலையாளர்கள்

மலை நாட்டிலிருந்து (மலையகம்) வீட்டுப் பணிப்பெண்கள், பெண் உதவி யாளர்கள் தேவை. வயது 17 முதல் 45 வரை. நல்ல சம்பளம், தங்கியிருந்து வேலை. நிபந்தனைகள். அனுபவம் தேவையில்லை தொடர்பு. 75/1, W. A. சில்வா மாவத்த, வெள்ளவத்த. அழையுங்கள். 011 2591169, 0755091379, 011 2555410 027993

616

வீடு சொத்து
கொழும்பு மாவட்டம்
விற்பனைக்கு

வெள்ளவத்தையில் காணி விற்பனைக்கு. இலக்கம் 145/3, காலி வீதி வெள்ளவத்தையில் இலங்கை வங்கிக்கு அருகாமையில் 5.57 பர்ச் அளவிலான சமதரைக் காணி விற்பனைக்கு உண்டு. 20 அடி அகலமான நுழைவுப் பாதையும் சிக்கலற்ற உறுதியும் கொண்டது. வீடு மற்றும் அனைத்து வித கட்டிடங்களுக்கும் மிகவும் பொருத்தமான இடம். மேலதிக தொடர்புகளுக்கு A.Ameer Ali. 0777 63 63 49. 027783



325

தொழில்துறை
பொது

பார்மசி விற்பனை உதவியாளர் ஆண்/ பெண் அனுபவத்துடன் நீர்கொழும்பு. பிரதேசத்திலிருந்து நல்ல சம்பளம் மேலதிக கொடுப்பனவு. 0717508485 027781

**Repeat Your ad For Better Offers**






## இலங்கை புகையிரத சேவைகள்

# பெறுகை அறிவித்தல்

## இலங்கை புகையிரத சேவைக்கு hydraulic breaker உடன் ஒரு crawler Excavator மற்றும் ஒரு 9000kg GVW 120hp Dump Truck இன் வழங்கலுக்கான பெறுகை

01. hydraulic breaker உடன் ஒரு crawler Excavator மற்றும் ஒரு 9000kg GVW 120hp Dump Truck இனை கொள்வனவு செய்வதற்காக உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்களிடம் இருந்து இலங்கை, கொழும்பு 10, ஓல்கொட் மாவத்தை, இலங்கை புகையிரத சேவைகள், திணைக்கள பெறுகைக் குழு (சிரேஷ்ட), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்கப்படும்.

02. விலைமனுக்கள் ஏற்பது 2021.05.05 அன்று பி.ப. 2.00க்கு (இலங்கை நேரம்) முடிவுறும்.

03. 8000.00 ரூபா மாத்திரமான மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம் ஒன்றை செலுத்தி 2021.05.04 அன்று பி.ப. 3.00 வரை (இலங்கை நேரம்) இலங்கை, கொழும்பு 10, ஓல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியங்களின் கண்காணிப்பாளரின் அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியுமான படிவங்களில் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

04. இலங்கை, கொழும்பு 10, ஓல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியங்களின் கண்காணிப்பாளரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் ஏற்கும் நேரம் முடிவுற்ற உடன் அவை திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் கோரப்படுகின்றனர்.

05. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது கைகளால் கொண்டு வந்து சேர்த்தல் வேண்டும்:

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (சிரேஷ்ட),**
**இலங்கை புகையிரத சேவைகள்,**
**புகையிரத களஞ்சியங்களின் கண்காணிப்பாளரின் அலுவலகம்,**
**த. பெட்டி 1347,**
**ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10.**
**இலங்கை.**

06. இலங்கை, கொழும்பு 10, ஓல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியங்களின் கண்காணிப்பாளரின் அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களை கட்டணம் இன்றி இலவசமாக பரீட்சிக்கலாம் என்பதோடு மேலதிக விபரங்களுக்கு பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்:

**புகையிரத களஞ்சியங்களில் கண்காணிப்பாளர்,**
**புகையிரத களஞ்சியங்கள் திணைக்களம்,**
**ஓல்கொட் மாவத்தை,**
**கொழும்பு 10, இலங்கை.**

**தொலைபேசி இல.: 94(11) 2438078 அல்லது 94(11) 2436818**
**தொலைநகல் இல.: 94(11) 2432044**
**மின்னஞ்சல்**: srs.slr@gmail.com
**இணையதளம்**: www.railway.gov.lk

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (சிரேஷ்ட),**
**இலங்கை புகையிரத சேவைகள்.**

ref. No.: SRS/F.7724

# கேள்வி கோரல் அறிவித்தல்

## கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டைசார்ந்த கைத்தொழில் இராஜாங்க அமைச்சு

## கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் திணைக்களத்திற்குத் தேவையான கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை கொள்வனவு செய்வதன் பொருட்டு பொருத்தமான மற்றும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள கேள்விதாரர்களிடம் இருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**1. கொள்வனவுகள்**

| விடய இல | விடயம் | விலை மனு பாதுகாப்பு தொகை (ரூபா) | விலைமனு மீளப் பெற முடியாத கட்டணம் (ரூபா) | விலைமனு வழங்கும் காலம் | விலைமனு திறக்கும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| 1.1 | இரசாயனங்கள், பயன்படுத்தத் தக்கவை மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | 250,000.00 | ஒரு ஆவணத்திற்கு ரூபா 2,500/- | 2021.04.12 முதல் 2021.04.30 வரை | 2021.05.03 மு.ப.11.00 |
| 1.2. | கால்வாய் தடுப்பூசி உற்பத்தி கருத்திட்டத்திற்கான- AVL Polgolla Automatic Bioreactor 20L & 200L கொள்வனவு | 700,000.00 | | | |
| 1.3 | Triple/ Tandem Quadrupole LC/MS/MS system கொள்வனவு | 270,000.00 | | | |
| 1.4 | Autoclave (125L, 15L Capacity) Hot Air Oven with Drying Cabinet and Mixing vessel கொள்வனவு | 80,000.00 | | | |

01. கேள்விப் பத்திரங்கள் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் நிதிப் பணிப்பாளர் பணிமனையில் இருந்து அலுவலக நேரத்தில் (மு.ப 9.00 முதல் பி.ப 3.00 மணி வரை) பெற்றுக் கொள்ளலாம். கேள்விதாரர் கேள்விப் பத்திரங்களை உள்ளிட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் விடயத்தின் பெயரை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

02. பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை முடிவுத் திகதி மற்றும் நேரத்திற்கு முன்னர் இத்திணைக்களத்தின் பணிப்பாளர் (நிதி) பணிமனையில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் இடலாம் அல்லது பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கலாம்.

03. மேலதிக தகவலுக்காக கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் இணையதளத்தை பார்வையிடவும். (www.daph.gov.lk)

**பணிப்பாளர் நாயகம்/ தலைவர் (தி.பொ.கொ.கு)**
**கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்**
**இலக்கம் 1020, த.பெ.இலக்கம் 13, கெட்டம்பே,**
**பேராதனை.**

**தொலைபேசி இல :**
**081-2388197/ 081-2385227**
**081-2385701/ 081-2388120**
**நீடிப்பு 290/291**

# தேசிய கல்விக் கொள்கைச் சட்டகம் 2020-2030 இனை உருவாக்க முன்மொழிவுகளிற்கான அழைப்பு

**தேசிய கல்வி ஆணைக்குழுவானது, 1991 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் தாபிக்கப்பட்டுள்ளது. இதன் பிரதான தொழிற்பாடுகள் பின்வருமாறு :**

I. கல்விக் கொள்கையின் தொடர்ச்சியை உறுதிப்படுத்தி, சமூகத்தில் மாற்றமடைகின்ற தேவைகளுக்கு பதிலளிக்கும் கல்வி முறைமையை ஏற்படுத்தும் நோக்கில் தேசிய கல்விக் கொள்கையின் அனைத்து விடயங்களிலும் பரிந்துரைகளை மேற்கொள்ளுதல்.

II. செயற்பாட்டிலிருக்கின்ற தேசிய கல்விக் கொள்கை மற்றும் திட்டங்களை காலாந்தர அடிப்படையில் மீளாய்தல், பகுத்தாராய்தல் மற்றும் தேவையானவிடத்து அத்தகைய கொள்கை மற்றும் திட்டங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு பரிந்துரைத்தல்.

III. சனாதிபதியினால் இதன் ஆலோசனைக்காக அனுப்பப்படக்கூடியவாறான கல்வியுடன் தொடர்புபடுகின்ற பிற ஏதேனும் விடயங்கள் பற்றி சனாதிபதிக்கு ஆலோசனை வழங்குதல்.

தேசிய கல்வி ஆணைக்குழுவானது, 1991 ஆம் ஆண்டிலிருந்து இந்த பொறுப்பாணையைப் பொறுபேற்றுள்ளதுடன், முக்கிய துணைக் கல்விப் பிரிவுகளான, குழந்தைப் பருவக் கல்வி, பொதுக் கல்வி, உயர் கல்வியும் தொழில்நுட்பமும் மற்றும் வாழ்க்கைத் தொழில் கல்வி என்பவை பற்றி காலாந்தர இடைவெளியில் கல்விக் கொள்கை முன்மொழிவுகளை வகுத்தமைத்துள்ளதுடன், சனாதிபதிக்கு சமர்ப்பித்துமுள்ளது. அத்துடன், கல்வி தொடர்பான பல விடயங்களில் சனாதிபதிக்கு பல விதப்புரைகளையும் செய்துள்ளது.

தேசிய கல்வி ஆணைக்குழுவானது, தற்போதைய மற்றும் எதிர்காலத் தேவைகளை வழங்குவதற்காக கல்வித் துறையை மறுசீரமைப்பதற்கான கொள்கைகள் மற்றும் தந்திரோபாய செயற்பாட்டினை உருவாக்கும் நோக்கில் தேசிய கல்வி கொள்கை வரைபு - 2020-2030 இனை வகுத்தமைப்பதற்கு ஆரம்பித்துள்ளது.

தேசிய கல்வி ஆணைக்குழுவானது, தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற கொள்கை வகுத்தமைத்தல் செயல்முறையில் பொது மக்கள், நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளிடமிருந்து தேசிய கல்வி ஆணைக்குழுவின் கவனத்திற்கு முன்மொழிவுகளை வரவேற்கின்றது. எழுத்து மூலமான சமர்ப்பிப்புகளானவை, முன்பள்ளிக் கல்வி, பொதுக் கல்வி, உயர் கல்வி, தொழில்நுட்பமும் வாழ்க்கைத்தொழில் கல்வியும், பிரிவெனா, விசேட கல்வி, முறைசாரா கல்வி மற்றும் சர்வதேச தனியார் பாடசாலைகள் ஆகிய எட்டு துணைக் கல்வித் துறைகளுக்காக, பின்வருகின்ற 12 பிரதான விடயப் பரப்புகளான, i) அணுகுதல், சம பங்கு மற்றும் உள்ளடங்கிய தன்மை, ii) பாடவிதான வடிவமைப்பு, பொருளடக்கம் மற்றும் கற்கைப் பெறுபேறுகள், iii) கற்பித்தல் - கற்கை செயல்முறை மற்றும் மதிப்பீடுகள், iv) கற்கின்ற சுழல் மற்றும் கற்பவர்களின் சேமநலன், v) தர நிர்ணயம் மற்றும் தர உத்தரவாதம், vi) அறிவினை ஊட்டுதல், தொழில்நுட்ப மாற்றல் மற்றும் கலையையும், கலாசாரத்தையும் வளர்த்தல், vii) ஆளுமை விருத்தி, viii) தேச பக்தியையும், குடியுரிமை உணர்வினையும் மேம்படுத்துதல், ix) நிதி பற்றிய கல்வி, x) மனித வளங்களின் தரம், xi) பௌதீக வளங்களின் தரம், மற்றும் xii) ஒழுங்குவிதிகள், ஆளுகை மற்றும் வினைத்திறன் ஆகியவற்றின் கீழ், கோரப்படுகின்றன.

எழுத்து மூலமான சமர்ப்பிப்புகள் பின்வரும் மாதிரிகளில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் : துணைப் பிரிவு, தற்போதைய சூழ்நிலையும், பிரச்சினைகளும் / இடைவெளிகளும் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட கொள்கைகளும், தந்திரோபாய செயற்பாடுகளும் அத்துடன் சமர்ப்பிப்புகளின் அளவு 5 ( A4 தாள்) பக்கங்களை விஞ்சுதலாகாது. எழுத்துமூலம் முன்மொழிவுகளை முன்மொழிந்தவர்களை மேலும் விரிவுபடுத்தல் தேவைப்படுமிடத்து வாய்மூலம் சமர்ப்பிப்பதற்கு தேசிய கல்வி ஆணைக்குழு அவர்களை அழைக்கலாம்.

எழுத்து மூலமான சமர்ப்பிப்புகளை மின்னஞ்சல், தொலைநகல் மூலம் அல்லது செயலாளர், தேசிய கல்வி ஆணைக்குழு 126, நாவல வீதி, நுகேகொடை என்று முகவரியிட்டு தபால் மூலம் 2021 ஏப்பிரல் 30 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ அனுப்பலாம். தயவுசெய்து தபாலுறையின் / மேலுறையின் இடது பக்க மேல் மூலையில் "தேசிய கல்விக் கொள்கைச் சட்டகத்திற்கான முன்மொழிவுகள் (2020-2030)" என்று குறிப்பிடவும்.

**மின்னஞ்சல்** : secnec@slt.lk
**தொலைநகல்** : 0112816178
**இணையத்தளம்** : http://www.nec.gov.lk

**தவிசாளர்**
**தேசிய கல்வி ஆணைக்குழு.**

ஏப்பிரல் 12, 2021

## வர்த்தக அமைச்சு

# மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்

## பதவி வெற்றிடம்

மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் கீழ் குறிப்பிடப்படும் பதவிக்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அரச அல்லது பகுதி அரச நிறுவனங்களில் பணியாற்றும் விண்ணப்பதாரிகளாயின் அவர்களை முழு நேர அடிப்படையில் விடுவிக்க முடியுமென பரிந்துரை செய்து குறித்த நிறுவனத் தலைவர் ஊடாக விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

## பணிப்பாளர் (தலைமை நிறைவேற்று அலுவலர்)

**1. கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம் :**

**1.1 வெளிவாரி :**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் முகாமைத்துவம், நிதி, வர்த்தகம், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சம்பந்தமான இளமாணி (முதல்) பட்டமொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் நிதி நிர்வாகத் துறையில் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தது 10 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல் மற்றும் அதில் 05 வருடங்கள் அரசாங்கத் திணைக்களமொன்றில் / கூட்டிணைக்கப்பட்ட சபையொன்றில் / நியதிச் சட்ட சபையொன்றில் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

அல்லது

கணக்கியல், முகாமைத்துவம், நிதி சம்பந்தமான அங்கீகரிக்கப்பட்ட தொழில் நிறுவனமொன்றில் இணை அங்கத்துவத்தை வகித்திருத்தல் மற்றும் அங்கத்துவத்தை வகித்ததன் பின்னர் நிதி நிர்வாகத் துறையில் குறைந்தது 10 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல் மற்றும் அதில் 05 வருடங்கள் அரசாங்க திணைக்களமொன்றில் / கூட்டிணைக்கப்பட்ட சபையொன்றில் / நியதிச் சட்ட சபையொன்றில் முகாமைத்துவ மட்டத்திலான அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**1.2 இரண்டாம் நிலை அடிப்படையில் உள்ளக விண்ணப்பதாரிகளை ஆட்சேர்த்துக்கொள்ளல்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் முகாமைத்துவம், நிதி, வர்த்தகம், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சம்பந்தமான இளமாணி (முதல்) பட்டமொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் பதவிக்குரிய துறையில் முகாமைத்துவப் பிரிவில் தரம் I பதவியொன்றில் குறைந்தது 05 வருட கால திருப்திகரமான சேவைக் காலத்துடனான அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**குறிப்பு:**
உள்ளக விண்ணப்பதாரிகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படும். ஆங்கில மொழி மற்றும் தகவல் தொழில்நுட்பம் சம்பந்தமான சிறந்த அறிவைப் பெற்றிருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

**2. சம்பள அளவுத் திட்டம் :**

**HM 2-3 : &. (98,215 - 12 x 2,700 - 130,615)**

(ஊ.சே.நி) EPF -15%, (ஊ.ந.நி) ETF – 3%, வாழ்க்கைச் செலவுப் படி, வருகைப் படி (ரூ.10,000/-) மற்றும் சுகாதாரக் காப்புறுதி

**ஏனையவை :**

**அனைத்து விண்ணப்பதாரிகளும் :**

- 45 வயதிலும் குறையாதவராகவும் 57 வயதிலும் மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகள் மற்றும் இரண்டாம் நிலை அடிப்படையில் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.
- இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும். பதவிக்குரித்தான கடமைகளை நிறைவேற்றுவதற்குப் பொருத்தமான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டிருக்க வேண்டுமென்பதோடு, நாட்டின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றுவதற்கு முடியுமாக இருத்தல் வேண்டும். நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும். ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகள் சம்பந்தமாக கொண்டிருக்கும் அறிவு மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
- கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் ஊடாக தெரிவு மேற்கொள்ளப்படும்.
- முழுப் பெயர், பிறந்த திகதி, வயது, இனம், கல்வித் தகைமைகள், அனுபவம் மற்றும் குறிப்பிடப்பட வேண்டிய ஏனைய தகவல்கள் உள்ளடங்கிய உறவினர் அல்லாத இருவரின் பெயர்கள் மற்றும் முகவரியுடனான விண்ணப்பங்களை உரிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் செயலாளர், வர்த்தக அமைச்சு, சதொச செயலகக் கட்டிடம், இல. 27, வொக்ஷோல் வீதி, கொழும்பு 02. எனும் முகவரிக்கு 2021.04.25 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பம் அடங்கியுள்ள கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.
- 2021 பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை அறிவித்தலுக்கமைய மேற்குறிப்பிடப்பட்ட பதவிக்காக விண்ணப்பதாரிகளால் அனுப்பப்பட்ட விண்ணப்பங்களும் செல்லுபடியான விண்ணப்பங்களாகக் கருதப்படும்.
- விண்ணப்பங்களை சுருக்கப் பட்டியலிடும் உரிமையை மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியம் கொண்டுள்ளது.
- விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கின்ற மற்றும் பூரணமல்லாத விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்பட மாட்டாது.
- இதற்காக நீங்கள் செலவிட நேரிடும் பிரயாணச் செலவுகள் அல்லது ஏனைய செலவுகள் மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தினால் ஈடு செய்யப்பட (திருப்பிச் செலுத்தப்பட) மாட்டாது.

**செயலாளர்**
**வர்த்தக அமைச்சு, சதொச செயலகக் கட்டிடம்,**
**இல. 27, வொக்ஷோல் வீதி,**
**கொழும்பு 02.**

# பெறுகை அறிவித்தல்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

### தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்

பின்வரும் வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பெறுகைக் குழு அழைக்கின்றது.

| # | விபரங்கள் | ஆகக் குறைந்த ICTAD பதிவு மற்றும் அனுபவம். | விலை மனுப் பிணை முறியின் பெறுமதி (ரூபா) | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) | விலை மனுக்கள் செல்லுபடியாகும் காலம் (நாட்கள்) | விலைமனுக்கள் வழங்கப்படும் இடம் மற்றும் தொடர்பு கொள்ள வேண்டிய நபர் |
|---|---|---|---|---|---|---|
| | **இரத்தினபுரி மாவட்டம்** | | | | | |
| 1 | பலாங்கொட, வட, வெலேபொட CBO வில் 100m³ பெரோ சிமெண்ட் தரைக்கீழ் நீர்த்தாங்கியை நிர்மாணித்தல் DNCWS/PRO/2021/CV/01/RT/01 | C8 அல்லது அதற்கு மேல் | 50000 | 2500 | 91 | விலைமனுக்கள் வழங்கப் படும் இடம் மற்றும் தொடர்பு கொள்ள வேண்டிய நபர்<br><br>பணிப்பாளர் (பெறுகைகள்), தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம், இல. 1114, பன்னிப்பிட்டிய வீதி, தலவத்துகொட<br><br>தொ.பே. 0112774927<br><br>விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் திகதி மற்றும் நேரம்<br><br>2021 மே 04ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு |
| 2 | பலாங்கொட, விக்கியாவத்த, சமனல CBO விற்கு 02 100m³ பெரோ சிமெண்ட் தரைக்கீழ் நீர்த்தாங்கிகள், 01 பம்பி இல்லத்தை நிர்மாணித்தல் DNCWS/PRO/2021/CV/01/RT/02 | C7 அல்லது அதற்கு மேல் | 70000 | 3500 | | |
| 3 | அயகம, அயகம, அயகம CBO வில் 01 100m³ பெரோ சிமெண்ட் தரைக்கீழ் நீர்த்தாங்கி, 6 மீ விட்டம் 8 மீ ஆழமுள்ள கொங்கிறீட் கிணறு, 4.5m x 5m பம்பி இல்லத்தை நிர்மாணித்தல் DNCWS/PRO/2021/CV/01/RT/03 | C7 அல்லது அதற்கு மேல் | 80000 | 3500 | | |
| 4 | எஹலியகொட, ஹிந்துரன்கல, ஹிந்துரன்கல CBO வில் 3மீ x 3மீ பம்பி இல்லம், 6மீ விட்டம் 8 மீ ஆழமுள்ள கிணறை நிர்மாணித்தல் DNCWS/PRO/2021/CV/01/RT/04 | C8 அல்லது அதற்கு மேல் | 45000 | 2500 | | |
| 5 | கிரியெல்ல, முதுன்கொட்டுவ, முதுன்கொட்டுவ CBO வில் 100m³ பெரோ சிமெண்ட் தரைக்கீழ் நீர்த்தாங்கி, 4.5மீ x 5மீ பம்பி இல்லம், 6மீ விட்டம் 8 மீ ஆழமுள்ள கிணறை நிர்மாணித்தல் DNCWS/PRO/2021/CV/01/RT/05 | C7 அல்லது அதற்கு மேல் | 80000 | 3500 | | |
| 6 | எலபாத்த, ஹல்தொல, ஹல்தொல CBO வில் 4.5மீ x 5மீ பம்பி இல்லம், 6மீ விட்டம் 8 மீ ஆழமுள்ள கிணறை நிர்மாணித்தல் DNCWS/PRO/2021/CV/01/RT/06 | C7 அல்லது அதற்கு மேல் | 55000 | 3500 | | |
| 7 | கலவான, ஐதுவன்கொட, ஐதுவன்கொட CBO வில் 100m³ பெரோ சிமெண்ட் தரைக்கீழ் நீர்த்தாங்கி, 4.5மீ x 5மீ பம்பி இல்லம், 6மீ விட்டம் 8 மீ ஆழமுள்ள கிணறை நிர்மாணித்தல் DNCWS/PRO/2021/CV/01/RT/07 | C7 அல்லது அதற்கு மேல் | 80000 | 3500 | | |
| 8 | பெல்மடுல்ல, கப்புஹென்தொட்ட, கப்புஹென்தொட்ட 4.5மீ x 5மீ பம்பி இல்லம், 6மீ விட்டம் 8 மீ ஆழமுள்ள கிணறை நிர்மாணித்தல் DNCWS/PRO/2021/CV/01/RT/08 | C7 அல்லது அதற்கு மேல் | 55000 | 3500 | | |
| 9 | கொடக்கவெல, மாதம்பே தெற்கு CBO வில் 4.5மீ x 5மீ பம்பி இல்லம், 6மீ விட்டம் 8 மீ ஆழமுள்ள கிணறை நிர்மாணித்தல் DNCWS/PRO/2021/CV/01/RT/09 | C7 அல்லது அதற்கு மேல் | 55000 | 3500 | | |
| 10 | கலவான, பொத்துபிட்டிய, பொத்துபிட்டிய CBO வில் 100m³ பெரோ சிமெண்ட் தரைக்கீழ் நீர்த்தாங்கி, 4.5மீ x 5மீ பம்பி இல்லம், 6மீ விட்டம் 8 மீ ஆழமுள்ள கிணறை நிர்மாணித்தல் DNCWS/PRO/2021/CV/01/RT/10 | C7 அல்லது அதற்கு மேல் | 80000 | 3500 | | |
| 11 | மியனதெனிய ஓவிட்டிகம CBO வில் 4.5மீ x 5மீ பம்பி இல்லம், 6மீ விட்டம் 8 மீ ஆழமுள்ள கிணறை நிர்மாணித்தல் DNCWS/PRO/2021/CV/01/RT/11 | C7 அல்லது அதற்கு மேல் | 55000 | 3500 | | |
| 12 | கொடக்கவெல, ஓபாத்த, ஓபாத்தகம ஸ்வர்ண நதீ CBO வில் 4.5மீ x 5மீ பம்பி இல்லம், 6மீ விட்டம் 8 மீ ஆழமுள்ள கிணறை நிர்மாணித்தல் DNCWS/PRO/2021/CV/01/RT/12 | C7 அல்லது அதற்கு மேல் | 55000 | 3500 | | |
| 13 | பலாங்கொட, கோன்கஹமன்கந்த, சாலிய CBO வில் 100m³ பெரோ சிமெண்ட் தரைக்கீழ் நீர்த்தாங்கி, 4.5மீ x 5மீ பம்பி இல்லம், 6மீ விட்டம் 8 மீ ஆழமுள்ள கிணறை நிர்மாணித்தல் DNCWS/PRO/2021/CV/01/RT/13 | C7 அல்லது அதற்கு மேல் | 80000 | 3500 | | |
| | **புத்தளம் மாவட்டம்** | | | | | |
| 14 | மாதம்பே, ரத்மல்அகார, மஹகம தெற்கு CBO வில் 12மீ உயர்த்தப்பட்ட 60m³ கொள்ளளவுள்ள நீர்த்தாங்கியை பொறித்தொகுதி அறை சகிதம் நிர்மாணித்தல் DNCWS/PRO/2021/CV/01/PU/01 | C7 அல்லது அதற்கு மேல் | 80000 | 3500 | | |
| 15 | மாதம்பே, மஹகம தெற்கு, மஹகம தெற்கு CBO வில் 12மீ உயர்த்தப்பட்ட 60m³ கொள்ளளவுள்ள நீர்த்தாங்கியை நிர்மாணித்தல் DNCWS/PRO/2021/CV/01/PU/02 | C7 அல்லது அதற்கு மேல் | 70000 | 3500 | | |
| 16 | மாதம்பே, கல்முருவ-வடக்கு, சக்தி CBO வில் 12மீ உயர்த்தப்பட்ட 60m³ கொள்ளளவுள்ள நீர்த்தாங்கியை பொறித்தொகுதி அறை சகிதம் நிர்மாணித்தல் DNCWS/PRO/2021/CV/01/PU/03 | C7 அல்லது அதற்கு மேல் | 80000 | 3500 | | |
| 17 | மாதம்பே, அத்துவான, எக்கமுத்து CBO வில் 12மீ உயர்த்தப்பட்ட 60m³ கொள்ளளவுள்ள நீர்த்தாங்கியை நிர்மாணித்தல் DNCWS/PRO/2021/CV/01/PU/04 | C7 அல்லது அதற்கு மேல் | 70000 | 3500 | | |
| 18 | மஹவெவ, கலமுன காளிமுல்ல, எக்சத் CBO வில் 12மீ உயர்த்தப்பட்ட 60m³ கொள்ளளவுள்ள நீர்த்தாங்கியை நிர்மாணித்தல் DNCWS/PRO/2021/CV/01/PU/05 | C7 அல்லது அதற்கு மேல் | 80000 | 3500 | | |
| 19 | வணாத்தவில்லு, காட்டுபுளியங்குளம், காட்டுபுளியங்குளம் CBO வில் 12மீ உயர்த்தப்பட்ட 60m³ கொள்ளளவுள்ள நீர்த்தாங்கியை பொறித்தொகுதி அறை சகிதம் நிர்மாணித்தல் DNCWS/PRO/2021/CV/01/PU/06 | C7 அல்லது அதற்கு மேல் | 80000 | 3500 | | |
| 20 | பள்ளம, கொலஎலிய, எக்கமுத்து ஸ்ரம சக்தி CBO வில் 12மீ உயர்த்தப்பட்ட 60m³ கொள்ளளவுள்ள நீர்த்தாங்கியை பொறித்தொகுதி அறை சகிதம் நிர்மாணித்தல் DNCWS/PRO/2021/CV/01/PU/07 | C7 அல்லது அதற்கு மேல் | 80000 | 3500 | | |
| 21 | நாத்தாண்டிய, மானின்கல துன்கன்னாவ, குருகொடெல்ல, புபுது CBO வில் 12மீ உயர்த்தப்பட்ட 60m³ கொள்ளளவுள்ள நீர்த்தாங்கியை நிர்மாணித்தல் DNCWS/PRO/2021/CV/01/PU/08 | C7 அல்லது அதற்கு மேல் | 70000 | 3500 | | |
| 22 | தங்கொட்டுவ, லிஹிரியாகம, புதுல CBO வில் 12மீ உயர்த்தப்பட்ட 60m³ கொள்ளளவுள்ள நீர்த்தாங்கியை நிர்மாணித்தல் DNCWS/PRO/2021/CV/01/PU/09 | C7 அல்லது அதற்கு மேல் | 70000 | 3500 | | |
| 23 | நாத்தாண்டிய, தும்மோதர மேற்கு, சிய சக்தி CBO வில் 12மீ உயர்த்தப்பட்ட 60m³ கொள்ளளவுள்ள நீர்த்தாங்கியை பொறித்தொகுதி அறை சகிதம் நிர்மாணித்தல் DNCWS/PRO/2021/CV/01/PU/10 | C7 அல்லது அதற்கு மேல் | 80000 | 3500 | | |
| 24 | பள்ளம, வெந்தகடுவ, வெந்தகடுவ CBO வில் 12மீ உயர்த்தப்பட்ட 60m³ கொள்ளளவுள்ள நீர்த்தாங்கியை பொறித்தொகுதி அறை சகிதம் நிர்மாணித்தல் DNCWS/PRO/2021/CV/01/PU/11 | C7 அல்லது அதற்கு மேல் | 80000 | 3500 | | |

| # | விபரங்கள் | ஆகக் குறைந்த ICTAD பதிவு மற்றும் அனுபவம். | விலை மனுப் பிணை முறியின் பெறுமதி (ரூபா) | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) | விலை மனுக்கள் செல்லுபடியாகும் காலம் (நாட்கள்) | விலைமனுக்கள் வழங்கப்படும் இடம் மற்றும் தொடர்பு கொள்ள வேண்டிய நபர் |
|---|---|---|---|---|---|---|
| 25 | நாத்தாண்டிய, கொஸ்வத்த தெற்கு, விகாசித்த CBO வில் 12மீ உயர்த்தப்பட்ட 60m³ கொள்ளளவுள்ள நீர்த்தாங்கியைமாணித்தல் DNCWS/PRO/2021/CV/01/PU/12 | C7 அல்லது அதற்கு மேல் | 70000 | 3500 | | |
| 26 | மஹவெவ, யட்டகலான, போகஹாகடுவ CBO வில் 12மீ உயர்த்தப்பட்ட 60m³ கொள்ளளவுள்ள நீர்த்தாங்கியை பொறித்தொகுதி அறை சகிதம் நிர்மாணித்தல் DNCWS/PRO/2021/CV/01/PU/13 | C7 அல்லது அதற்கு மேல் | 80000 | 3500 | | |
| | **குருநாகல்** | | | | | |
| 27 | ரஸ்நாயபுர, ரம்பேவ 285, ரம்பேவ குடிநீர் CBO வில் 3மீ x 3மீ பம்பி இல்லம், 12மீ உயர்த்தப்பட்ட 60m³ கொள்ளளவுள்ள நீர்த்தாங்கி, 60m³ பெரோ சிமெண்ட் தரைக்கீழ் நீர்த்தாங்கியை நிர்மாணித்தல் DNCWS/PRO/2021/CV/01/KN/01 | C7 அல்லது அதற்கு மேல் | 95000 | 3500 | | |
| 28 | பமுனகொட்டுவ, கன்திரியாவ 1230, கன்திரியாய குடிநீர் CBO வில் 3மீ x 3மீ பம்பி இல்லம், கிணறு (6மீ விட்டம் மற்றும் 8மீ உயரம்), 12மீ உயர்த்தப்பட்ட 60m³ கொள்ளளவுள்ள நீர்த்தாங்கி, 60m³ பெரோ சிமெண்ட் தரைக்கீழ் நீர்த்தாங்கியை நிர்மாணித்தல் DNCWS/PRO/2021/CV/01/KN/02 | C6 அல்லது அதற்கு மேல் | 140000 | 5000 | | |
| 29 | கல்கமுவ, உல்பொத்தகம, உல்பொத்தகம CBO வில் 3மீ x 3மீ பம்பி இல்லம், 12மீ உயர்த்தப்பட்ட 40m³ கொள்ளளவுள்ள நீர்த்தாங்கி, 40m³ பெரோ சிமெண்ட் தரைக்கீழ் நீர்த்தாங்கியை நிர்மாணித்தல் DNCWS/PRO/2021/CV/01/KN/03 | C7 அல்லது அதற்கு மேல் | 85000 | 3500 | | |
| | **யாழ்ப்பாணம் மாவட்டம்** | | | | | |
| 30 | வலிகாமம் மேற்கு, சுழிபுரம் மத்தி, சுழிபுரம் மத்தி நீர்ப் பாவனையாளர் சங்க CBO வில் 12மீ உயர்த்தப்பட்ட 30m³ கொள்ளளவுள்ள நீர்த்தாங்கி, 3மீ x 3மீ பம்பி இல்லம், வகை 1 வால்வு அறையை நிர்மாணித்தல் DNCWS/PRO/2021/CV/01/JF/01 | C7 அல்லது அதற்கு மேல் | 60000 | 3500 | | |
| 31 | வலிகாமம் தென் மேற்கு, மாரிசன்கூடல் J/154, மாரிசன்கூடல் நீர்ப் பாவனையாளர் சங்க CBO வில் 12மீ உயர்த்தப்பட்ட 30m³ கொள்ளளவுள்ள நீர்த்தாங்கி, 3மீ x 3மீ பம்பி இல்லம், வகை 1 வால்வு அறையை நிர்மாணித்தல் DNCWS/PRO/2021/CV/01/JF/02 | C7 அல்லது அதற்கு மேல் | 60000 | 3500 | | |
| 32 | வலிகாமம் கிழக்கு (கோப்பாய்), இருபாலை கிழக்கு, இருபாலை கிழக்கு நீர்ப் பாவனையாளர் சங்க CBO வில் 12மீ உயர்த்தப்பட்ட 30m³ கொள்ளளவுள்ள நீர்த்தாங்கி, 3மீ x 3மீ பம்பி இல்லம், வகை 1 வால்வு அறையை நிர்மாணித்தல் DNCWS/PRO/2021/CV/01/JF/03 | C7 அல்லது அதற்கு மேல் | 60000 | 3500 | | |
| | **முல்லைத்தீவு மாவட்டம்** | | | | | |
| 33 | அலம்பை தெற்கு, MU/47, அலம்பை நீர்ப் பாவனையாளர் சங்க CBO வில் 12மீ உயர்த்தப்பட்ட 60m³ கொள்ளளவுள்ள நீர்த்தாங்கி, 3மீ x 3மீ பம்பி இல்லம், வகை 1 வால்வு அறையை நிர்மாணித்தல் DNCWS/PRO/2021/CV/01/MU/01 | C7 அல்லது அதற்கு மேல் | 80000 | 3500 | | |
| 34 | புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு, குராவில் உடையார்கட்டு நீர்ப் பாவனையாளர் சங்க CBO வில் 12மீ உயர்த்தப்பட்ட 60m³ கொள்ளளவுள்ள நீர்த்தாங்கி, வகை 1 வால்வு அறையை நிர்மாணித்தல் DNCWS/PRO/2021/CV/01/MU/02 | C7 அல்லது அதற்கு மேல் | 70000 | 3500 | | |
| 35 | மாந்தை கிழக்கு, சீரடிகுளம் MU/15, சீரடிகுளம் நீர்ப் பாவனையாளர் சங்க CBO வில் 12மீ உயர்த்தப்பட்ட 60m³ கொள்ளளவுள்ள நீர்த்தாங்கி, 3மீ x 3மீ பம்பி இல்லம், வகை 1 வால்வு அறையை நிர்மாணித்தல் DNCWS/PRO/2021/CV/01/MU/03 | C7 அல்லது அதற்கு மேல் | 80000 | 3500 | | |
| | **வவுனியா மாவட்டம்** | | | | | |
| 36 | வவுனியா, சாமலன்குளம், ஆனந்தபுரம் CBO வில் 12மீ உயர்த்தப்பட்ட 60m³ கொள்ளளவுள்ள நீர்த்தாங்கி, வகை 1 வால்வு அறையை நிர்மாணித்தல் DNCWS/PRO/2021/CV/01/VU/01 | C7 அல்லது அதற்கு மேல் | 80000 | 3500 | | |
| | **மன்னார் மாவட்டம்** | | | | | |
| 37 | நானாட்டான், அச்சன்குளம், சென் ஜோசப் கிராமிய நீர் வழங்கல் சங்க CBO வில் 12மீ உயர்த்தப்பட்ட 60m³ கொள்ளளவுள்ள நீர்த்தாங்கி, வகை 1 வால்வு அறையை நிர்மாணித்தல் DNCWS/PRO/2021/CV/01/Mn/01 | C7 அல்லது அதற்கு மேல் | 70000 | 3500 | | |
| 38 | முசலி, முல்லிகுளம், ஆவே மரியாள் கிராமிய நீர் வழங்கல் சங்க CBO வில் 12மீ உயர்த்தப்பட்ட 60m³ கொள்ளளவுள்ள நீர்த்தாங்கி, வகை 1 வால்வு அறையை நிர்மாணித்தல் DNCWS/PRO/2021/CV/01/ML/02 | C7 அல்லது அதற்கு மேல் | 70000 | 3500 | | |

மேற்படி விடயங்களுக்கான பொது நிபந்தனைகள் மற்றும் அறிவுரைகள்

**அறிவுரைகள்**

1. விண்ணப்பதாரரின் கடிதத் தலைப்பில் தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் விலைமனுக்கள் வழங்கப்படும் மற்றும் தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்திற்கான மீளளிக்கப்படாத வைப்புக்கான வங்கி வைப்புச் பற்றுச்சீட்டு (பணிப்பாளர் நாயகம், தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம், கணக்கிலக்கம்: 0007040440 இலங்கை வங்கி)
2. விலைமனுக்களை 2021 மே 03ஆம் திகதி வரையான சாதாரண வேலை நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தினுள் பெற்றுக்கொள்ளலாம். (தயவு செய்து விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு தொலைபேசியினூடாக முன்னேற்பாடொன்றைச் செய்து கொள்ளவும்)
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை சாதாரண வேலை நாட்களில் விலைமனுக்கள் வழங்கும் இடத்தில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2021 மே 04ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் ஒன்றில் திணைக்களத்தின் 2ஆம் தளத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கூரியர் சேவை மூலம் அனுப்பலாம்.
5. இந்த திணைக்களத்தில் 2021-04-28ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்
6. சகல விலைமனுக்களும் இதே முகவரியில் 2021 மே 04ஆம் திகதி மு.ப. 10.15 மணிக்கு வருகை தந்துள்ள விலைமனுதாரர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். பிந்திய விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.

6\. விலைமனுப் பிணை முறி தலவத்துகொட, இல. 1114, பன்னிப்பிட்டிய வீதி, தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு முகவரியிடப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்திற்கு,**
**இல. 1114, பன்னிப்பிட்டிய வீதி, தலவத்துகொட.**
**2021-04-12.**

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

பலாதொட்டை எஸ்டேட் மெத மாவத்தை களுத்துறை தெற்கு இல் வசித்தவரும் தற்பொழுது 12 Sienna Court Roxburgh Park victoria 3064, Australia இல் வசிப்பவருமான **கமனி ஒஸாகா கருணாதிலக** (தே.அ.அ. இல. 655970185V) ஆகிய நான்,

களுத்துறை பிரசித்த நொத்தாரிசு திருமதி **அஜிதா C சமரசேகர** என்பவரினால் 20.01.2015இல் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 3169 என்ற இலக்கமுடையதும்,

இலங்கை, களுத்துறை தெற்கு டீ அல்விஸ் பிளேஸ் இல. 9/1 இல் வசிக்கும் **பமிதவிஜய சமன்த கருணாதிலக** (தே.அ.அ. இல. 640961090V) என்பவருக்கு வழங்கப்பட்டதுமான அற்றோணி தத்துவமானது இன்று முதல் செயல்வலுப் பெறும் வகையில் இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதென இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசிற்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

## சமாதி தியான மற்றும் யோகாசன நிலையத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

புத்திக பதிரண ஆகிய நான் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் ”சமாதி தியான மற்றும் யோகாசன நிலையத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம் எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்.

(அ) தேரவாத பௌத்த நடைமுறைமையினைத் தழுவிய பௌத்த சம்பிரதாயங்களை மேம்படுத்தல்.

(ஆ) தியானம்/யோகாசனப் பயிற்சிகளை வழங்க தீவு பூராகவும் கிளைகளை ஆரம்பித்தல்.

(இ) சுனாமி / வெள்ள அனர்த்தங்களின்போது உதவிகள் வழங்கள்.

பிறவும்.

**புத்திக பதிரண**
**பாராளுமன்ற உறுப்பினர்**

## சமாதி சமூக அபிவிருத்தி மன்றத்தை கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

புத்திக பதிரண ஆகிய நான் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் “சமாதி சமூக அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்” எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்.

(அ) கல்வி வசதிகள் அற்று வறுமை நிலையில் உள்ள சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான கல்வி நடவடிக்கைகளை மற்றும் முன் பயிற்சி நடவடிக்கைகளை ஒழுங்கு செய்து நடத்துவதுடன் முன்னேற்றமடையச் செய்தலும் பொது மக்கள் இளைஞர் கிராமங்களை ஒருமுகப்படுத்தலும்.

(ஆ) தொழில் முன்னிலைக் கல்வி பயிற்சி விளையாட்டுத்துறை பயிற்சி மற்றும் தலைமைத்துவம் கணனி, ஊடகவியல், தமிழ், ஆங்கிலம் மற்றும் ஏனைய மொழிப் பயிற்சிகளுக்கு ஏற்பாடு செய்தல்.

இ) மக்களின் அறிவு வளர்ச்சிக்கு ஏதுவான விரிவுரைகள், கருத்தரங்குகள், நிறைவேற்று செயற்பாட்டுக்கான வழிகாட்டல்கள் சம்பந்தமாக கண்காட்சி கல்விப் பிரச்சார நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தலும் சூழல் பாதுகாப்பு மற்றும் சமநிலையான அபிவிருத்தியை ஏற்படுத்தலும்.

பிறவும்.

**புத்திக பதிரண**
**பாராளுமன்ற உறுப்பினர்**

## சமாதி சுகாதார சேவைகள், சுற்றாடல், விவசாய, கலாசார, மற்றும் விளையாட்டு நிலையத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

புத்திக பதிரண ஆகிய நான் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் “சமாதி சுகாதார சேவைகள், சுற்றாடல், விவசாய, கலாசார, மற்றும் விளையாட்டு நிலையத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்” எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்.

(அ) பரீட்சைகளுக்கு ஆயத்தம் செய்யும் மாணவர்களுக்கு விரிவுரைகள், கருத்தரங்குகள் மற்றும் கல்விச் சுற்றுலா என்பவற்றை நடத்துவதன் மூலம் உதவுதல்.

(ஆ) மக்களின் அறிவு விருத்தி தொடர்பான கல்விசார் விரிவுரைகள், கருத்தரங்குகள், நிறைவேற்று செயற்பாட்டு வழிகாட்டல்கள் தொடர்புடைய கண்காட்சிகள் மற்றும் கல்வி பிரசார நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தல்.

(இ) நூல்நிலைய வசதிகளை ஏற்படுத்துதலும் அனைத்து விதமான வெகுசன ஊடகத் (தொலைக்காட்சி, வானொலி, இணையம், புதினத்தாள்கள் மற்றும் வெளியீடுகள்) துறை தொடர்பான பயிற்சி நிகழ்ச்சிகளையும் அத்தகைய கூறுகளையும் பேணிவருதல்.

பிறவும்.

**புத்திக பதிரண**
**பாராளுமன்ற உறுப்பினர்**

Best way
to fulfil
your
Future Dreams

Marriage
Proposals

in the

Sunday Observer

## பெயர் மாற்றம்

கொழும்பு -06 ஹவ்லொக் வீதி, 324/6 லெயாட்ஸ் கோபுரம் 16 F/1 இல் தற்போது வசிக்கும் இரத்தினபுரி மாவட்டம், பலங்கொட உதவி அரசாங்க அதிபர் பிரிவு **சிரிகாந்தம் சிரி ராஜாராம்** ஆகிய நான் இன்று முதல் என் பெயரை **சிரிகாந்தம் சிரி ராஜாராம் ராமநாயக்க** என மாற்றிக் கொண்டுள்ளேன் என்பதை பொது மக்களுக்கு இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

## ராயல் செராமிக்ஸ் லங்கா பி.எல்.சி.

**(நிறுவன பதிவு எண் PQ125)**
**எண் 20, ஆர் எ டி மெல் மாவத**
**கொழும்பு 03.**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க நிறுவனச் சட்டத்தின் பிரிவு 127ன் படி நிறுவனத்தின் பங்குப் பதிவு 2021 ஏப்ரல் 20 செவ்வாய்கிழமை முதல் 2021 ஏப்ரல் 22வியாழக்கிழமை வரை (இரண்டு நாட்களும் உள்ளடங்கியது) மூடப்படும் என்று **அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.**

**வாரியத்தின் ஆணைப்படி**
**ராயல் செராமிக்ஸ் லங்கா பி.எல்.சி**
**பி டபிள்யு கோப்பரேட் செக்கிரற்டேரியல் (பீவீடீ) எல்ரிடி**
**செயலாளர்கள்**

## இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்

## கொள்முதல் அறிவித்தல்

**பேருவளை, ஹிக்கடுவ, காலி, குடாவெல்ல, கல்பிட்டிய, கொட்பே (திருக்கோணமலை) மற்றும் திக்கோவிட்ட (வடக்கு) கடற்றொழில் துறைமுகங்களுக்காக புதிய உழவு இயந்திரங்கள் ஏழு (07) இனை விநியோகித்தல் மற்றும் வழங்குதல்**

**CFHC/SD/T/BR/NEW/TRAC/FH/2021/16**

கொழும்பு 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை, இல-15 இல் காணப்படும் இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் தலைவரினால் **2021 மே மாதம் 12** ஆம் திகதி **பி.ப.02.00** மணிக்கு முன்னர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றது.

| இல | ஒப்பந்த இலக்கம் | விபரம் | மனுப்பத்திர தொகை | மனுக் கட்டணம் (ரூ) | இறுதித் திகதி |
|---|---|---|---|---|---|
| 01 | CFHC/SD/T/BR/NEW/TRAC/FH/2021/16 | பேருவளை, ஹிக்கடுவ, காலி, குடாவெல்ல, கல்பிட்டி, கொட்பே (திருக்கோணமலை) மற்றும் திக்கோவிட்ட (வடக்கு) கடற்றொழில் துறைமுகங்களுக்காக புதிய உழவு இயந்திரங்கள் ஏழு (07) இனை விநியோகித்தல் மற்றும் வழங்குதல் | டென்டர் தொகையில் 1% | 1,000/= (மீள் செலுத்தப்படாத) | 2021.05.12 பி.ப.2.00 மணி |

இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **2021.04.12** ஆம் திகதியிலிருந்து **2021.05.11** ஆம் திகதி **மு.ப.09.00** மணி முதல் **பி.ப.3.00** வரையான காலப்பகுதியினுள் மேற்கூறப்பட்ட மீளச்செலுத்தப்படாத கட்டணத்துடன் எழுத்து மூல விண்ணப்பத்தை **முகாமையாளர் (கொள்முதல்), கொழும்பு 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை, இல.15** இல் காணப்படும் இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தில் கையளிப்பதன் மூலம் ஆங்கில மொழியினாலான விண்ணப்பப்படிவத்தினை பெற்றுக்கொள்ள முடியும்.

ஒப்பந்தத்தில் குறிப்பிட்டப்படி முத்திரையிடப்பட்ட மனுப் பிரதிகள் இரண்டுடன் **2021.05.12** ஆம் திகதி **பி.ப.02.00** மணி வரையான காலத்திற்குள் கிடைக்குமாறு **பணிப்பாளர் (கொள்முதல்), இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம், இல-15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை, கொழும்பு 15** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது கொள்முதல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள மனுப்பெட்டியில் இடலாம். **2021.05.12 ஆம் திகதி பி.ப.02.00 மணிக்கு** பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மனு ஏற்றுக்கொள்ளல் முடிவுற்ற உடனேயே ஒவ்வொரு மனுக்களாக திறக்கப்படும்.

மனுக்கள் திறக்கப்படும் வேளையில் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதிக்கு அவ்வேளையில் பிரசன்னமாயிருக்க வேண்டும்.

முழுமையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களை நிராகரிக்கும் உரிமையினை ஆணைக்குழு கொண்டுள்ளது. இது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள **முகாமையாளர் (கொள்முதல்), தொலைப்பேசி இல : 011-2525063** மற்றும் **முகாமை தொழிநுட்ப பொறியியலாளர் தொலைப்பேசி இல : 011-2525064** அவர்களைத் தொடர்புகொள்ளவும்.

**தலைவர்**
**இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்**
**இல- 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை,**
**கொழும்பு 15**

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## தேசிய கல்வி நிறுவகம்

### மஹரகம மற்றும் மீப்பேவில் உள்ள தேசிய கல்வி நிறுவகத்தின் கட்டிடங்களுக்கான பொது பராமரிப்பு பணிகள் – 2021/ 2022

1 ஓர் ஆண்டு காலத்திற்குள் பெறுமதி சேர் வரி (VAT) தவிர்த்து 30 மில்லியன் இலங்கை ரூபாவின் உட்கூரை வரையான மதிப்பிடப்பட்ட செலவு மற்றும் கீழ் விபரிக்கப்பட்டவாறு 2021/ 2022 ஆம் ஆண்டில் மஹரகம மற்றும் மீப்பே மற்றும் அவைகளின் சுற்றுப்பகுதிகளில் உள்ள தேசிய கல்வி நிறுவகத்தின் கட்டிடங்களுக்கான சீரமைப்பு மற்றும் பொது பராமரிப்பு பணிகளுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து தேசிய கல்வி நிறுவனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. இந்த பணிகளில் சிவில், பொறிமுறை மற்றும் மின் வேலைகள் உள்ளடங்கும்.

2. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) நடைமுறையை பின்பற்றி விலைகேட்பு நடத்தப்படும். 04/2016 (ii) இலக்க பொது நிதி சுற்றுநிருபத்தில் விதிக்கப்பட்டவாறு பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை பொருந்தும்.

3. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்காக தகுதியை பெறுவதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் கட்டிட நிர்மாணத்திற்கான தரம் C5 மற்றும் C4 இல் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் (ICTAD என முன்னர் அறியப்பட்ட CIDA) பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

4. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகுதிக்கு தேவையான தகைமைகளில் உள்ளடங்குவது கடந்த மூன்று ஆண்டுகளுக்குள் 10 மில்லியன் இலங்கை ரூபாவுக்கு குறையாத பெறுமதி கொண்ட குறைந்தது ஒரு நிர்மாணத் திட்டத்தில் விலைமனுதாரர்கள் முன்னர் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

5. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மஹரகம, தேசிய கல்வி நிறுவக, பணிப்பாளரிடம் (பொறியியல் சேவைகள்) இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் (தொ. 0117601600) என்பதோடு வேலை நாட்களில் 0900 மணி தொடக்கம் 1500 மணி வரை கீழ் தரப்பட்டுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.

6. தே.க.நி., பணிப்பாளர் நாயகம், 607628 என்ற கணக்கு இலக்கத்திற்கு மேற்கொள்ளப்படும் (தே.க.நி. வளாகங்களில் அமைந்துள்ள இலங்கை வங்கி கிளை) 7,000.00 இலங்கை ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி 2021.04.16 அன்று தொடக்கம் 2021.05.05 அன்று வரை 0900 மணி தொடக்கம் 1500 மணி வரை பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம், இல. 21, ஹைலெவல் வீதி, மஹரகம என்ற முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து (தொ. 0117601600) மஹரகம, தேசிய கல்வி நிறுவக, பணிப்பாளரிடம் (பொறியியல் சேவைகள்) இருந்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம்.

7. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் 2021.05.06 அன்று பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, தேசிய கல்வி நிறுவகம், மஹரகம என்ற முகவரிக்கு சமர்ப்பிக்கலாம். மேல் குறிப்பிடப்பட்ட திகதி மற்றும் நேரத்திற்கு முன்னர் பிரதிப் பணிப்பாளரின் (நிர்வாகம், நிதி மற்றும் உதவிச் சேவைகள்) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியிலும் விலைமனுக்களை இடுவதற்கு முடியும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விலைமனு தலைப்பு மற்றும் ஒப்பந்த இலக்கத்தை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

8. 2021.09.02 ஆம் திகதி வரை விலைமனுக்கள் செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

9. அனைத்து விலைமனுக்களும் 2021.09.30 ஆம் திகதி வரை செல்லுபடியான இலங்கை மத்திய வங்கி மூலம் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து பெறப்பட்ட 450,000.00 இலங்கை ரூபாவின் விலைமனு பிணையை கொண்டதாக இருத்தல் வேண்டும். விலைமனு பிணையானது விலைமனு ஆவணத்தில் தரப்பட்ட வடிவத்தில் மற்றும் “கோரும்போது பெறத்தக்கதான” மற்றும் “நிபந்தனையற்றதாக” இருத்தல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**தேசிய கல்வி நிறுவகம்,**
**இல. 21, ஹைலெவல் வீதி,**
**மஹரகம.**

## பெறுகை அறிவித்தல்

### சீமாட்டி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலை

## சிற்றுண்டிச்சாலையை மற்றும் குரோசரியை நடைமுறைப்படுத்தல் 2021/2022

01. கொழும்பு 08, சீமாட்டி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் பிராந்தியப் பெறுகைக் குழுவின் தலைவராகிய என்னால் இவ் வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலையை மற்றும் குரோசரியை 2021 ஜுன் 01ஆம் திகதி முதல் ஒரு வருட காலத்திற்குக் குத்தகைக்கு விடுவதற்கான 2021 மே மாதம் 06ம் திகதி அன்று மு. ப. 10.00வரை முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. விலைமனு மாதிரிப்படிவங்களை சிறுவர் வைத்தியசாலையின் பிரதான கணக்காளர் அலுவலகத்தில் 2021 மே மாதம் 05ஆம் திகதி பி. ப. 2.00 வரை பெற்றுக் கொள்ளலாம்.

02. விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுத் திறக்கப்படும் வேளையில் சமுகமளிக்கலாம். விலைமனுத் திறத்தல் கொழும்பு -08, சீமாட்டி றிஜவே சிறுவர் வைத்தியசாலையின் பணிப்பாள் ஒன்று கூடல் மண்டபத்தில் அவை திறக்கப்பட்டதும் உடனடியாகவே மேற் கொள்ளப்படும்.

03. மீளளிக்கப்படாத 2000.00 ரூபாவிற்கான தொகையை இவ்வைத்தியசாலையின் கணக்காளர் அலுவலக சிறாப்பருக்குச் செலுத்தி விலைமனு மாதிரிப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

04. விலைமனுக்களைப் பதிவுத் தபாலில் அனுப்புதல் மூலம் அல்லது பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் மூலம் இதில் பங்குபற்றலாம்.

05. விலைமனு தொடர்பான இறுதித் தீர்மானம் வைத்தியசாலையின் பெறுகைக் குழுவிற்கு உரித்தாகும்.

**தலைவர்,**
**பிராந்தியப் பெறுகைக் குழு,**
**சீமாட்டி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலை,**
**கொழும்பு -08.**

## இலங்கை திரிபோஷ நிறுவனம்

## இலங்கை திரிபோஷ நிறுவனத்திற்கு திரிபோஷ உற்பத்திக்குத் தேவையான உள்நாட்டு சோளத்தைக் கொள்வனவு செய்தல்

திரிபோஷ உற்பத்திக்குத் தேவையான உள்நாட்டு சோளத்தை வழங்குநர்களிடமிருந்து மற்றும் விவசாயிகளிடமிருந்து 1 கி.கிராமை 65.00 ரூபா வீதம் வரிகள் சகிதமான விலைக்கு பின்வரும் தரத்துடன் கொள்வனவு செய்வதற்கு இலங்கை திரிபோஷ நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

உள்நாட்டில் பயிர்செய்யப்பட்ட நன்கு உலர்த்தப்பட்ட கழிவுப் பொருட்கள் அற்ற, பழுதடைந்த மற்றும் பூஞ்சணம் அற்ற, பூச்சரிப்புகள் அற்ற சுத்தமான சோளமாகவிருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்ட விலைக்கு மற்றும் தரத்திற்கு சோளத்தை தற்போது வழங்க இயலுமான தரப்பினரிடமிருந்து கீழே தரப்பட்டுள்ள வகையில் விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து 2021-04-29ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன் தலைவர், இலங்கை திரிபோஷ நிறுவனம், த.பெ. இல. 17, கப்புவத்த, ஜா-எல எனும் முகவரிக்கு கொண்டு வந்து ஒப்படைக்கலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘இலங்கை திரிபோஷ நிறுவனத்திற்கு சோளத்தை வழங்குதல்’’ எனக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

நிறுவனம் / கமநல அமைப்பு / உரிமையாளரின் பெயர்:.......................................................

முகவரி:.......................................................

பதிவிலக்கம் அல்லது தேசிய அடையாள அட்டை இலக்கம்:

தொலைபேசி இலக்கம்:.......................................................

வழங்க இயலுமான சோளத்தின் அளவு (ஆகக் குறைந்தது 100 மெ.தொன் அதாவது 100,000 கி.கிராமாகவிருத்தல் வேண்டும்).......................................................

வழங்க இயலுமான காலம்.......................................................

இயைபுடைய தொகையை பரீட்சித்துப் பார்க்கக் கூடிய இடம்:.......................................................

இது தொடர்பிலான மேலதிக விபரங்கள் தேவையாயின் 0112-236588/0112-237418 / 0112-228533 எனும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**இலங்கை திரிபோஷ நிறுவனம்,**
**த.பெ. இல. 17, கப்புவத்த,**
**ஜா-எல.**

## பாணந்துறை பிரதேச சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

பாணந்துறை பிரதேச சபையின் பெறுகைக் குழுத் தலைவரினால் ‘‘பாணந்துறை பிரதேச சபையின் கெசெல்வத்த பொதுச் சந்தையை நவீனமயப்படுத்தல்’’ என்பதற்கு தகுதி வாய்ந்த மற்றும் திறமையான விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. தேசிய போட்டி ரீதியான விலைமனுக் கோரல் நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படும்.
2. இந்தச் செயற்றிட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் வரிகள் சகிதம் 108,390,594.39 ரூபாவும். 04/2016(ii)ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) கட்டிட நிர்மாணம் தொடர்பில் C3 அல்லது C4 பதிவைப் பெற்றுள்ளவர்கள் மட்டுமே விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.
3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமை வாய்ந்த விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்ளடக்கப்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் இயைபுடைய விலைமனு ஆவணங்களின் பிரகாரம் தேவையான தகுதிகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் வாத்துவ, காலி வீதி, பாணந்துறை பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 038-2294567 தொலைநகல்: 038-2294566)
5. மீளளிக்கப்படாத 10,000.00 ரூபா கட்டணத்தை செலுத்தியதன் பின் எழுத்துமூல விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் விலைமனுதாரர்கள் அல்லது அவரது அதிகாரம் வாய்ந்த பிரதிநிதிகள் 2021-04-12ஆம் திகதி முதல் 2021-05-03ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணி வரையான அலுவலக நாட்களில் விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் மட்டுமே மேற்கொள்ளல் வேண்டும்.
6. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட, நகல் பிரதிகள் சகிதமான இயைபுடைய உறையின் இடதுபக்க மேல் மூலையில் செயற்றிட்டத்தின் பெயரைக் குறிப்பிட்டு 2021-05-04ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன் ‘‘தலைவர், பெறுகைக் குழு, பாணந்துறை பிரதேச சபை, காலி வீதி, வாத்துவ’’ எனும் முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
7. சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களுடன் 1,500,000.00 ரூபாவுக்கான விலைக்கோரல் பிணை முறியொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
8. விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அனைத்து உரிமையையும் பாணந்துறை பிரதேச சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**பாணந்துறை பிரதேச சபை,**
**காலி வீதி,**
**வாத்துவ.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## காலநிலை மாற்றத்தினை தாக்குப்பிடிக்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ செயற்றிட்டம்

CRIWMP

### நீர்ப்பாசன அமைச்சு
### (தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல்)

**IFB No.: CRIWMP/NCB/VIS/2021/Packages from 12 to 30**
**Date: 12.04.2021**

**விலைமனு அழைப்பு பின்வருவனவற்றிற்கானது:**

கீழே பட்டியலிடப்பட்டவாறு திருகோணமலை மாவட்டத்தில் கிராம நீர்ப்பாசன முறைமைகளின் புதுப்பித்தல்.

1. காலநிலை மாற்றத்தினை தாக்குப்பிடிக்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ செயற்றிட்ட ஆகுசெலவிற்காக பசுமை காலநிலை நிதியத்திலிருந்து (Green Climate Fund – GCF) ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயற்றிட்டத்தின் (UNDP) தர அங்கீகாரமுள்ள முகவரான்மையுடன் இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது நிதியிடலைப் பெற்றுள்ளது. இந்த நிதியத்தின் பகுதியொன்று கீழே சுட்டிக்காட்டியுள்ள ஒப்பந்தங்களின் கீழான பணக்கொடுப்பனவுகளுக்கு பாவிக்கப்படும். கீழே பட்டியலிடப்பட்ட ஒப்பந்த பொதிகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து காலநிலை மாற்றத்தினை தாக்குப்பிடிக்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ செயற்றிட்ட, செயற்றிட்டப் பணிப்பாளர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.

| பொதி. இல. | பொதியின் விளக்கம் | IFB இல. | பொறியியலாளரின் அண்ணளவான மதிப்பீடு | விலைமனுப் பிணை (ரூபாவில்) | CIDA தரம் |
|---|---|---|---|---|---|
| | **திருகோணமலை மாவட்டம், மொறவெவ பிரதேச செயலாளர் பிரிவு, எத்தாபெந்திவெவ அடுக்கை (Cascade) (01-10)** | | | | |
| 01. | றொட்ட வெவ, இஹல திம்பிரி வெவ கிராம நீர்ப்பாசன முறைமைகளின் புதுப்பித்தல் | CRIWMP/NCB/ETHA/2021/12 | 19.9 மில். | 250,000.00 | சி-6 மற்றும் சி-5 |
| 02. | மிரிஸ் வெவ, உல்பத் வெவ, பெனிகெட்டியாவ அமுண கிராம நீர்ப்பாசன முறைமைகளின் புதுப்பித்தல் | CRIWMP/NCB/ETHA/2021/13 | 20.3 மில். | 250,000.00 | சி-6 மற்றும் சி-5 |
| 03. | இலுப்பைக்குளம், பொடி வெவ, இலுப்பைக் குளம் லொக்கு வெவ, கிரிகல்லேவ மாமகே வெவ கிராம நீர்ப்பாசன முறைமைகளின் புதுப்பித்தல் | CRIWMP/NCB/ETHA/2021/14 | 16.5 மில். | 250,000.00 | சி-6 மற்றும் சி-5 |
| 04. | வெவ் இஹல அமுண, மகுறுபெட்டியாவ வெவ கிராமிய நீர்ப்பாசன முறைமைகளின் புதுப்பித்தல் | CRIWMP/NCB/ETHA/2021/15 | 24.2 மில். | 300,000.00 | சி-6 மற்றும் சி-5 |
| 05. | கதுறு வெவ, குடா எத்தாபெந்தி வெவ கிராமிய நீர்ப்பாசன முறைமைகளின் புதுப்பித்தல் | CRIWMP/NCB/ETHA/2021/16 | 25.4 மில். | 350,000.00 | சி-5 மற்றும் சி-4 |
| 06. | இஹல வெவ, பஹல வெவ, அலுத் வெவ கிராமிய நீர்ப்பாசன முறைமைகள் | CRIWMP/NCB/ETHA/2021/17 | 17.8 மில். | 250,000.00 | சி-6 மற்றும் சி-5 |
| 07. | பஹல திம்பிரி வெவ, மெத வெவ கிராமிய நீர்ப்பாசன முறைமைகளின் புதுப்பித்தல் | CRIWMP/NCB/ETHA/2021/18 | 25 மில். | 300,000.00 | சி-6 மற்றும் சி-5 |
| 08. | இஹல பீலபெந்தி வெவ, உதயரத்னகே அமுண, பீலபெந்தி வெவ அமுண கிராமிய நீர்ப்பாசன முறைமைகளின் புதுப்பித்தல் | CRIWMP/NCB/ETHA/2021/19 | 13.5 மில். | 200,000.00 | சி-6 மற்றும் சி-5 |
| 09. | முத்துபண்டாகே அமுண சந்திரதாசகே அமுண, மெத வெவ அமுண கிராமிய நீர்ப்பாசன முறைமைகளின் புதுப்பித்தல் | CRIWMP/NCB/ETHA/2021/20 | 16.7 மில். | 250,000.00 | சி-6 மற்றும் சி-5. |
| 10. | எத்தாபெந்திவெவ கிராமிய நீர்ப்பாசன முறைமைகளின் புதுப்பித்தல் | CRIWMP/NCB/ETHA/2021/21 | 42 மில். | 600,000.00 | சி-5 மற்றும் சி-4 |
| | **திருகோணமலை மாவட்டம், கோமரங்கடவெல பிரதேச செயலாளர் பிரிவு, கும்புக்வெவ அடுக்கை (Cascade) (11-19)** | | | | |
| 11. | வஹாகந்த வெவ, வெலி வெவ கிராமிய நீர்ப்பாசன முறைமைகளின் புதுப்பித்தல் | CRIWMP/NCB/ETHA/2021/22 | 14.6 மில். | 200,000.00 | சி-6 மற்றும் சி-5 |
| 12. | அச்சிரி வெவ, நிக்கியாகல வெவ கிராமிய நீர்ப்பாசன முறைமைகளின் புதுப்பித்தல். | CRIWMP/NCB/ETHA/2021/23 | 18.3 மில். | 250,000.00 | சி-6 மற்றும் சி-5 |
| 13. | கோமரங்கடவள மஹா வெவ, கிராமிய நீர்ப்பாசன முறைமையை புதுப்பித்தல். | CRIWMP/NCB/ETHA/2021/24 | 15.9 மில். | 200,000.00 | சி-6 மற்றும் சி-5 |
| 14. | அலெக்சாண்டர் வெவ/ கதுறு வெவ, இஹல காலிய வெவ, காலிய வெவ கிராமிய நீர்ப்பாசன முறைமைகளின் புதுப்பித்தல் | CRIWMP/NCB/ETHA/2021/25 | 19 மில். | 250,000.00 | சி-6 மற்றும் சி-5 |
| 15. | குடா வெவ, திரப்பனே வெவ கிராமிய நீர்ப்பாசன முறைமைகளின் புதுப்பித்தல் | CRIWMP/NCB/ETHA/2021/26 | 22.1 மில். | 300,000.00 | சி-6 மற்றும் சி-5 |
| 16. | சாகினி வெவ, திம்பிரி வெவ கிராமிய நீர்ப்பாசன முறைமைகளின் புதுப்பித்தல் | CRIWMP/NCB/ETHA/2021/27 | 15.6 மில். | 200,000.00 | சி-6 மற்றும் சி-5 |
| 17. | ஹெலம்பா வெவ (திரப்பனேற்கு அருகாமையில்) கூங்கொடலயாகம வெவ கிராமிய நீர்ப்பாசன முறைமைகளின் புதுப்பித்தல் | CRIWMP/NCB/ETHA/2021/28 | 13.9 மில். | 200,000.00 | சி-6 மற்றும் சி-5 |
| 18. | கும்புக் வெவ கிராமிய நீர்ப்பாசன முறைமையின் புதுப்பித்தல் | CRIWMP/NCB/ETHA/2021/29 | 34.8 மில். | 450,000.00 | சி-5 மற்றும் சி-4 |
| 19. | இந்திகட்டுவ வெவ, ஹெலம்ப வெவ (குடாவெவவின் US) கிராமிய நீர்ப்பாசன முறைமைகளின் புதுப்பித்தல் | CRIWMP/NCB/ETHA/2021/30 | 14.3 மில். | 200,000.00 | சி-6 மற்றும் சி-5. |

2. குளக்கரை உருவாக்கல், குளத்தின் அடியிலுள்ள வண்டல் மண் அகற்றல் மற்றும் கசிவு மற்றும் மடை கட்டமைப்புக்கள் (பிரதான வேலைகள்) மற்றும் அணைக்கட்டுக்கள் 120 நாட்களுள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

3. விலைமனுக்கள் ஆரம்பத்தில் ஒப்பந்த பொதி-வாரியாக மதிப்பீடு செய்யப்படும். விலைமனுதாரர்கள் எந்தவொன்றிற்கு அல்லது அதிகமான ஒப்பந்த பொதிகளுக்கு விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான தெரிவைக் கொண்டுள்ளார்கள். ஒரு பொதிக்கு மேலாக விலைமனுக்களை சமர்ப்பிக்கும் வேளையில் கீழேயுள்ள ஒன்பதாம் (9) பந்தியில் சுட்டிக்காட்டியவாறு அவர்களின் விருப்புரிமை வரிசையைக் சுட்டிக் காட்டல் வேண்டும். ஒரு ஒபபந்த பொதிக்கு மேலாக விலைமனுக்களை சமர்ப்பிக்கும் வேளையில், மேலே வழங்கப்பட்டவாறு ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கு தனித்தனியான விலைமனுப்பிணையை விலைமனுதாரர் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் ஒவ்வொரு ஒப்பந்த பொதிக்குமான இயந்திராதி, உபகரணங்கள், வள ஒதுக்கீடு ஆகியவற்றை குறிப்பிடும் தகைமை/ தகுதித்தன்மை தகவுத்திறனை பிரத்தியேகமாக அடக்குதல் வேண்டும். இறுதி மதிப்பீட்டு செயற்பாட்டின் வேளையில் செயற்றிட்டத்தின் மிக அதிக பொருளாதார இணைப்பு தொடர்பாக தீர்மானமெடுப்பதற்காக ஒட்டுமொத்தமான அனைத்து போதுமானளவு பதிலிறுக்கக்கூடிய விலைமனு பொதிகள் பரிசீலனை செய்யப்படும். விலைமனுதாரரொருவர் ஒரு பொதிக்கு மேலாக வெற்றிகரமான விலைமனுதாரரென பரிந்துரைக்கப்படின், அவரது முன்னுரிமை வரிசையானது மேலேயுள்ள மிக அதிக பொருளாதார இணைப்பில் அடக்கப்படக்கூடிய சாத்தியமிருப்பின் உரிய பரிசீலனை வழங்கப்படலாம். அவ்வாறான வெற்றிகரமான விலைமனுதாரர்களிடமிருந்து ஏனைய பொதிகளுக்கான விலைமனுக்கள் ஒட்டுமொத்தமான கொள்ளளவின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுவதுடன் மீதியாகவுள்ள தகைமை/ தகுதித்தன்மை தகவுத்திறன்/ வளஒதுக்கீடு மற்றும் ஒப்பந்தம் ஆகியன ஆகக்கூடியது இரு ஒப்பந்த பொதிகளுக்கு மட்டுப்படுத்தப்படும்.

4. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர் விலைமனுக்கோரல் ஆவணங்களை கையேற்பதற்கு முன்னராக, விரும்பின், இலவசமாக பரீட்சித்து மேலதிக தகவலை நீர்ப்பாசன அமைச்சின் CRIWMP, செயற்றிட்டப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் - தொடர்பெண் - 0112672228 மற்றும் மின்னஞ்சல்: tendercriwmp@gmail.com

6. விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரமான தகைமைத் தேவைப்படுத்தல்கள் வழங்கப்பட்டுள்ள அதே வேளையில், சில முக்கியமான தகைமைகள் கீழே வழங்கப்பட்டுள்ளன.

   அ) விலைமனுதாரர் நீர்ப்பாசனம் மற்றும் வடிகாலமைப்பு கால்வாய்கள் துறையில் மேலேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டவாறான CIDA (ICTAD) பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   ஆ) நிர்மாண அனுபவம்: கடந்த பத்து வருடங்களில் நிகரான தன்மையில் ஆகக் குறைந்தது ஒரு ஒப்பந்தத்தை சித்திகரமாக பூர்த்தி செய்த திட்டவட்டமான அனுபவம்.

7. 2021.04.12 ஆம் திகதியிலிருந்து 2021.04.30 ஆம் திகதி வரையும் அலுவலக நேரங்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் ஒவ்வொரு ஆவணத் தொகுதிக்கும் (பொதி) மீளளிக்கப்படாத கட்டணமாக 4,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், CRIWMP செயற்றிட்டப் பணிப்பாளருக்கு ஒப்பந்தக்காரரின் வியாபார தலைப்புக் கடிதத்தில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-10, **T.B.** ஜாயா மாவத்தை, 500 ஆம் இலக்கத்திலுள்ள 12 ஆம் மாடியின் நீர்ப்பாசன அமைச்சின் **CRIWMP** அலுவலகத்திலிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம்.

8. விலைமனுக்கள் அவைகளை திறக்கும் திகதியிலிருந்து 91 நாட்கள் காலப்பகுதிக்கு (விலைமனுப்பிணையின் செல்லுபடியாகும் காலப்பகுதியானது 119 நாட்கள்) செல்லுபடியாகும் தன்மையிலிருப்பதுடன் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறான தொகைக்கு செயற்றிட்டப் பணிப்பாளர், **CRIWMP,** நீர்ப்பாசன அமைச்சு என்ற பெயரில் வழங்கப்பட்ட விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

9. 2021.04.22 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு ஏழாம் (7) பந்தியில் வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும். விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கு சமுகமளிப்பதற்கு முன்னராக விலைமனுதாரர்கள் அவர்களின் சொந்த செலவிலேயே விலைமனுவைத் தயாரிப்பதற்காக வேலைத்தளங்களை பரீட்சித்து தகவலைப் பெற்றுக் கொள்ளுமாறு வளமுள்ள விலைமனுதாரர்கள் ஊக்கப்படுத்துகின்றனர்.

10. விலைமனுதாரரானவர் இரு தனித்தனியான உள்ளக தபாலுறைகளில் விலைமனுவின் 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' ஆகியவற்றை உள்ளடக்கிய பின்னர் அவைகளை முத்திரையிட்டு அவைகளின் மேற்பகுதியில் 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என குறிப்பிட்டு, அதன் பின்னர் அவையிரண்டையும் இன்னொரு தனியான தபாலுறையில் சேர்த்து அதனை முத்திரையிட்டு அத்தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் பொதி இலக்கம் மற்றும் ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என தெளிவாக குறிப்பிடல் வேண்டும். ஒரு ஒப்பந்த பொதிக்கு மேலதிகமாக விலைமனுக்களை சமர்ப்பிக்கும் வேளையில் விலைமனுதாரரானவர் அவ்வாறான ஒவ்வொரு பொதிக்கும் அதே முறைமையில் இரு தபாலுறைகளை தயாரித்து, முத்திரையிட்டு அவையிரண்டையும் தனியொரு தபாலுறையில் சேர்த்து முத்திரையிட்டு, அவ்வாறான தனியொரு தபாலுறைகள் அனைத்தையும் **"MASTER ENVELOPE"** ஒன்றில் உள்ளடக்கம் செய்யப்படல் வேண்டும். ஒப்பந்தக்காரரினால் உரிய முறையில் கையொப்பமிட்ட ''சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து பொதிகளுக்குமான முன்னுரிமை பட்டியல் முறைமையானதும்'' **"MASTER ENVELOPE"** இல் அடக்கப்படல் வேண்டும்.

11. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் 2021.05.03 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் செயற்றிட்ட பணிப்பாளரின் அலுவலகத்தையடையும் வகையில் செயற்றிட்ட பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படுவதுடன் பெற்றுக் கொள்ளப்பட்ட விலைமனுக்கள் மூடும் நேரம் முடிந்தவுடன் 7 ஆம் பந்தியில் வழங்கப்பட்டுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் உடனடியாகவே திறக்கப்படும்.

12. தள விஜயங்கள் தொடர்பான ஆகுசெலவுகள் மற்றும் செலவினங்கள் அடங்கலாக விலைமனுக்களை தயாரித்தல் மற்றும் ஒப்படைத்தல் தொடர்பாக விலைமனுதாரருக்கேற்படும் எந்தவொரு ஆகுசெலவுகள் அல்லது செலவினங்களுக்கு தொழில் வழங்குநர் பொறுப்பேற்க மாட்டார்.

**தலைவரின் சார்பாக,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**செயற்றிட்ட பணிப்பாளர்,**
**காலநிலை தாக்கக்குறைவு ஒருங்கிணைக்கப்பட்ட நீர் முகாமைத்துவ செயற்றிட்டம்,**
**நீர்ப்பாசன அமைச்சு, 12 ஆம் மாடி, 500, T.B. ஜாயா மாவத்தை,**
**கொழும்பு-10.**



### மத்திய மாகாண சபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## நுண் நீர் வழங்கல் முறைமை மற்றும் பரசூட் வட்டுக்களை கொள்வனவு செய்தல்

**நெல் மற்றும் தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழ வகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாட்டு, விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீடு**

### *மத்திய மாகாண விவசாய திணைக்களம்*

மத்திய மாகாண தலைமைச் செயலாளர் பெறுகைக் குழுவின் தலைவர் மூலம், மத்திய மாகாண விவசாயத் திணைக்களத்தின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற கீழ் குறிப்பிடப்பட்ட திட்டத்திற்காக தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு திறன் மற்றும் தகுதி கொண்ட அதற்காக ஆர்வம் காட்டுகின்ற வழங்குநர்களிடம் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன. விலைமனுக் கோரல் தேசிய போட்டிரீதியான விலைக்கேட்பு நடைமுறையின் கீழ் மேற்கொள்ளப்படும்.

விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்காக மத்திய மாகாண விவசாயத் திணைக்களத்தின் நிதி உதவியாளர் இடம் இருந்து கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத விலைமனு வைப்பை செய்து பெற்றுக்கொள்கின்ற பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு, மீளளிக்கப்படுகின்ற விலைமனு வைப்புக்காக அந்த அட்டவணையில் தரப்பட்டுள்ள பெறுமதிக்கு, இலங்கை மத்திய வங்கி மூலம் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து பெற்றுக்கொண்ட 2021.08.04 ஆம் திகதி வரை செல்லுபடியான விலைமனு பிணை ஒன்றின் மூலம் அல்லது அட்டவணையில் தரப்பட்டுள்ள பெறுமதிக்கு ரொக்கப்பணமாக மாகாண விவசாயத் திணைக்களத்தின் நிதி உதவியாளரிடம் வைப்புச் செய்தல் வேண்டும். அதன்படி விலைமனுதாரர் மூலம் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படுகின்ற உபகரணங்களுக்காக வெவ்வேறாக விலைமனு ஆவணங்கள் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு, விலைமனு ஆவணங்கள் 2021.04.15 ஆம் திகதி தொடக்கம் 2021.05.05 ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரையான காலத்தில் இலக்கம் 64, சரசவி மாவத்தை, பேராதனையில் அமைந்துள்ள மத்திய மாகாண விவசாய திணைக்களத்தின் நிதி உதவியாளரிடம் இலவசமாக பரீட்சிப்பதற்கும் பெற்றுக்கொள்வதற்கும் முடியும். உபகரணத்தை வழங்குவதற்கு குறித்த அனைத்து விபரங்களும் விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| வரிசை இலக்கம் | திட்டம் | தேவையான அளவு | மீளளிக்கப்படும் விலைமனு பிணைத் தொகை ரூபா: வங்கிப் பிணை ரூபா | மீளளிக்கப்படும் விலைமனு பிணைத் தொகை ரூபா: பணமாக வைப்புச் செய்தல் ரூபா | மீளளிக்கப்படாத விலைமனு கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|---|
| 01 | ¼ ஏக்கர் நுண் நீர் வழங்கல் முறைமையை கொள்வனவு செய்தல் | 540 | 2,593,500.00 | 1,296,750.00 | 35,000.00 |
| | ½ ஏக்கர் நுண் நீர் வழங்கல் முறைமையை கொள்வனவு செய்தல | 157 | | | |
| 02 | பரசூட் வட்டுக்கள் கொள்வனவு செய்தல் | 225118 | 95,000.00 | 47,500.00 | 3,000.00 |

முந்திய பெறுகைக் குழுக் கூட்டம் 2021.04.28 ஆம் திகதி இலக்கம் 64, சரசவி மாவத்தை, பேராதனையில் அமைந்துள்ள மத்திய மாகாண விவசாய திணைக்களத்தில் நடைபெறும். நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை செலுத்தி பெற்றுக்கொள்கின்ற விலைமனு ஆவணங்களில் மாத்திரம் விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு, முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்கள் 2021.05.06 ஆம் திகதி பி.ப. 2.00 க்கு அல்லது அதற்கு முன்னர் இலக்கம் 64, சரசவி மாவத்தை, பேராதனையில் அமைந்துள்ள மத்திய மாகாண விவசாய திணைக்களத்திடம் பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுதல் வேண்டும். தாமதித்து கிடைக்கின்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படுவதோடு, விலைமனுக்கள் மூடப்பட்ட உடன் இலக்கம் 64, சரசவி மாவத்தை, பேராதனையில் அமைந்துள்ள மத்திய மாகாண விவசாயத் திணைக்களத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும். அந்த சந்தர்ப்பத்திற்கு உங்களுக்கு அல்லது உங்களது அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு பங்கேற்க முடியும்.

விலைமனுக்கள் இரு பிரதிகளாக தயாரித்து மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியை வெவ்வேறாக உறைகளில் இட்டு மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என பெயரிட்டு முத்திரை இட்டு ஒரு உறையில் மீண்டும் இட்டு அனுப்புதல் வேண்டும். அந்த கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''நுண் நீர் வழங்கல் முறைமை கொள்வனவு செய்தல்'' அல்லது ''பரசூட் வட்டுக்கள் கொள்வனவு செய்தல்'' என்று தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் தொ.பே. 081 – 2384153 – மாகாண விவசாய திணைக்கத்தின் நிதி உதவியாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர்**
**தலைமைச் செயலாளர் பெறுகைக் குழு**
**மத்திய மாகாண தலைமைச் செயலாளர் அலுவலகம்**
**மாகாண சபை வளாகம், பல்லேகலை, குண்டசாலை.**
2021.04.12

# விலைமனுக்களுக்கான அழைப்பு

### நீர்ப்பாசன அமைச்சு

## தல்பிட்டிகல நீர்தேக்க செயற்றிட்டம்

## கந்தகெட்டிய நீர்ப்பாசன வதிவிடத்திலுள்ள செயற்றிட்ட முகாமையாளரின் அலுவலகத்திற்கான புதுப்பித்தல்கள்

### Bid No.: PD/TRP/Infra/06/2018

1. பதுளை மாவட்டத்தின் கந்தகெட்டிய பிரதேச செயலாளரின் பிரதேசத்திலுள்ள கந்தகெட்டிய நீர் வதிவிடத்திலுள்ள செயற்றிட்ட முகாமையாளரின் அலுவலகத்திற்கான புதுப்பித்தல்களுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து நீர்ப்பாசன அமைச்சின் செயலாளரின் சார்பாக, செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். நிர்மாணக் காலமானது 3 மாதங்களாகும்.

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, வெற்றிகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் பின்வரும் தேவைப்பாட்டை பூர்த்தி செய்பவராகவுமிருத்தல் வேண்டும்.

   CIDA பதிவுத் தரம் - சி-5 அல்லது சி-6.

4. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகைமைத் தேவைப்பாடுகள் பின்வருமாறு: விலைமனுக்கோரல் ஆவணங்களில் மேலதிக விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கந்தகெட்டிய, நீர்ப்பாசன திணைக்களம், செயற்றிட்ட பொறியியலாளர், தல்பிட்டிகல நீர்த்தேக்க செயற்றிட்ட, செயற்றிட்ட பணிப்பாளரிடமிருந்து பெற்று – தொலைபேசி / தொலைநகல் இல.: 055-2245625, மின்னஞ்சல்: **pdthalpitigala@gmail.com** – வார நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

6. 2021.04.12 ஆம் திகதியிலிருந்து 2021.05.03 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 7,500 ரூபாவைச் செலுத்திய பின்னர், கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். ஒவ்வொரு தொகுதிக்கும் பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

7. 2021.05.04 ஆம் திகதியன்று பி.ப. 1 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக வந்தடையும் வகையில் கீழேயுள்ள முகவரிக்கு விலைமனுக்கள் இரு பிரதிகளில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2021.05.04 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு கீழேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்பட்டு விரைவாகவே திறக்கப்படும்.

8. விலைமனுக்கள் 91 நாட்கள் வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

9. 2021.04.22 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு கந்தகெட்டிய, நீர்ப்பாசன திணைக்களம், தல்பிட்டிகல நீர்த்தேக்க செயற்றிட்டத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.

10. அனைத்து விலைமனுக்களும் 225,000 ரூபா பெறுமதியான 'விலைமனுப்பிணையொன்றுடன்' இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் 2021.08.11 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

11. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "Improvements to the Project Manager's Office in Kandaketiya Irrigation Camp" and Bid No.: PD/TRP/Infra/06/2018 என குறிக்கப்படல் வேண்டும்.

மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:

**செயற்றிட்ட பணிப்பாளர்,**
**தல்பிட்டிகல நீர்த்தேக்க செயற்றிட்டம்,**
**நீர்ப்பாசன திணைக்களம்,**
**கந்தகெட்டிய.**

கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் கருத்திட்ட இராஜாங்க அமைச்சு

## தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்

# பெறுகை ஆவணம் ஏற்கப்படும் இறுதித் திகதி நீடிப்பு

2021.03.29 ஆம் திகதி வெளியான பெறுகை அறிவித்தலின் பெறுகை ஆவணங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதி 2021.04.27 மு.ப. 10.00 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேலும் 2021.04.21 ஆம் திகதி மு.ப. 10.00க்கு விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு (Pre bid meeting) தொடர்பிலான பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெறும் எப்பதையும் அறியத்தருகிறோம்.

ஏனைய நிபந்தனைகள் மற்றும் விதிகள் மாற்றமின்றி தொடரும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்,**
**இல. 1114, பன்னிப்பிட்டிய வீதி,**
**தலவத்துகொட.**

### இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

### வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையம்

**இரண்டாம் வருட முதலாம் பருவ கலைமாணி வெளிவாரிப் பட்டப்படிப்பு பரீட்சைகள் - 2014/2015**

தென்கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையத்தினால் நடாத்தப்படுகின்ற (2014/2015ஆம் கல்வியாண்டு) கலைமாணி (புதிய பாடத்திட்ட வெளிவாரிப் பட்டப்படிப்பு) இரண்டாம் வருட முதலாம் பருவ பரீட்சைகள் எதிர்வரும் 17.04.2021 ஆம் திகதி முதல் நடைபெறவிருக்கின்றன. இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதுவரை பரீட்சை அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் 067-2052801 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

**பதிவாளர்**
**இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்**
**12.04.2021**

# பெறுகை அறிவித்தல்

வலு அமைச்சு

## இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்

**Disposal of Dispensing Pumps, Air Compressors, Hibouys, used tyres & Rims, Batteries, Floating Hoses, Scrap Iron etc. …….**

**B/30/2021**

சப்புகஸ்கந்த, Ex-Nylon 6 premises at RDD திறந்த வெளியிலுள்ள பின்வரும் பொருட்களின் அகற்றல் தொடர்பாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகைக் குழுவின் தலைவரினால் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன.

Lot A : 127 Nos. Dispensing Pumps
32 Nos. Air Compressors
29 Nos. Hibouys
Lot B : 256 Nos. used tyres & 12 Nos. vehicle rims.
Lot C : 123 Nos. Non-Hybrid Batteries & 18 Nos. UPS Batteries
Lot D : 07 Nos. Hybrid Car Batteries
Lot E : Floating Hoses (includes hoses, chains, wire rope iron scraps, etc.) received from offshore SPBM facility.
Lot F : Scrap Iron.

கொழும்பு-09, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்தின் 01 ஆம் மாடியிலுள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து 2021.05.04 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமான 500 ரூபாவை (அதாவது ரூ.462.96 **+ 8%** பெசேவ) இபெகூ இற்கு செலுத்திய பின்னர், விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.


2021.05.05 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு விலைமனுக்கள் மூடப்பட்டு, அதன் பின்னர் உடனடியாகவே பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும்.

Lot A இலிருந்து Lot F வரையுமான அகற்றப்பட வேண்டிய பொருட்களின் பட்டியல் தற்போது Ex Nylon 06 Premises, சப்புகஸ்கந்த மற்றும் இபெகூ தலைமை அலுவலகத்திலும் வைக்கப்பட்டுள்ளதென்பதுடன் இப்பொருட்களின் பரீட்சித்தலாக 2021.05.04 ஆம் திகதி வரையும் பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளருடன் சந்திப்பு முன்னேற்பாட்டுடன் ஒழுங்குகளை மேற்கொள்ளலாம்.

5455331 என்ற தொலைபேசி இலக்கம் அல்லது 5455424 என்ற தொலைநகல் இலக்கத்தினூடாக பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரிடமிருந்து தெளிவுறுத்தல்கள் ஏதுமிருப்பின் அவற்றை பெற்றுக் கொள்ளலாம்.

கோவிட்-19 தொற்று காரணமாக, விலைமனுதாரர்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தை www.ceypetco.gov.lk என்ற இபெகூ இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாமென்பதுடன் அனைத்து பணக்கொடுப்பனவுகளும் மக்கள் வங்கியின் தலைமை அலுவலகத்திலுள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் 004100110208633 என்ற கணக்கிலக்கத்திற்கு செலுத்தப்படலாம். விலைமனுவுடன் வங்கி பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை தயவு செய்து சமர்ப்பிக்கவும்.

**தலைவர்,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**01 ஆம் மாடி, இல.: 609, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09.**




இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சின் கீழ் நடத்தப்படும்

# தேசிய இளைஞர் படையணியின்

## கழிக்கப்பட்ட வாகனங்களை விற்பனை செய்வதற்காக விலைமனுக்கள் கோரல் – இலக்கம் – 03

## வாகனங்கள் பற்றிய விபரங்கள் மற்றும் நிபந்தனைகள்

1. தேசிய இளைஞர் படையணிக்குச் சொந்தமான யக்கல பயிற்சி நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கீழ்க்காணும் வாகனங்களை விற்பனை செய்வதற்காக பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | வாகன இலக்கம் | வகை | மொடல் | உற்பத்தி ஆண்டு | மீளளிக்கப்படும் பிணை வைப்புத் தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|
| 1 | 53-4583 | மிட்சுபிஷி | L200 | 1992 | 15,000.00 |
| 2 | 18-1895 | நிசான் | BBAB13-SUNNY | 1992 | 4,000.00 |
| 3 | 18-1896 | நிசான் | BBAB13-SUNNY | 1992 | 4,600.00 |

2. 2021.04.12 முதல் 2021.05.10 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை வாரத்தின் வேலை நாட்களில் யக்கல தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையத்தில் வாகனங்களை பரீட்சிக்கலாம்.

3. மேலே குறிப்பிடப்பட்ட 2021.04.12 முதல் 2021.05.10 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை மீளளிக்கப்படாத ரூ. 1000/- தொகையை இளைஞர் படையணி தலைமையகத்தின் கணக்குப் பிரிவு காசாளரிடம் செலுத்தி, பெற்றுக்கொண்ட கழிக்கப்பட்ட வாகனங்களின் கொள்வனவிற்காக விண்ணப்பத்தின் மூலம் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள், விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் முடிவடையும் திகதியான 2021.05.11ம் திகதி மு.ப. 11.00 இற்கு முன்பு கிடைக்குமாறு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (சிறிய), தேசிய இளைஞர் படையணி தலைமையகம், இல. 420, பௌத்தாலோக்க மாவத்த, கொழும்பு 07 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து தேசிய இளைஞர் படையணி பிரதான கேட்போர் கூடத்திற்கு அருகில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

5. 2021.05.11 மு.ப. 11.00 இற்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைவதுடன் அதன் பின்னர் விலைமனுக்கள் மூடப்பட்டவுடன் அவ்வேளையிலேயே விலைமனுக்கள் திறக்கப்படும்.

6. இது பற்றிய மேலதிக விபரங்களை - மேலதிகப் பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் நிதி) - 0112688885/ 0112690294 இடம் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (சிறிய)**
**தேசிய இளைஞர் படையணி தலைமையகம்**
**இல. 420, பௌத்தாலோக்க மாவத்த,**
**கொழும்பு - 07.**
**2021.04.12**

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

### வர்த்தக அமைச்சு

# 2021 ஆம் ஆண்டிற்காக சந்தையில் உள்ள விலையைவிடவும் மிகக் குறைந்த விலைக்கு அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களை வழங்குவதற்காக விருப்பு கோரல்

வர்த்தக அமைச்சின் வழிகாட்டலின் கீழ், லங்கா சதொச லிமிடட் நிறுவனம், இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனம், Q Shop மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் கீழுள்ள விற்பனையக வலையமைப்புகளுக்காக நியாயமான, போட்டிரீதியான நிலையான விலை ஒன்றுக்கு 2021 ஆம் ஆண்டின் மே மாதம் தொடக்கம் ஜூலை மாதம் வரை 03 மாதங்கள் முழுவதற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் உடன் பணத்திற்கு (07 நாட்களுக்கு செலுத்துதலை மேற்கொள்ளல்) வழங்க முடியுமான நேரடி இறக்குமதியாளர்கள் மற்றும் உள்நாட்டு உற்பத்தியாளர்களிடம் இருந்து விருப்பை வெளியிடுவதற்காக முன்மொழிவுகள் இங்கு கோரப்படுகின்றன.

- **5 கிலோ அரிசிப் பொதி (பச்சை அரிசி, நாடு, சம்பா)**
- **கோழி இறைச்சி**
- **கோதுமை மா**
- **பால்மா**
- **சீனி**
- **பாசிப் பயறு**
- **சிவப்பு பருப்பு**
- **கவுபி**
- **பெரிய வெங்காயம்**
- **உளுந்து**
- **உருளைக்கிழங்கு**
- **பிஸ்கட்**
- **கொண்டைக்கடலை**
- **தேங்காய் எண்ணெய்**
- **காய்ந்த மிளகாய்**
- **சவர்க்காரம்**
- **டின் மீன்**
- **சோயா**
- **நெத்தலி கருவாடு**
- **நூடில்ஸ்**

விருப்பு முன்மொழிவை வெளிப்படுத்துகின்ற விண்ணப்பதாரர்கள் மூலம் கீழ் குறிப்பிடப்பட்ட விபரங்களை உள்ளடக்கிய சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவம் ஒன்றை 2021.04.22 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் வாரத்தின் வேலை நாட்களில் கொழும்பு 02, வொக்ஷோல் வீதி, சதொச பொதுச் செயலாளர் அலுவலக கட்டிடத்தின் 05 ஆவது மாடியில் மேலதிகச் செயலாளர் (கட்டுப்பாடு) இடம் பதிவுத் தபாலில் அல்லது மு.ப. 9.00 – பி.ப. 4.00 வரை கைகளால் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "2021 ஆம் ஆண்டிற்காக சந்தையில் உள்ள விலையைவிடவும் மிகக் குறைந்த விலைக்கு அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களை 06 மாதங்கள் முழுவதும் வழங்குவதற்காக விருப்புக் கோரல் (பொருள் வகைகள்)" என்று தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

i. விண்ணப்பதாரரின் பெயர்/ நிறுவன பெயர்
ii. முகவரி
iii. தொலைபேசி இலக்கம்/ தொலைநகல் இலக்கம்
iv. மின்னஞ்சல் முகவரி
v. நேரடி இறக்குமதியாளர்கள், உள்நாட்டு உற்பத்தியாளர்கள் என்ற விபரத்தை (உறுதி செய்கின்ற ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும்)
vi. விருப்பை முன்வைக்கின்ற உருப்படி வகை/ வகைகள் உட்பட்ட முன்மொழிவு.

குறித்த திகதிக்கு கிடைக்கின்ற முன்மொழிவுகள் 2021.04.23 ஆம் திகதி பி.ப. 3.00க்கு சதொச பொதுச் செயலாளர் அலுவலக கட்டிடத்தின் 9 ஆவது மாடியில் திறக்கப்படுவதோடு அதற்காக விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு பங்கேற்க முடியும். முன்மொழிவுகளை ஏற்கும்/ நிராகரிக்கும் உரிமை வர்த்தக அமைச்சு செயலாளர் வசமானது.

**மேலதிக விபரங்களுக்கு – உதவிச் செயலாளர் (கட்டுப்பாடு) 0112304078/ 0762566047**
**செயலாளர்**
**வர்த்தக அமைச்சு – 05ஆவது மாடி**
**இலக்கம் 27, சதொச பொதுச் செயலாளர் அலுவலகக் கட்டிடம்**
**வொக்ஷோல் வீதி,**
**கொழும்பு 02**
**திகதி – 2021.04.12**

The Housewives' companion
Classifieds on
Daily News

# நிர்மாண செயற்றிட்டம் பற்றிய மீண்டும் கேள்வி கோரல்

## மாவட்ட செயலகம் – கேகாலை

01. 2021.02.08ம் திகதிய தினமின, டெயிலிநியூஸ் மற்றும் தினகரன் ஆகிய பத்திரிகை அறிவித்தலின் மூலம் கீழ்க்காணும் செயற்றிட்டங்களுடன் சம்பந்தப்பட்ட சமர்ப்பித்துள்ள சகல கேள்விகளும் இரத்துச் செய்யப்பட்டு மீண்டும் விலைமனுக் கோருவதற்கு கேகாலை மாவட்ட செயலகத்தின் பெறுகைக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02. அதனடிப்படையில், பெறுகைக் குழுவினால் கீழேயுள்ள நிர்மாணங்களுக்காக CIDA பதிவுடன் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் 2021.05.03 பி.ப. 4.00 வரை ஏற்கப்படும்.

| வேலை விபரம் | மதிப்பிடப்பட்ட வேலைப் பெறுமதி (ரூ. மி.) | வேலை பூர்த்தி செய்யும் காலம் (மாதங்கள்) | CIDA தரம் (2021ம் ஆண்டிற்கு செல்லுபடியாதல் வேண்டும்) | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்கப் படாத) | கேள்விப் பிணைமுறி (மீளளிக்கப் படாதது) |
|---|---|---|---|---|---|
| தரணியகல பிரதேச செயலகக் கட்டிடம் நிர்மாணம் Vஆம் கட்டம் | 25.05 | 07 மாதம் | C5 மற்றும் C4 | ரூ. 2,000.00 | ரூ. 260,000.00 |

03. I. கேள்விதாரர் தகைமையுள்ள, அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாது இருப்பதுடன் 2021ஆம் ஆண்டிற்காக CIDA பதிவு செல்லுபடியாதல் உறுதி செய்வதறக்கா ஆவணங்களை இணைத்து அனுப்புதல் வேண்டும். VAT பதிவு பெற்றிருப்பின் செயற்பாடுள்ள VAT வரி செலுத்துபவராக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் கடிதத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

II. கேள்விதாரர் கடந்த 05 வருட காலத்திற்குள் அரச, உள்ளூராட்சி அல்லது அரச சார்பு நிறுவனமொன்றில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள செயற்றிட்டத்திற்கு சமமான பெறுமதியுடன் அல்லது அதற்கு மேல் ஒரு நிர்மாணமாவது பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். (இதற்காக குறித்த சாட்சிகள் சமர்ப்பித்தல் வேண்டும்)

III. கேள்விகள் மதிப்பிடப்படும் போது அரச நிதி சுற்றுநிருப இலக்கம் 04/2016(III) இன்படி பிரதேச ஒப்பந்தக்காரர்களுக்கு 5% முன்னுரிமை வழங்கப்படும். (Regional Preference)

04. மதிப்பிடப்பட்ட பெறுமதியில் 1/5 அல்லது அதற்கு மேற்பட்ட கடன் வசதிகள் தமது நிறுவனத்திற்கு பெற்றுக்கொள்ள முடியும் என்பதை இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்துள்ள அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட கடிதமொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

05. மாவட்ட செயலகத்தின் காசாளரிடம் மீளளிக்கப்படாது ரூ. 2000.00 தொகை செலுத்தி 2021.04.15 முதல் 2021.04.30 வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை ஆங்கில மொழியிலான அச்சிடப்பட்ட குறித்த மாதிரிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்களை மாவட்ட செயலக அலுவலகத்தின் பிரதான கணக்காளரிடம் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே. 035-2223112)

06. கேள்விகள் கேள்வி ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினம் முதல் கலண்டர் தினங்கள் 91 வரை செல்லுபடியாதல் வேண்டும்.

07. சகல கேள்விதாரர்களும் தமது கேள்விப் பிணையை அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து நிபந்தனையற்ற வங்கி பிணையொன்றின் மூலம் அல்லது இவ் அலுவலகத்தின் காசாளரிடம் மேற்கொள்ளப்படும் நிதி வைப்பொன்றின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப் பிணையானது 2021.09.06 வரை செல்லுபடியாதல் வேண்டும். செல்லுபடியாகும் கேள்விப் பிணையொன்றை இணைத்திராத எந்தக் கேள்வியும் நிராகரிக்கப்படும்.

08. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த செயற்றிட்டத்தின் பெயரைக் குறிப்பிட்டு பொறியிடப்பட்ட கேள்விகள் மூலப்பிரதி/ நகல் பிரதியென வேறுவேறு உறைகளில் இட்டு 2021.05.03 பி.ப. 4.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது மாவட்ட செயலகத்தில் பிரதம கணக்காளர் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கொண்டுவந்து உள்ளிடலாம். அந்த நேரத்தின் பின் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும் அன்றே பி.ப. 4.15 இற்கு கேள்விகள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அதிகாரம் உள்ள பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.

09. பொருத்தமான கேள்விதாரர்களைத் தேர்ந்தெடுத்தல் பற்றிய முழுமையான உரிமை திணைக்கள பெறுகைக் குழுவிற்கு உரியதுடன் அதற்காக எந்த விதத்திலும் வற்புறுத்தல் தேர்ந்தெடுப்பதற்கான தகுதியற்றமையாகக் கொள்ளப்படும். இக்கேள்வி கோரல் அறிவித்தல் மற்றும் கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அதுபற்றிய தீர்மானம் எடுக்கும் முழுமையான உரிமை கேகாலை மாவட்ட செயலாளருக்கு உரியதுடன், பொருத்தமான ஒப்பந்தக்காரர் ஒருவரைத் தெரிவு செய்தல் கேள்வி ஒன்றை அல்லது சகல கேள்விகளையும் இரத்துச் செய்தல் பற்றிய இறுதித் தீர்மானம் மாவட்ட பெறுகைக் குழுவிற்கு உரியது.

**மஹிந்த எஸ். வீரசூரிய**
**மாவட்ட செயலாளர்/ அரச அதிபர்**
**பெறுகைக் குழுவின் தலைவர்**
**மாவட்ட செயலகம், கேகாலை.**
**2021.04.12**

# பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயம் கொழும்பு டி.ஸ் சேனாநாயக்க கல்லூரிக்கு விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்பு

பாகிஸ்தான் அரசாங்கத்தின் இலங்கை அரசாங்கத்துடனான விளையாட்டுத்துறை சார் இராஜதந்திர உறவின் ஒரு பகுதியாக, கொழும்பில் உள்ள பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசின் உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) முஹம்மது சாத் கட்டாக் கடந்த 9 ம் திகதி டி.எஸ்.சேனாநாயக்க கல்லூரிக்கு விஜயம் செய்து கிரிக்கெட், ரக்பி மற்றும் கால்பந்து விளையாட்டுப் பொருட்களை பரிசளித்தார்.

உயர் ஸ்தானிகரை கல்லூரியின் அதிபர், பெற்றோர் குழுவின் செயலாளர், விளையாட்டு மற்றும் கல்வி அமைச்சின் பிரதிநிதிகள் மற்றும் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் பிரதிநிதிகள் அன்புடன் வரவேற்றனர்.கல்லூரியின் கிழக்கு கலாச்சார நடனக் கலைஞர்களின் வண்ணமயமான வரவேற்பு நிகழ்ச்சியும் இடம் பெற்றது. இந்நிகழ்ச்சியில் பேசிய உயர் ஸ்தானிகர், தனக்கும் அவரது குழுவினருக்கும் அன்பான வரவேற்பு அளித்தமைக்கு அமைப்பாளர்களுக்கு நன்றி தெரிவித்தார். தனது உரையில் "இரு நாடுகளுக்கும் இடையிலான அன்பான நட்பு உறவுகளையும் , பாகிஸ்தானையும் இலங்கையையும் ஒன்றிணைக்கும் ஒரு பொதுவான காரணியாக விளையாட்டு எவ்வாறு இருந்தது என்பதையும் உயர் ஸ்தானிகர் குறிப்பிட்டார். மருத்துவம், பல் மருத்துவம், பொறியியல், சமூக அறிவியல், ஊடகத் துறை, சட்டம் போன்ற பல்வேறு துறைகளில் அனைத்து இன மற்றும் மத இலங்கை மாணவர்களுக்கு பாகிஸ்தான் வழங்கும் முழு நிதியுதவி அளிக்கப்பட அல்லாமா இக்பால் புலமைப்பரிசில் குறித்து கல்லூரி மாணவர்களுக்கும் , நிர்வாகத்திற்கும் அவர் விளக்கமளித்ததோடு இப்புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிக்குமாறும் வேண்டிக் கொண்டார்.

கல்லூரி அதிபர் பிரசன்னா உதுமுஹந்திரம் கருத்துத்தெரிவிக்கையில், விளையாட்டு பொருட்களை பரிசளித்ததற்காக பாகிஸ்தான் அரசாங்கத்திற்கும் பாகிஸ்தான் மக்களுக்கும் நன்றி தெரிவித்ததோடு, இரு நாடுகளுக்கும் இடையிலான வரலாற்று உறவுகள் மற்றும் மிகவும் கடினமான காலங்களில் இருநாடுகளும் அளித்த ஆதரவு குறித்து தெளிவுபடுத்தினார்.பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயத்தின் இந்நன்கொடையை கல்லூரியின் பெற்றோர் குழுவின் செயலாளரும் பாராட்டியமை குறிப்பிடத்தக்கது. விழாவின் முடிவில், உயர் ஸ்தானிகர் கல்லூரியின் தேவாலயம், கோயில் மற்றும் பள்ளிவாயல் ஆகியவைகளை பார்வையிட்டார் . பாகிஸ்தான் அரசாங்கம் மற்றும் மக்களின் முன்னேற்றத்திற்காக கல்லூரி பள்ளிவாயலில் சிறப்பு பிரார்த்தனை ஒன்றும் ஏற்பாடு செய்திருந்தது. உயர் கல்வித் தரங்கள், விளையாட்டு வசதிகள் மற்றும் மத மற்றும் இன நல்லிணக்கத்தைப் பேணுவதற்காக கல்லூரி நிர்வாகத்தை உயர் ஸ்தானிகர் பாராட்டியமை குறிப்பிடத்தக்கது.



# மலையக கரப்பந்தாட்ட வீராங்கனை மாலைதீவு கழகத்திற்கு ஒப்பந்தம்

**பசறை நிருபர்**

பதுளை மாவட்டத்தின் ஹாலிஎல பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட ஸ்பிரிங்வெலி தோட்ட, மேமலை பிரிவில் வசிக்கும் செல்வி. ஜெயராம் திலக்ஸனா என்ற கரப்பந்தாட்ட வீராங்கனை மாலைதீவு கரப்பந்தாட்ட கழகம் ஒன்றில் விளையாடுவதற்காக ஒப்பந்தம் செய்ப்பட்டுள்ளார். கடந்த மாத இறுதியில் காலியில் கெலக்ஸி கோப்பைக்கான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி நடைபெற்றது.

இதில் இலங்கை மகளிர் கரப்பந்தாட்ட தரப்படுத்தலில் உள்ள முதல் 8 அணிகள் பங்குப்பற்றுவது வழமையாகும். தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கரப்பந்தாட்ட அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தி மேமலை தோட்டத்தைச் சேர்ந்த திலக்ஸனா, சிரிசாந்தி ஆகிய வீராங்கனைகள் விளையாடினர். இவர்களில் திலக்ஸனா சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி தொடரில் பிரகாசித்தமையின் காரணமாக மாலைதீவு கரப்பந்தாட்ட விளையாட்டு கழகம் ஒன்றிற்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். வெளிநாட்டு கரப்பந்தாட்ட விளையாட்டு கழகம் ஒன்றில் விளையாட ஒப்பந்தமான முதல் இலங்கை வீராங்கனை என்ற பெருமையையும் இவர் தனதாக்கி கொண்டுள்ளார். இது குறித்து இவ்வீராங்கனையின் பாடசாலை பயிற்சி ஆசிரியரும் தற்போதைய வேவல்ஹின்ன தமிழ் வித்தியாலய உப அதிபருமான என்.சுந்தராஜ் கருத்து தெரிவிக்கையில் மலையகத்தின் புரட்சி லயத்தில் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என்பதற்கு திலக்ஸனா சிறந்த முன்னுதாரணம் இவர் 2012 ஆம் ஆண்டு எனது பயிற்சியின் மேமலை தமிழ் வித்தியாலய கரப்பந்தாட்ட அணிக்கு விளையாடி பல வெற்றிகளுக்கு காரணமானார். இவரது வளர்ச்சி மலையகத்திற்கு முன்னுதாரணமாக இருப்பதையிட்டு பெருமை அடைகின்றேன் என குறிப்பிட்டார். இவ் வீராங்கனை இப்பகுதியில் உள்ள விரியும் சிறகுகள் விளையாட்டு கழகத்தின் அங்கத்தவர் ஆவார்.

3வது முறையாக SLT–MOBITEL அனுசரணையில் வழங்கிய

# 'மஹகஸ்தொட Festival of Speed 2021' நிறைவு

மஹகஸ்தொட, நுவரெலியாவை மையமாகக் கொண்ட 87 வது முறையாக நடாத்தப்பட்ட 'SLTMOBITEL மஹகஸ்தொட Festival of Speed 2021' குன்று ஏறல் ஏப்ரல் 04ம் திகதி வெற்றிகரமாக நிறைவடைந்தது.



இது, SLTMOBITEL இப்போட்டிகளுக்கு தொடர்ச்சியாக அனுசரனை வழங்கிய மூன்றாவது ஆண்டாகும். இம்முறை குன்று ஏறல் ஏப்ரல் 3 ஆம் திகதி ஆரம்பித்ததுடன் அன்று Classice Car Parade அணிவகுப்பை தொடர்ந்து மோட்டார் சைக்கிள் பந்தயமும் இடம்பெற்றது. ஏப்ரல் 4 மோட்டார் கார் பந்தயத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. மொபிடெல் (பிரைவேட்) லிமிடெட் பிரதம நிறைவேற்று அதிகாரி, சந்திக விதாரன இந்நிகழ்ச்சியில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

SLTMOBITEL வர்த்தக நாமதூதுவர் அஷான் சில்வா 31.6 வினாடிகளில் புதிய சாதனை படைத்தது இந்த ஆண்டின் நிகழ்வின் சிறப்பம்சமொன்றாகும்.

கோலூன்றிப் பாய்தலில்

# யாழ். வீரர் புவிதரனுக்கு முதலிடம்

## தேசிய மெய்வல்லுநர் தகுதிகாண் போட்டிகள் நிறைவு

இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த வருடத்தின் முதலாவது தேசிய மெய்வல்லுநர் தகுதிகாண் போட்டிகள் (09) கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நிறைவுக்கு வந்தது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டிகளில் வட மாகாணத்தைச் சேர்ந்த வீரர்கள் மைதான நிகழ்ச்சிகளில் திறமைகளை வெளிப்படுத்தியிருந்ததுடன், ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் மொஹமட் சபானும், ஆண்களுக்கான 5 ஆயிரம் மீற்றரில் மலையகத்தைச் சேர்ந்த விக்னராஜ் வக்ஷனும், ஆண்களுக்கான முப்பாய்ச்சலில் சப்ரின் அஹமட்டும் திறமைகளை வெளிப்படுத்தியிருந்தனர்.

எனவே இன்று நடைபெற்ற போட்டிகளில் வெற்றிகளைப் பதிவுசெய்த தமிழ் பேசுகின்ற வீரர்களின் தொகுப்பை இங்கு பார்க்கலாம்.

புவிதரனுக்கு முதலிடம்

ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் யாழ். சாவகச்சேரி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஏ. புவிதரன் 4.90 மீற்றர் உயரத்தைத் தாவி முதலிடத்தைப் பெற்றுக் கொண்டார்.

சுமார் இரண்டு வருடங்களுக்குப் பிறகு முதல்தடவையாக தேசிய மட்டப் போட்டியொன்றில் பங்குகொண்ட புவிதரன், கோலூன்றிப் பாய்தலில் தனது அதிசிறந்த உயரத்தையும் பதிவுசெய்திருந்தமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

2018 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற தேசிய விளையாட்டு விழாவில் கோலூன்றிப் பாய்தலில் வெள்ளிப் பதக்கங்களை வென்ற இவர், இறுதியாக கடந்த 2019 செப்டம்பர் மாதம் நடைபெற்ற தேசிய கனிஷ்ட மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் போட்டித் தொடரில் தங்கப் பதக்கத்தினை வென்றார்.

அதன்பிறகு நடைபெற்ற அகில இலங்கை பாடசாலைகள் விளையாட்டு விழாவில் 20 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் 4.82 மீற்றர் உயரத்தைத் தாவி புதிய போட்டிச் சாதனையுடன் தங்கப் பதக்கத்தை சுவீகரித்தார்.



கடந்த வருடம் டிசம்பர் மாதம் கொழும்பில் நடைபெற்ற தேசிய மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடருக்காக புவிதரன் தெரிவாகியிருந்த போதிலும், நாட்டில் மீண்டும் தலைதூக்கிய கொரோனா வைரஸ் அச்சறுத்தல் காரணமாக அவரால் கொழும்புக்கு வர முடியாமல் போனது. இதனால் குறித்த போட்டியில் பங்குபற்றுகின்ற வாய்ப்பை தவறவிட்டார்.

சபானுக்கு மற்றுமொரு வெற்றி

இலங்கையின் இளம் குறுந்தூர ஓட்ட வீரர்களில் ஒருவராக வலம்வந்து கொண்டிருக்கின்ற மொஹமட் சபான், ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டார்.

குறித்த போட்டியை 20.81 செக்கன்களில் ஓடிமுடித்த சபான், 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் அதிவேகமான காலத்தைப் பதிவுசெய்த நான்காவது இலங்கை வீரராகவும் இடம்பிடித்தார்.

முன்னதாக, வினோஜ் சுரன்ஜய (20.88 செக்.), சுகத் திலகரட்ன (20.69 செக்.), பிரசன்ன அமரசேகர (20.80 செக்.) ஆகிய மூவரும் 200 மீற்றரில் அதிவேகமான காலங்களைப் பதிவுசெய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

போட்டிகளில் முதல்நாளன்று நடைபெற்ற ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் மொஹமட் சபான் மூன்றாமிடத்தைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

வக்ஷனுக்கு இரண்டாவது வெற்றி

ஆண்களுக்கான 5 ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்குகொண்ட விக்னராஜ் வக்ஷன் இரண்டாவது இடத்தைப் பெற்றுக் கொண்டார். போட்டியை அவர் 14 நிமிடங்கள் 51.59 செக்கன்களில் நிறைவுசெய்தார்.

முன்னதாக, புதன்கிழமை (7) நடைபெற்ற ஆண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியில் அவர் மூன்றாவது இடத்தைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, ஆண்களுக்கான 10 ஆயிரம் மீற்றரில் முதலிடத்தைப் பெற்றுக்கொண்ட குமார் சண்முகேஸ்வரனுக்கு, 5 ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியில் நான்காவது இடத்தையே பெற்றுக்கொள்ள முடிந்தது.

முப்பாய்ச்சலில் சப்ரினுக்கு இரண்டாமிடம்

ஆண்களுக்கான முப்பாய்ச்சலில் இலங்கை இராணுவத்துக்காக விளையாடி வருகின்ற சப்ரின் அஹமட், இம்முறை தேசிய மெய்வல்லுனநர் தகுதிகாண் போட்டியில் இரண்டாவது இடத்தைப் பெற்றுக்கொண்டார். போட்டியில் அவர் 15.87 மீற்றர் தூரத்தைப் பாய்ந்தார்.

இறுதியாக கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற தேசிய மெய்வல்லுனநர் சம்பியன்ஷிப் தொடரில் சப்ரின் அஹமட் நான்காவது இடத்தைப் பெற்று ஏமாற்றம் அடைந்தார்.

ஆனந்தனுக்கு முதல் வெற்றி

கனிஷ்ட பிரிவில் ஆண்களுக்கான ஈட்டி எறிதலில் பங்குகொண்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆனந்தன் கஜன் மூன்றாவது இடத்தைப் பெற்றுக்கொண்டார். போட்டியில் அவர் 57.94 மீற்றர் தூரத்தை எறிந்தார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 19 வயதுக்குட்பட்ட அணிக்காக விளையாடியுள்ள கஜன், தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டியொன்றில் முதல்தடவையாக வெற்றியினைப் பதிவுசெய்தமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.




இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 ஏப்ரல் மாதம் 12ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.